விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 29 வெள்ளிக்கிழமை (15.11.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 331



ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ


## இலங்கை வந்தார் இளவரசர் சாள்ஸ்

பிரித்தானிய முடிக்குரிய இளவரசர் சாள்ஸ் நேற்று மாலை 4.20 அளவில் சிறப்பு விமானம் மூலம் இலங்கை வந்தடைந்தார்.

இளவரசர் சாள்ஸ் அவரது மனைவி கமிலா பாக்கர் ஆகியோருடன் 56 அரச பிரதிநிதிகளும் இலங்கை வந்துள்ளனர்.

1973 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற சகல பொதுநலவாய நாடுகளின் மாநாடும் பிரித்தானிய மகா ராணி இரண்டாவது எலிசபெத்

19-ம் பக்கம் பார்க்க

## இந்தியாவின் முடிவை மதிக்கிறேன்

### மன்மோகனை சந்தித்த கமரூன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறும் பொது நலவாய மாநாட்டில் பங்கேற்பது குறித்து இந்தியா எடுத்துள்ள முடிவை தான் மதிப்பதாக பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் புதுடெல்லியில் நேற்று இந்திய பிரதமர், மன்மோகன் சிங்கைச் சந்தித்தார்.

இந்தியாவிலிருந்து இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ள வரும் இவர், அதற்கு முன்பு கொல்கத்தா செல்கிறார்.

பிரிட்டன் மற்றும் இந்தியாவுக்கு இடையேயான நல்லுறவை மேம்படுத்தும் விதமாக இந்தியாவுக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள டேவிட் கமரூன் நேற்றுமுன்தினம் புதுடெல்லி சென்றடைந்தார்.

பின்னர் நேற்று மன்மோகன் சிங்குடன் நடைபெற்ற சந்திப்பின் போது இரு நாடுகளுக்கிடையான வர்த்தகம், தொடர்புகள், பாதுகாப்பு, சர்வதேச பிரச்சினைகள் மற்றும் தீவிரவாதம் குறித்தும் பேச்சு நடத்தினார்.

பிரதமரை சந்தித்த பிறகு செய்தியாளர்களிடம் பேசிய டேவிட் கமரூன்,

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பது குறித்து இந்தியா எடுத்துள்ள

20-ம் பக்கம் பார்க்க

## வடக்கில் மூன்றாவது நாளாக உண்ணாவிரதப் போராட்டம்

சர்வதேச ரீதியில் பெரும் எதிர்பார்பை ஏற்படுத்தியுள்ள பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூனின் வடக்கு மாகாணத்திற்கான விஜயம் இன்று இடம்பெறவுள்ள அதேவேளை யாழ்ப்பாணத்தில் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி தொடர்ந்து உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெற்று வருகின்றது..

தொடரும் போராட்டங்களுக்கு மத்தியில் யாழ்ப்பாணத்திற்கு இன்று பிற்பகல் வருகை தரவுள்ள பிரிட்டிஷ் பிரதமர், வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை யாழ்.பொது நூலகத்தில் வைத்து சந்தித்து கலந்துரையாட உள்ளார்.

இதேவேளை வலி வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தங்கி வாழ்ந்து வரும் நலன்புரி முகாமிற்கும் செல்லவுள்ளார்.

இவ்வாறான சூழ்நிலையில் யாழ்.வலிகாமம் வடக்கு மக்களினால் முன்னெடுக்கப்பட்டுவரும் உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுடன் மூன்று நாட்களாக தொடர்ந்து இடம்பெற்றதோடு இன்றும் அந்தப் போராட்டம் நடைபெறவுள்ள அதேவேளை யுத்த காலத்தில் காணாமல் போனவர்களின் நிலையை பகிரங்கப்படுத்தக்கோரி நல்லூரில் காணாமல் போனோரின் உறவினர்களினால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது.

20-ம் பக்கம் பார்க்க

# தனி நாட்டுக்கு அனுமதியில்லை

## ஜனாதிபதி திட்டவட்டம்


**இலங்கையைப் பிரித்து தனிநாடு அமைப்பது என்பதை அனுமதிக்கவே முடியாது என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாகக் கூறினார். பொதுநலவாய மாநாட்டையொட்டி கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்களுக்கு பேட்டியளித்த போது இவ்வாறு அவர் தெரிவித்தார்.**

வாழ்வா, சாவா என்ற நிலையில்தான் இலங்கையில் சண்டையை நடத்தியது இராணுவம் என்று கூறிய ராஜபக்ஷ, கடந்த சில ஆண்டுகளாக இலங்கையில் குண்டுவெடிப்பு ஏதும் இல்லை என்றும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளை ஆதரிப்பவர்கள் நேரில் வந்து தமிழர்களின் நிலையை அறியலாம். பொதுநலவாய மாநாட்டில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பங்கேற்பது திருப்தியளிக்கிறது என்றும் ராஜபக்ஷ தெரிவித்தார்.

உலக நாடுகளிடம் இலங்கை அரசு எதையும் மறைக்கவில்லை என்றும், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசின் எல்.எல்.ஆர்.சி குழு விசாரித்தது.

இலங்கையின் நீதித்துறைக்கு சர்வதேச நாடுகள் மதிப்பளிக்க வேண்டும். மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு உறுதியானால் யார் மீதும் நடவடிக்கை எடுக்க தயாராகவுள்ளேன்.



30 ஆண்டுக

20-ம் பக்கம் பார்க்க

## இலங்கைத் தமிழருக்கு இந்தியா துணை நிற்கும்

### இந்திய வெளியுறவுச் செயலர் தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கைத் தமிழர்கள் கண்ணியத்துடனும் கௌரவத்துடனும் வாழ்வதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் இந்தியா வழங்கும் என்று மத்திய அரசு உறுதியளித்துள்ளது. கொழும்பில் தம்மை சந்தித்து பேசிய தமிழ் தேசிய கூட்டணி தலைவர்களிடம் இந்திய வெளியுறவு செயலர் சுஜாதா சிங் இந்த உறுதியை அளித்துள்ளார்.

சுஜாதா சிங்கை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தமிழ் தேசிய கூட்டமைப்புத் தலைவர் ஆர். சம்பந்தன் இலங்கை தமிழர்களின் நல்வாழ்வுக்கு இந்தியா உறுதுணையாக நிற்கும் என்ற உறுதிபாட்டை சுஜாதா சிங் தெரிவித்ததாக கூறினார். இலங்கையின் வடக்கு கிழக்கு தமிழர்கள் கண்ணியத்துடன் சட்டப்படியான உதவிகளை பெற இந்தியா தீவிரமாக செயல்பட்டு வருவதாக சம்பந்தன் தெரிவித்தார். தமிழர்கள் வசிக்கும் வடக்கு பகுதியில் ராணுவம் அகற்றப்படாததும் நில உரிமை போன்றவை மறுக்கப்படுவதும் தங்களுக்கு தொடர்ந்து வேதனை அளிப்பதாக அவர் கூறினார்.

இந்த விவரங்கள் அனைத்

19-ம் பக்கம் பார்க்க

## சனல் 4 ஊடகவியலாளருக்கு எதிராக அரச பின்னணியிலேயே ஆர்ப்பாட்டம்

### வெளிநாட்டு ஊடகங்கள் குற்றச்சாட்டு

பிரித்தானியாவின் சனல்4 தொலைக்காட்சி குழுவினர் பயணம் செய்த ரயில் அனுராதபுரத்தில் நிறுத்தப்பட்ட சம்பவமானது அரசாங்கத்தின் ஆலோசனைக்கு அமைய ஒழுங்கு செய்யப்பட்டது என வெளிநாட்டு ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

சனல் 4 தொலைக்காட்சியிலும் இது தொடர்பாக விசேட செய்தி ஒளிபரப்பாகியது. இதில் தற்பொழுது கொழும்பில் இருக்கும் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக்கின் பேட்டியும் இடம்பெற்றிருந்தது.

பிரித்தானிய செய்தியாளர்கள் அவர்களின் கடமைகளை செய்ய இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டமை தொடர்பில் ஹேக் இந்த பேட்டியில் வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிடம் பேச்சுவார்த்தை நடத்துவதாக ஹேக் சனல் 4 தொலைக்காட்சியிடம் உறுதி வழங்கியுள்ளார்.

அதேவேளை அனுராதபுரத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிலரிடம் சனல் 4 ஒளிப்பரப்பிய இலங்கை

19-ம் பக்கம் பார்க்க

## எலும்புக்கூடு மீட்பு

(முல்லைத்தீவ)

வீட்டின் அருகில் கிண்டிய குழியில் இருந்து மனித எலும்புக் கூடு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று மதியம் 2 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று கொக்குத்தொடுவாய் என்னும் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

ஒன்றரை அடி ஆழத்தினுள் உடைகள் உக்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-266)

## கண்காணிக்கப்படுகின்றேன் கெலும் மக்ரே குற்றச்சாட்டு

இலங்கை தொடர்பில் தான் ஒரு நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் செயற்படவில்லையென சனல் 4 தொலைக்காட்சியின் சுயாதீன ஊடகவியலாளரும் போர் தவிர்ப்பு வலயம் ஆவணப்படத்தின் இயக்குநருமான கெலும் மக்ரே தெரிவித்தார்.

ஒரு ஊடகவியலாளன் தனது கடமையை செய்ய வேண்டும். இலங்கை பிரச்சினையில் நான் செய்து வருவது சரியானதே என்றார்.

இலங்கையின் இறுதிக் கட்ட போரில் இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் அவர் இயக்கிய போர் தவிர்ப்பு வலயம் ஆவணப்படம் இலங்கை உட்பட உலகம் முழுவதும் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தியது.

பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாடு தொடர்பான செய்தி சேகரிப்புக்காக இலங்கை வந்த மக்ரே, விமான நிலையத்தில் அவருக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தை எதிர்கொண்டதுடன் வடபகுதிக்கு செல்ல அவர் மேற்கொண்ட முயற்சியின் போதும் இவ்வாறான எதிர்ப்பை எதிர் கொண்டார்.

கெலும் மக்ரே விடுதலை புலிகளிடம் சம்பளத்தை பெற்று வருவதாக சில ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றம் சுமத்தினர்.

இதற்கு பதிலளித்த மக்ரே இது ஆதாரமற்றதும் அடிப்படையற்றதுமான குற்றச்சாட்டு எனக் குறிப்பிட்டார்.

நான் முதலாவதுகாணொளி ஆவணப்படத்தை இலங்கையில்

19-ம் பக்கம் பார்க்க

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# அரசும் கூட்டமைப்பும் இணைந்து அரசியல் தீர்வைப் பெற வேண்டும்

## பிரித்தானியா வலியுறுத்தல்

இலங்கையின் வடக்கிற்கான அர்த்த முள்ள அதிகார பகிர்வுக்கான அரசியல் தீர்வை நோக்கி செல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இலங்கை அரசாங்கமும் ஒன்றாக இணைந்து ஆக்கபூர்வமாக பணியாற்ற வேண்டும் என பிரித்தானியா வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநல வாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ள வருகை தந்துள்ள பிரித்தானிய வெளிவி வகார அமைச்சர் வில்லியம் ஹேக் நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதி களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இலங்கையில் அனைத்து சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு மற்றும் மனித உரிமை கள் உள்ளிட்ட நீடித்த சமாதானத்தை எட்டு வதற்கு பிரித்தானியா ஆதரவை வழங்கும் என ஹேக் உறுதியளித்ததாக பிரித்தானிய தூதரகம் தெரிவித்தது.

கடந்த கால குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுதல், நல்லிணக்கம், மனித உரிமைகளை ஊக்குவித்தல் மற்றும் தமிழ் சமூகத்தின் பிரதிநிதிகள் சந்தித்தல் போன்ற முக்கியமான விடயங்களின் அடிப்படையில் தனது இலங்கை விஜயம் அமைந்துள்ளதாக வில்லியம் ஹேக் கூறினார்.

போர் நடைபெற்ற இலங்கையின் வடக்கு பகுதிக்கு பிரதமர் கமரூன் நேரடியாக விஜ யம் செய்து நிலைமைகள் பார்வையிட உள் ளமை குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்.

சுமத்தப்படும் போர்க்குற்றங்கள் குறித்து இலங்கை அரசாங்கம் வெளிப்படையான, சுதந்தி ரமான விசாரணைகளை நடத்த வேண்டும்.

இலங்கையின் மனித உரிமை நிலை மைகளை மேம்படுத்தவும் அர்த்தமுள்ள அதிகார பகிர்வுக்கான அரசியல் தீர்வை எட்டவும் அரசாங்கமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒன்றாக இணைந்து பணி யாற்ற வேண்டும் எனவும் ஹேக் குறிப் பிட்டார்.

இந்த சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், எம்.ஏ. சுமந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், மாவை. சேனாதிராஜா, செல்வம் அடைக்கல நாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதேவேளை பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் இன்று யாழ்ப்பாணத்திற்கு பயணம் மேற்கொள்ள உள்ளார். (எ-11)

## மீள்குடியேற்றம் தொடர்பில்

## பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகளுக்கு விளக்கமளிப்பு



(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் பற்றி பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிக ளிடம் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் விளக்கமளித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகள் சுமார் 50 பேர் வடக்கு மாகாணத்திற்கு நேற்று முன்தினம் வருகை தந்தனர். கிளி நொச்சி மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் மாலை சென்ற இந்தக்குழுவினர் இரவு 9.30 மணியளவில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தனர்.

இந்நிலையில் நேற்று முற்பகல் யாழ். மாவட்ட செயலகத்திற்கு சென்ற பொதுநல வாய நாடுகளின் பிரதிநிதிகள் அரசாங்க அதிபரைச் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது போர்க்காலத்தில் இடம் பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் உள் ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக விளக்கி யதாக சந்திப்பினையடுத்து ஊடகவியலாளர் களுக்கு அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

அத்தோடு யாழ்.மாவட்டத்தில் யுத்தத் திற்கு பின்னரான கடந்த நான்கு வருடங் களாக இடம்பெற்று வரும் அபிவிருத்தி திட் டங்கள் தொடர்பில் ஒளிப்பட உதவியுடன் பொது நலவாய நாடுகளின் பிரதிநிதிகளுக்கு விளங்கப்படுத்தியதாகவும் தெரிவித்தார்.

மேலும் மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம், மக்களுக்கான வாழ்வாதார உதவிகள், சுற்றுலாத்துறைக்கான முன்னேற்ற நடவடிக் கைகள், தனியார் துறைக்கு அரசாங்கம் கொடுத்துவரும் முக்கியத்துவம், அதனை விட தனியார் துறையினரின் முதலீடுகளுக் கான அரசாங்கத்தினால் வழங்கப்படும் பாதுகாப்பு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர் பாகவும் விவசாயம், கடற்தொழில் போன்ற தொழில் துறைகள் தொடர்பாகவும் தான் விளங்கப்படுத்தியதாகவும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். (எ-6)

## காணாமல் போன ஒருவரின் உறவினர் கொழும்பில் கைது

ஜயவர்தனபுர, பிட்டகோட்டே பிரதேசத் தில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலை மையகமான சிறிகொத்தவில் இருந்த சந் தேக நபர் ஒருவரை குற்றப்புலனாய்வு பிரி வினர் நேற்று கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபருக்கு விடு தலைப் புலிகளுடன் தொடர்பிருக்கலாம் என புலனாய்வுப் பிரிவினர தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை யகத்தில் நடைபெறும் மனித உரிமை கள் தொடர்பான கண் காட்சியில் கலந்து கொண்டிருந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறிகொத்த எதிரில் பொதுபல சேனா அமைப்பு ஆர்ப்பாட்டம் நடத்தியது. இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்று ஒரு மணி நேரத்திற்கு பின்னர் இந்த நபர் கைது செய்யப்பட்டார்.

எவ்வாறாயினும் வடக்கில் காணாமல் போன நபர் ஒருவரின் உறவினரையே புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குறிப்பிட்டது. (எ-11)


**கணக்காளர் தேவை**

எமது ஸ்தாபனத்திற்கு
கணக்காளர் தேவை.

ஜமுனா ஸ்ரோர்ஸ்
39/யாழ்.வீதி, நெல்லியடி.
0777422604
(சி-5471)

**பிள்ளையார் இன்**

எமது உணவகத்தில் இந்திய சமையல்கலை வல்லுநர்களால் தரமான முறையில் தயாரிக்கப்பட்டு நிறைவான சேவையுடன் வழங்கப்படுகின்றன.

**விசேட உணவுகள்**
காலை, மாலை வேளைகளில்
தோசை, மசாலா தோசை
(உருளைக்கிழங்கு கறியுடன்)
பூரி, சப்பாத்தி (உருளைக்கிழங்கு கறியுடன்)
ரூ. 80/= மட்டுமே

**மதிய உணவு**
(12 மணி தொடக்கம்- 3 மணி வரை)
சைவ உணவு - 150 மட்டுமே
அசைவ (கோழி) உணவு -190 மட்டுமே

தொடர்புகளுக்கு:
இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
021 222 2829
(சி-5468)

**லொறி விற்பனைக்கு**

LJ XXXX
இசூசு ISUZU 350 அலுமினியம் பொடி 14 1/2 அடி
டெலிவரி செய்வதற்கு உகந்தது.
LJ XXXX
LEYLAND E-COMET
16 1/2 அடி அலுமினிய பொடி
கம்பெனிக்கு டெலிவரி செய்வதற்கு உகந்தது.

தொடர்பு
0777 422 604
(சி-5470)


## பொன்விழாக் காணும் இறைவரித் திணைக்களத்தின் யாழ்.பிராந்திய அலுவலகம்

இலங்கையில் 1933 இல், வருமானவரி திணைக்களம் என்ற பெயரில் ஆரம்பிக்கப் பட்டு பின்னர் உள்நாட்டு இறைவரித் திணைக் களமாக மாற்றம் பெற்று சுமார் 30 ஆண்டு களின் பின்னர் 1963 இல் வரி நிர்வாகத்தை பன்முகப்படுத்தல் என்ற தேவை எழுந்த போது முதன் முதலாக தெரிவு செய்யப்பட்ட வட மாகாணத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ்.பிராந்திய அலுவல கமாக 1963 இல் தாபிக்கப்பட்டது.

இந்த வகையில் எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ்.பிராந்திய அலுவல கம் தனது பொன்விழாவை பிரமாண்டமாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை முன் னெடுத்து வருவதாக யாழ்.பிராந்திய பிரதி ஆணையாளர் பா.சிவாஜி அறிவித்துள்ளார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத் தின் ஆணையாளர் நாயகம் திருமதி மல் லிகா சமரசேகர பிரதம விருந்தினராகவும் திணைக்களத்தின் ஏனைய உயர் அதிகா ரிகளும் கலந்து கொள்வதுடன் 50 ஆண்டு பூர்த்தியைக் குறிக்கும் முகமாக இப்பிராந்தி யத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 18 சிறப்புரிமை அட்டைகளை பெறுவோர் உட்பட 50 சிறந்த வரி செலுத்துவோரை கௌரவிக்கவுள்ளமை இவ் வைபவத்தின் சிறப்பம்சமாகும்.

மேலும் இவ்வைபவத்தில் அனைத்து சமயத் தலைவர்களினதும் மதவைபவங் கள், கலாசார நிகழ்ச்சிகள் போன்றவை நடைபெறுவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

யாழ்.பிராந்தியத்துக்குட்பட்ட யாழ்ப் பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலுள்ள வர்த்தகர்கள், வரி செலுத்துவோர், கணக்காளர்கள், வரி ஆலோ சகர்கள் மற்றும் உயரதிகாரிகள் ஆகியோர் இப் பொன்விழா நிகழ்வு வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர். (எ)


**அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பு**



*அன்புடையீர்!*

நிகழும் விஜய வருடம் ஐப்பசி மாதம் 02 ஆம் நாள் (19.10.2013) சனிக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் கதிரேசு மார்க்கண்டு**
(Woodlands Company & Woodlands Hotel)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 16.11.2013 சனிக்கிழமை காலை 5.30 மணி முதல் 7 மணி வரை வெள்ளவத்தை கடற்கரையில் நடைபெற்று வீட்டுக் கிருத்தியம் 18.11.2013 திங்கட்கிழமை காலை 7 மணியளவில் இல.9/4, ஸ்டேசன் வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு-04 இல் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் தங்களை கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்**

இங்ஙனம்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

No. 9/4, Station Road,
Colombo-04

(சி-5469)

## இன்று ஒரு தகவல்

### தீர்மானிக்கும் திறமை

எனக்குத் தெரிந்த ஒரு அதிகாரி ரொம்ப விவகாரமானவர். அனுபவசாலியும் கூட. அவருக்குக் கீழ் நிறையப் பேர் வேலை செய்கிறார்கள். நான் ஒருநாள் அவரைப் பார்க்க அவரது அலுவலகத்திற்குப் போயிருந்தேன். அவருடன் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்தேன்.

அந்த நேரத்தில், அவரிடம் வேலை பார்க்கும் ஒருவர் ஏதோ ஒரு பிரச்சினையுடன் உள்ளே வந்தார். அது அவர்களுடைய அலுவலகம் சம்பந்தமான ஒரு பிரச்சினை. “இந்தப் பிரச்சினையை எப்படி சமாளிக்கலாம்... இதற்கு என்ன தீர்வு?” என்று உள்ளே வந்தவர் கேட்டார்.

உடனே அந்த அதிகாரி அவரை உட்காரவைத்து அவரையே பிரச்சினையை தெளிவாக விளக்குமாறு கூறினார். இந்தப் பிரச்சினைக்கு என்ன காரணம் இருக்கும்... என்னென்ன முறைகளில் தீர்வுகாணலாம் என்பதையும் அவரிடமே கேட்டார்.

அவரும் யோசித்துப் பார்த்துவிட்டு, ஒரு நாலைந்து தீர்வுகளைச் சொன்னார். அதில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து... அந்த வழியிலேயே அதை செய்து முடிக்கச்சொல்லி அனுப்பினார். பிரச்சினையோடு வந்தவர் அதற்கான தீர்வுடன் திரும்பிப் போனார்.

நடந்ததையெல்லாம் பார்த்துக் கொண்டு உட்காந்திருந்த நான் அந்த அதிகாரியிடம், “ஏன் சார்... உங்களுக்கு கீழ் வேலை செய்பவர் உங்களிடம் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தானே வருகிறார். ஆனால், நீங்கள் அவரை உட்கார வைத்து அந்தப் பிரச்சினைக்கு என்ன தீர்வு என்று கேட்கிறீர்களே... இதுதான் நிர்வாகமா? ” என்று கேட்டேன்.

“ஆமாம்.” என்றவர். அதற்கு விளக்கமும் கொடுத்தார். நம்மிடம் வேலை பார்க்கும் ஒருவர் பிரச்சினையோடு மட்டும் வருபவராக இருக்கக்கூடாது... அவர் வரும் போதே அதற்கான தீர்வுகளையும் கொண்டு வருபவராக இருக்க வேண்டும். அந்த அளவுக்கு அவரைத் தயார் படுத்த வேண்டியது நமது பொறுப்பு. ஒரு விடயத்தை தீர்மானிப்பவர் அல்லது முடிவெடுப்பவர் (Decision Maker) எப்படி இருக்க வேண்டும்?

வெறுமனே தீர்மானிப்பவராக மட்டும் இருக்கக் கூடாது. தீர்மானிப்பதற்கு கற்றுக்கொடுப்பவராகவும் இருக்க வேண்டும். அப்படிக் கற்றுக்கொடுத்தால்தான் அவர்கள் வாழ்க்கையில் முன்னேற முடியும்.

அவர்களே பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதற்கும் அதற்குச் சரியான தீர்வு கண்டுபிடிப்பதற்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால் அவர்களின் வளர்ச்சிக்கு நாம் உதவுகிறோம் என்று அர்த்தம். அப்படியல்லாமல், பிரச்சினையுடன் வருபவர்களை உட்கார வைத்து நாம் யோசித்து முடிவு சொல்லி அனுப்பினால்... அவர்களின் வளர்ச்சிக்கு நாம் தடையாக இருக்கிறோம் என்று அர்த்தம்.

இதைப் புரிந்துகொண்டு ஒரு தலைமை அதிகாரி தனக்குக் கீழ் உள்ள பணியாளர்களை பழக்கப்படுத்த வேண்டும். பிரச்சினைகளைக் கொண்டு வருபவர்களே அதற்கான சில தீர்வுகளையும் கொண்டுவரும் அளவுக்கு அவர்கள் சுயமாக சிந்திக்க வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

அப்படி இல்லாமல், அதை தீர்மானிக்க நீ யார்... இங்கு நான்தான் எல்லாமே... என்று சொல்பவர் விபரம் இல்லாதவர் என்று அர்த்தம்.

முடிவெடுப்பதற்கும் பிரச்சினகளைத் தீர்ப்பதற்கும் சுயமாக சிந்திக்கும் திறமை வளரவேண்டும். பணியாளர்களுக்கு சுயமாக சிந்திக்கும் திறமை வளர்வதற்கு மேலதிகாரிகள் ஒரு கிரியா ஊக்கியாக (Catalyst) செயற்பட வேண்டும். அப்படிச் செயற்படுபவர்தான் ஒரு சிறந்த நிர்வாகி.

இன்றைக்குப் பல இடங்களில் இப்படியான நிலைமை இருப்பதில்லை. அதனால்தான் எந்த அலுவலகத்தில் போய் ஒரு சிறிய விபரம் கேட்டாலும்... “எனக்குத் தெரியாது... மேலதிகாரியைப் போய்ப் பார்!” என்று கை காட்டுவார்கள்.

ஒரு அலுவலகத்தில் ஒரு கிளார்க் வந்து தனது கதிரையில் உட்காந்தார். எதிரேயுள்ள மேசையில் ஒரு தேள் இருந்தது. இவரும் அதை உற்றுப் பார்த்தாரே தவிர அதை அடிக்கிற மாதிரி தெரியவில்லை. அதைவிட்டு கடிகாரத்தையே பார்த்துக்கொண்டிருந்தார். அந்த நேரத்தில் நான் போய்ச் சேர்ந்தேன். “ஏன் தேளை அடிக்காமல் கடிகாரத்தையே பார்த்துக்கொண்டு இருக்கிறீர்கள்” என்று கேட்டேன். அதற்கு அவர் “10 மணிக்குத்தான் எங்கள் முகாமையாளர் வருவார். அவரிடம் அனுமதி கேட்டு அடிக்கலாம் என்று பார்க்கிறேன் ” என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொ.ச. நடவடிக்கையில் ஈடுபட தீர்மானம்

(காரைநகர்)

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தினர், அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் சங்கத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக மாபெரும் தொழிற்சங்கப் போராட்டமொன்றை நடத்த தீர்மானித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் நிர்வாகக் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இத்தொழிற்சங்கப் போராட்டம் தொடர்பில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கு கடிதமொன்றையும் இச்சங்கம் அனுப்பிவைத்துள்ளது.

அக்கடிதத்தில், 11.10.2013 அன்று தங்களுடன் கலந்துரையாடப்பட்ட தன் பிரகாரம் பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கி வரும் வல்வெட்டித்துறை சமுர்த்தி வங்கிச் சங்கத்தில் கடமையாற்றி இடமாற்றம் செய்யப்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தரின் இடமாற்றத்தை இரத்துசெய்யவேண்டும்.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற விசாரணைகளின் போது சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரின் அனுமதியின்றி, அடிப்படை மனித உரிமைகளை மீறும் விதமாக இரகசியமான முறையில் ஒலிப்பதிவு செய்வது போன்ற நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

அவ்வாறு அனுமதியின்றி ஒலிப்பதிவு செய்த அதிகாரி மீது ஒழுக்காற்று நடவடிக்கையையும் எடுக்க வேண்டும்.

சமுர்த்தி அதிகாரசபையினால் வெளியிடப்படும் சுற்றுநிருபங்கள் முறையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், சபையின் அனுமதியுடன் கொள்கைகளுக்கு அமைவாகவே இடமாற்றமும் நடைபெறல் வேண்டும்.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வேலைத் திட்டங்களை செயற்படுத்தும் போது, சேவை மூப்பு கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும் என பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இக்கடிதத்தின் பிரதிகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, சமுர்த்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம், யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர், அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் சங்கம் என்பனவற்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (அ-9-246)

## அரிமாக்கழகத்தின் ஏற்பாட்டில் ஆரோக்கிய வாழ்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இணுவில் அரிமாக் கழகத்தின் அனுசரணையுடன் இணுவில் அறிவாலயம் நடத்தும் உடற்பருமன் அதன் ஆபத்து எனும் தலைப்பிலான ஆரோக்கிய வாழ்வுக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

அறிவாலய தலைவர் அ.குகதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வைத்திய பரிசோதனைகள், ஆலோசனைகள் என்பன இடம்பெற்று தொடர்ந்து கருத்தரங்கும் நடைபெறவுள்ளதுடன் இந்நிகழ்வில் பேராசிரியர் கே.தேவராஜா, முதுநிலைப் பேராசிரியர் ஜெபால், மருத்துவ ஆலோசகர் வைத்திய காலநிதி ஏ.ரகுபதி, உளவள ஆலோசகர் கா.வைத்தீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது உடற்பருமன் என்றால் என்ன, உடற்பருமன் ஏற்படக் காரணம் யாது, இதனால் ஏற்படும் பாதிப்புகள் யாவை, இரத்தத்தில் கொழுப்பு அடர்த்தி எவ்விதமான பாதிப்பை ஏற்படுத்தும், உடல் உழைப்பின் அவசியம் யாது, சலரோக நோயாளர் / அதி இரத்த அழுத்த நோயாளர்கள் உடற்பருமனாக இருப்பின் யாது செய்யலாம், அப்பியாசம் செய்ய முடியுமா, அதனால் நன்மையுண்டா, கால்மூட்டு உளைவு ஏற்படக் காரணி யாது, உணவு கட்டுப்பாடு கை கொடுக்குமா, காய் கறி இலைவகை தினம் சாப்பிட வேண்டுமா போன்ற வினாக்கள் தொடர்பில் விளக்கங்களைப் பெறக் கூடிய வகையில் கலந்துரையாடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 130 | 120 - 160 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 80 | 100 |
| தக்காளி | 60 | 50 | 60 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 40 | 40 |
| கோவா | 30 | 20 | 40 | 60 |
| கரட் | 40 | 20 | 60 | 70 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 |
| புடோல் | 30 | 40 | 35 | 50 |
| வாழைக்காய் | 40 | 30 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 220 | 230 | 200 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 210 | 240 |
| பாகற்காய் | 80 | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 30 | 30 | 60 |
| கருணைக் கிழங்கு | 30 | 30 | 50 | 60 |
| பயற்றங்காய் | 50 | 90 | 50 | 80 |
| லீக்ஸ் | 70 | 50 | 90 | 80 |
| பீற்றூட் | 15 | 15 | 30 | 40 |
| கறிமிளகாய் | 80 | 80 | 90 | 120 |
| முருங்கைக்காய் | 30 | 50 | 80 | 60 |
| போஞ்சி | 110 | 100 | 120 | 100 |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 40 | 20 |
| தேசிக்காய் | 150 | 160 | 280 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 45 | 30 - 40 |

## இராசி பலன்

*15.11.2013*
*(ஐப்பசி 29, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு*
*திரயோதசி முன்னிரவு 8.15 மணிவரை*
*ரேவதி முற்பகல் 10.53 மணிவரை*
*இராகுகாலம் 10.37-12.07 மணிவரை*
*சுபநேரம் 6.07-7.37 மணிவரை*
*ஐந்தாம் ஐப்பசி வெள்ளி,*
*பிரதோச விரதம், திருமூலர் குருபூசை*

**மேடம்** வேலைச் சுமை கூடும், கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குபடுத்திக் கொள்வீர்கள், குடும்பத்தினர் உங்கள் முயற்சிக்கு பக்கபலமாக இருப்பர், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**இடபம்** பிரியமான சிலருக்காக சில செலவுகளை மேற்கொள்வீர்கள், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு ஆளாகலாம், வழிபாட்டில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்** ஒளிமயமான வாழ்க்கைக்கு உறுதுணை புரியும் நாள், கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், தலைமைப் பொறுப்புக்கள் தானே தேடிவரலாம், ஆரோக்கியமான நாள்.

**சிங்கம்** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும்நாள், வியாபார விருத்தியுண்டு, திடீர் பயணங்களால் பலனுண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், செலவுகள் கூடும்.

**கன்னி** சஞ்சலங்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், எடுத்த காரியத்தை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உறவினர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம்.

**துலாம்** பெருமைகள் வந்து சேரலாம், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், தெய்வீக சிந்தனை மேலோங்கும்.

**விருச்சிகம்** ஆரோக்கியம் சீராகும், தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், உடன் பிறப்புக்கள் உதவி செய்ய முன்வருவர்.

**தனுசு** மைத்துனர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், எதிர்பார்ப்புக்கள் நிறைவேற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**மகரம்** உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல ஆலோசனைகள் கூறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், சுப செலவுகள் அதிகரிக்கும், வாகன சுகமுண்டு.

**கும்பம்** கோயில் வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், பொன்னான நாள், மூத்த சகோதரர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**மீனம்** வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், உங்கள் வார்த்தைகளைப் பலரும் கேட்டு நடக்க முன்வருவர், சேமிப்புப் பழக்கம் அதிகரிக்கும்.

வளவன்

# மண்டைதீவு தில்லேஸ்வரப் பெருமான் தேவஸ்தானம்

## பாலஸ்தாபன கும்பாபிஷேகம் : 15-11-2013




மண்டைதீவு தில்லேஸ்வரத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் சிவகாமவல்லி அம்பிகை சமேத ஸ்ரீமத் தில்லேஸ்வரப் பெருமானுக்கு இன்று காலை 8 மணி முதல் 9.30 மணிவரையுள்ள சுபவேளையில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இடம்பெறுகின்றது.


மண்டைதீவில் ஏற்பட்ட இடம்பெயர்வு காரணமாக கடந்த 25 ஆண்டுகளாக பூசை வழிபாடுகள் இன்றி இருந்த தில்லேஸ்வர பெருமானுக்கு இன்று பிரதோஷ விரத நன்னாளில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இடம் பெறுவதையொட்டி பின்வரும் சைவ சமயத் தலைவர்கள் தங்கள் அருளாசிகளை வழங்கி பாலஸ்தாபன கும்பாபிஷேகத்தைச் சிறப்பித்துள்ளனர்.



நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்



பிரதமகுரு வித்யாசாகரம் சிவஸ்ரீ. வாசுதேவக்குருக்கள் (சிவன் தேவஸ்தானம், சித்தன்கேணி)



செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன்



தொண்டுநாத சுவாமி (ஹவாய் ஆதீனம், அமெரிக்கா)



சைத்தன்யா ஜாக்கிரத சுவாமிகள் (வதிவிட ஆசாரியர் சின்மியா மிஷன், யாழ்ப்பாணம்)

**தில்லேஸ்வரம், மண்டைதீவு.** - சுபம் - **சிவப்பணியில் ஆலயப் பரிபாலன சபை**

# மாகாண சபையின் பிரேரணைக்கு யாழ். மாநகரசபை கடும் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

மாகாண சபையில் கொண்டு வரப்பட்ட பிரேரணைக்கு யாழ்.மாநகர சபையில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையின் இந்த மாதத்திற்கான பொதுக்கூட்டம் கடந்த 12ஆம் திகதி முதல்வர் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவினால் இந்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் முதல்வர் மேலும் தெரிவித்ததாவது, கடந்த 11ஆம் திகதி வட மாகாண சபையின் இரண்டாவது கூட்டத்தொடரில் யாழ். மாநகர சபையினால் அண்மையில் வெளியிடப்பட்ட ஆட்சேர்ப்புத் தொடர்பான விடயங்கள் முன்னாள் மாநகர சபையின் உறுப்பினர்கள் இருவரால் சபையில் முன்வைக்கப்பட்டது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

வடமாகாண சபையின் உள்ளூராட்சி ஆணையாளரினால் வெளியிடப்பட்ட சேவைப் பிரமாண குறிப்பின்படியே பத்திரிகையில் விளம்பரம் கோரப்பட்டது.

இதில் எந்தவிதமான அரசியல் உள்நோக்கமும் இல்லை. முற்றுமுழுதாக வெளிப்படு தன்மையாகவே இந்த நியமனங்கள் வழங்கப்படும். எல்லோருக்கும் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய விருப்பம்.

கல்வித் தகைமையைக் குறைக்க வேண்டும் என்றால் அதனை நாங்கள் செய்ய முடியாது. மாகாண உள்ளூராட்சி அமைச்சுத்தான் செய்ய வேண்டும்.

மாநகர சபை எல்லைக்குள் வசிக்கின்ற இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பினை வழங்க வேண்டுமென்ற எமது அபிலாசையை வேண்டுமென்றே இவர்கள் எதிர்ப்பது இவர்களுடைய இரத்தத்தில் ஊறிப்போய் இருக்கின்ற எதிர்ப்பு அரசியலையே காட்டுகின்றது.

இதனை இவர்கள் எதிர்ப்பதனால் வடமாகாண முதலமைச்சர் வசம் இருக்கின்ற உள்ளூராட்சி அமைச்சின் சேவைப்பிரமாண குறிப்பினை எதிர்க்கின்றார்கள். இதனால் இவர்கள் ஆளும் கட்சிக்குள்ளேயே சிறிய எதிர்க் கட்சி ஒன்றை உருவாக்கி விட்டார்களா? என்ற ஐயம் எழுந்துள்ளது.

இது தொடர்பாக மாகாண உள்ளூராட்சி அமைச்சு போதிய விளக்கம் அளிக்கும் என நம்புகின்றேன். யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வந்த முஸ்லிம்களை வெளியேற்றியமை தவறு எனக் குரல் கொடுத்தவர் எமது கட்சியின் செயலாளர் நாயகம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி முஸ்லிம்களுடன் இணைந்து யாழ். மாநகர சபையில் ஆட்சி அமைத்தமை தவறு என அன்று விமர்சித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்று வட மாகாண சபையில் முஸ்லிம்களுக்கு போனஸ் ஆசனத்தை வழங்கி மீள்குடியேற்றத்திற்கு பாடுபடப் போவதாகக் கூறுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# வரதீட்ஷை மாலை அணிதல்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தினால் நடத்தப்படும் ஸ்ரீ அம்மா பகவானுக்கு வரதீட்ஷை மாலை அணியும் நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆன்மீக பிரார்த்தனை மையத்தில் நடைபெறவுள்ளது. (அ-5)

# ஒளிவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் கிறிஸ்தவ மன்ற மாணவர்களின் ஒளி விழா நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலையின் நாகேந்திரராஜா மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இதில் கிறிஸ்தவ ஆராதனைகளும் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (அ-9-29)

# பிரிட்டன் பிரதமர் கமரூன் இலங்கை அரசுக்கு கட்டளையிட முடியாது

## ஊடக அமைச்சர் கெஹலிய பாய்ச்சல்

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி இதைச் செய்ய வேண்டும், அதைச்செய்ய வேண்டும் என்று கூற, பொதுநலவாய உச்சி மாநாட்டுக்கு பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் அழைக்கப்படவில்லை என்று இலங்கை அரசு தெரிவித்திருக்கிறது.

இது குறித்து ஊடக அமைச்சர், கெஹலிய ரம்புக்வெல, தமிழோசையிடம் கூறுகையில்,

கமரூன் பிரித்தானியாவில் வாழும் தமிழ்ச் சமூகத்தினரின் வாக்குகளைப் பெறுவதற்காகவே, விடுதலைப்புலிகளுடன் நடந்த போரின் போது நடந்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் பற்றிய கேள்விகளை எழுப்புகிறார் என்றும் குற்றம் சாட்டினார்.

முன்னதாகவே இலங்கை வந்திருக்கும் பிரித்தானிய வெளியுறவுத்துறை அமைச்சர் வில்லியம் ஹேக், இந்த மாநாட்டுக்காக வருகை தரவிருக்கும் பிரதமர் கமரூன் கேட்க வேண்டிய முக்கியமான கேள்விகளைக் கேட்பார் என்று கூறியுள்ளார்.

இதேவேளை பாதுகாப்பு நோக்கிற்காக உருவாக்கப்பட்ட இராணுவ முகாம்கள் அகற்றப்படமாட்டாது என நாட்டின் படைகளது சேனாதிபதியான ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

உதாரணமாக கொழும்பில் எவ்வளவோ இராணுவ முகாம்கள் உள்ளன.

மேல் மாகாணத்தில் உருவாக்கப்பட்ட இராணுவ முகாம்களை அகற்றுமாறு கோரினால் பாதுகாப்பிற்கு என்ன நேரும்?

அரசியல் தேவைகளுக்காக இராணுவ முகாம்கள் அகற்றப்பட மாட்டாது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பொதுநலவாய இளைஞர் பேரவைக்கு நான்கு இலங்கையர்கள் தெரிவு

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் இளைஞர் பேரவை தேர்தலில் இலங்கையைச் சேர்ந்த சதாம் சாஜஹான், மொஹமட் ஹ"ஸ்னி, இந்தியாவைச் சேர்ந்த சுதர்ஷனி லக்ஷி ஆகியோர் உப தலைவர்களாகத் தெரிவாகியுள்ளனர்.

அம்பாந்தோட்டை சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பொதுநலவாய இளைஞர் பேரவை மாநாட்டில் நடத்தப்பட்ட தேர்தலிலேயே இணையத்தளம் மூலம் வாக்களிப்பு இடம்பெற்று இவர்கள் தெரிவாகியுள்ளனர்.

பொதுநலவாய நாடுகளின் இளைஞர் பேரவைத் தலைவராக நைஜீரியாவைச் சேர்ந்த அஹமட் அடமு நியமிக்கப்பட்டுள்ளதுடன் உப தலைவர்களாக இலங்கை, இந்தியாவைச் சேர்ந்த மேற்படி மூவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொதுநலவாய நாடுகளின் இளைஞர் குழுவின் பிராந்திய பிரதிநிதிகளாக கென்யாவைச் சேர்ந்த ஜபியா கில்பேட் ஆபிரிக்க ஐரோப்பிய யூனியன் உள்ளடங்கிய பிராந்தியத்துக்கும், இலங்கையைச் சேர்ந்த தாரிகா திலீபனி ஆசிய பிராந்தியத்துக்கும், சொலமன் தீவைச் சேர்ந்த ஹெரிஜேம் பசுபிக் பிராந்தியத்துக்கும், டனதாவைச் சேர்ந்த க்ரோடன் பெஹாரி அமெரிக்க பிராந்தியத்துக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி, தேர்தலில் இலங்கையின் சார்பில் நால்வர் தெரிவு செய்யப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

குழுவின் தலைவர் பதவி ஆபிரிக்க நாடொன்றுக்கே இம்முறை வழங்கப்பட வேண்டும் என முன்னதாகவே ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டதாக தெரியவருகின்றது.

(அ-2)

---

பழந்தமிழர் இயக்கத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடத்தப்படும்

## பழந்தமிழர் ஆய்வு மாநாடு

காலம்:- 16.11.2013 அன்று சனிக்கிழமை பி.ப. 3.30 மணி

இடம்:-சொர்ணாம்பிகை மண்டபம் (TCT) நாவலர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்(நாவலர் கலாசார மண்டபத்திற்கு முன்பாக)

**வரவேற்புரை**

லயன் சீமாட்டி திருமதி இராகினி இராமலிங்கம்

**தலைவர்**

திரு. ம.வித்தியானந்தநேசன்

(மாவட்டப் புள்ளிவிபரவியலாளர், மாவட்டச் செயலகம், மன்னார் , நிறுவுநர், பழந்தமிழர் இயக்கம்)

**கௌரவ விருந்தினர்**

***கல்விக்காருண்ணியன்***

திரு.ஈ.எஸ்.பி. நாகரத்தினம்

**பிரதம விருந்தினர்**

பேராசிரியர் கா.குகபாலன்

(புவியியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்)

**ஆய்வாளர்கள்**

*''பழந்தமிழர் வாழ்வில் ஆட்சியும் அறமும்''*

பேராசிரியர் க.சிவானந்தமூர்த்தி

(மெய்யியல் துறை , யாழ். பல்கலைக்கழகம்)

*''பழந்தமிழர் பண்பாடும் ஆரியர் வருகையும்''*

பேராசிரியர் A.N. கிருஸ்ணவேணி

(தலைவர், நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

*'' இலங்கைத் தமிழர் பண்பாட்டு மரபுரிமைகளின் செறிவும் மறைக்கப்பட்ட வரலாற்றுத் தொன்மங்களும் தொல்லியல் மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு''*

**பேராசிரியர் செ.கிருஸ்ணராஜா**

(வரலாற்று-தொல்லியல் துறை யாழ். பல்கலைக்கழகம்)

**நன்றியுரை**

Rev.P. தேவமித்திரன்

(Jaffna City Mission , CACM)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பழந்தமிழர் இயக்கம்

தொடர்புகளுக்கு- 0777642379

*emil:mvithiyananthanesan@gmail.com*

(4488)

**KIRUBA LEARNERS**

(Govt, Approved Driving Training School)

தலைமைக் காரியாலயம்:- 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 4353, 021 492 3200

எமது கிளைகள்

சாவகச்சேரி 0214923202 0213201818

சுன்னாகம் 0212242022 0714546956

கிளிநொச்சி 0212285505 0714546955

நெல்லியடி 021300 6550 0714546957

விசுவமடு 0213201515 0714546955

விளம்பர அனுசரணை

---

உ
குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



## இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை
## வண்ணார்பண்ணை தவமையம் வழங்கும் சிறப்பு யோக வாழ்வு பற்றிய பயிற்சிகள்

**அருட்தந்தை வேதாத்ரி மகரிஷி அவர்களால் வடிவமைக்கப்பட்ட முழுமை நல வாழ்விற்கு மனவளக்கலை யோகாப் பயிற்சிகள்**

### இலவச அறிமுக உரையும் மனவளக்கலை காயகல்ப பயிற்சியும்

காலம்: 16.11.2013 சனிக்கிழமை, நேரம்: மாலை 4.30 மணி

இடம்: வண்ணை, நாச்சிமார் கோயில், திருமண மண்டபம் (கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்)

**நிகழ்ச்சி நிரல்**

இறைவணக்கம் குருவணக்கம் 1. வரவேற்புரை 2. தொடக்கவுரை

மனவளக்கலை பேராசிரியர் **அருள்நிதி சி.முருகானந்தவேல்** அவர்கள்

அறங்காவலர் (இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)

**அறிமுகவுரை மற்றும் காயகல்பப் பயிற்சி வழங்குபவர்**

மனவளக்கலை முதுநிலை பேராசிரியர் **அருள்நிதி ஆர்.ஜெயபால்** அவர்கள்

தொடர்ந்து வரும் நாட்களில், **காயகல்ப பயிற்சி, உடற்பயிற்சி, தியானப் பயிற்சி வகுப்புகள் நடைபெறும்.**

பயிற்சி வழங்குபவர்: மனவளக்கலை முதுநிலை பேராசிரியர்

**அருள்நிதி ஆர்.ஜெயபால்** அவர்கள்

**தொகுதி I:**

காலம் 16.11.2013 சனிக்கிழமை தொடக்கம் 22.11.2013 வெள்ளிக்கிழமை வரை

நேரம்: மாலை 5 மணி. இடம்: வண்ணை, நாச்சிமார் கோயில், திருமண மண்டபம், கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

**அகத்தாய்வு II (தற்சோதனை பயிற்சி)**

காலம்: 16.11.2013, 17. 11.2013 சனி, ஞாயிறு, நேரம் : காலை 9 மணி - பி.ப. 1.30 மணிவரை

இடம் : வண்ணார் பண்ணை தவமையம்

**அகத்தாய்வு I (தற்சோதனை பயிற்சி)**

காலம்: 23.11.2013, 24.11.2013 சனி, ஞாயிறு நேரம்: காலை 9மணி - பிற்பகல் 01.30 மணிவரை

இடம்: வண்ணார்பண்ணை தவமையம்

**அகத்தாய்வு III (தற்சோதனை பயிற்சி)**

காலம்: 30.11.2013, 01.12.2013 சனி, ஞாயிறு நேரம்: காலை 9மணி - பிற்பகல் 01.30 மணிவரை

இடம்: வண்ணார்பண்ணை தவமையம்

பயிற்சி வழங்குபவர்: மனவளக்கலை முதுநிலை பேராசிரியர்

அருள்நிதி ஆர்.ஜெயபால் அவர்கள்

*இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை*
*வண்ணார்பண்ணை தவமையம்,*
*நாச்சிமார்கோயிலடி, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.*

**தொடர்புகளுக்கு: 077 772 6732, 077 123 5646, 071 440 3268, 077 736 8745**

அன்பின் அலை எழுகின்றபோது கோப அலை மறைந்துபோகும்
மனவளக்கலை எழுகின்றபோது யோககலை நிறைகின்றது
**'வாழ்க வளமுடன்'**

(சி-5443)

---

**கல்யாண மாலை**

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1977 இந்து (Ku)
நட்சத்திரம்: பூரம்
கி.பா : 18.75 சூரி, செவ் 2 ல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: Dip. in Libruary & Information Science / நூலகர்
தொ.இ: B/2506

பிறப்பு: 1980 இந்து (பிராமணர்)
நட்சத்திரம்: சுவாதி 3
கி.பா : 35 உயரம்: 5'6"
தகைமை/தொழில்: HNDM / முகாமையாளர்
தொ.இ: B/2513

பிறப்பு: 1983 இந்து (V)
நட்சத்திரம்: அத்தம் 2 கி.பா:42
உயரம்: 170cm
தகைமை/தொழில்: B.Sc / முகாமையாளர் (UK)
தொ.இ: B/2507

பிறப்பு: 1982 இந்து (Vis)
நட்சத்திரம்: திருவாதிரை 3
கி.பா : 21.75 செவ் 2 ல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L / Carpenter (அவுஸ்திரேலியா)
தொ.இ: B/2514

பிறப்பு: 1983 இந்து (Ko)
நட்சத்திரம்: அவிட்டம் 4
கி.பா : 2 சூரி, செவ் 9 ல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L / Muli shop (UK)
தொ.இ: B/2509

பிறப்பு: 1979 இந்து (Vis)
நட்சத்திரம்: சதயம் 1
கி.பா: 48.75 செவ் 1 ல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BA / ஆசிரியர்
தொ.இ: B/2515

பிறப்பு: 1974 இந்து (V)
நட்சத்திரம்: கார்த்திகை 2
கி.பா : 40.75 உயரம்: 165cm
தகைமை/தொழில்: சுவிஸ்
தொ.இ: B/2511

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 4
கி.பா : 32.75 செவ் 2 ல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L / வியாபாரம்
தொ.இ: B/2516

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**


(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி

---

## அகில இலங்கை சமாதான நீதவானாக பதவி ஏற்ற எமது வித்தியாலய ஆசிரியர் திரு.சி.சுரேஸ்குமார்



சிரித்த முகத்துடன்
சிந்தித்து செயலாற்றி
சத்தியத்தின் வழியே
சமாதான நீதவானாய்
சாதனைகள் படைத்திட
சந்தோஷமாக வாழ்த்துகின்றோம்.

*மு/ ஒலுமடு தமிழ் வித்தியாலய*
*அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்*

(4484)

# மணற்காடுமுதல் சுண்டிக்குளம் வரை இந்திய இழுவை படகுகள் அதிகரிப்பு

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கின் மணற்காடு முதல் சுண்டிக்குளம் வரையிலான கடற் பிரதேசத்தில் இந்திய இழுவைப் படகுகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளதால், தாம் தொழிலை மேற்கொள்ள முடியாதுள்ளதாக பிரதேச கடற்றொழிலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இக்கடற் பிரதேசத்தில், யுத்தம் நடைபெற்றபோது, ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரின் பாரிய அச்சுறுத்தல்களினால் தொழிலை மேற்கொள்ளவில்லை.


இந்நிலையில், தற்போது யுத்தம் முடிவுற்றபோதிலும் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளின் தொல்லைகளால் ஆழ்கடல் மீன்பிடிப்பு நடவடிக்கை கனவாகிக் கொண்டு போவதாக பிரதேச மீனவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

கடந்த வாரங்களில் வடமராட்சி கிழக்கு கடற்கரையின் பகுதிக்கு மிக அண்மையாக இந்திய இழுவைப்படகுகள் வந்து தமது தொழில் நடவடிக்கைகளை நேரில் பார்வையிட்டதாக தெரிவிக்கும் பிரதேச மீனவர்கள், அப் பகுதியில் அரண் அமைத்து இருக்கும் இலங்கை கடற்படையினர் இந்திய மீனவர்களை தடுக்காதிருப்பது ஏன்? என கேள்வி எழுப்பியுள்ளனர்.

இவ்வாறாக இழுவைப் படகுகள் கடற் பகுதிக்கு வரும் போது, பிரதேச மீனவர்களினால் வீசப்படுகின்ற வலைகள் படகுகளில் அகப்பட்டு சேதமடைகின்றன.

அத்தோடு, இப்பிரதேச மீனவர்கள் தொழிலுக்கான உபகரணங்களை வங்கிகளில் கடன் பெற்று வாங்கியுள்ளதாகவும் அன்றாடம் தமது தொழில் பாதிப்படைவதனால் கடனை மீளச் செலுத்த முடியாத நிலைக்குட்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, தாம் தொழிலில் ஈடுபடுவதற்கு ஏதுவாக களம் அமைத்துத் தருமாறு உரியவர்களிடம் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-64)




நன்றி:-அததெரண

# பாதிக்கப்பட்ட மக்களுக்கான அரசின் வாழ்வாதார உதவிகள் போதுமானதல்ல

## பொதுநலவாய பிரதிநிதிகள் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதிலும் அவர்களுக்கான ஏனைய நலத்திட்டங்களை முன்னெடுப்பதிலும் இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகள் போதுமானதாகவில்லை என வடபகுதிக்கு விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை நேரில் ஆராய்ந்த பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அத்தோடு பொதுநலவாய மாநாட்டில் நாடுகள் கலந்து கொள்ளாது புறக்கணிப்பது தவறு எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பொது நலவாய மாநாட்டின் சமூக அமர்வுகளில் பங்கு கொள்வதற்காக இலங்கைக்கு வருகை தந்துள்ள வெளிநாட்டு பிரதிநிதிகள் சுமார் 50 பேர் வடபகுதிக்கு நேற்றுமுன்தினம் விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட இந்த 50 வெளிநாட்டு பிரதிநிதிகள் அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் என். சுதாகரன் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடினர். இதன் பின்பு செஞ்சோலை சிறுவர் இல்லத்திற்கும் சேவாலங்கா நிறுவனம் மற்றும் கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலை ஆகியவற்றுக்கும் விஜயம் மேற்கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்திற்கான விஜயத்தை நிறைவு செய்துகொண்டு நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தனர். யாழ்.றில்ஹோ விருந்தினர் விடுதியில் இந்த பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகளுக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

மலர் மாலை அணிவித்து மங்கல வாத்திய இசை முழங்க பாடசாலை மாணவர்களின் நடனத்துடன் அழைத்துவரப்பட்ட இந்த பிரதிநிதிகள் தாமும் ஆடிப்பாடி தமது மகிழ்சியையும் வெளிப்படுத்தியிருந்தனர்.

இதேவேளை, ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கும் பதிலளித்திருந்தனர்.

குறிப்பாக யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பின்னர் வட பகுதியில் விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை பார்வையிட்டுள்ளமை தொடர்பாக கேட்கப்பட்டபோது, யுத்தம் இடம்பெற்ற நாடுகளில் அந்த யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்ட பின்னர் விரைவான அபிவிருத்திகள் இடம்பெறுவதும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு குறுகிய காலத்திற்குள் திரும்புவதும் உலகநாடுகளில் வழமையாகவுள்ளன.

ஆனால், இலங்கையில் அவ்வாறான செயற்பாடுகள் ஒப்பீட்டளவில் போதுமான தாகவில்லை. அத்துடன் போரினால் பாதிக்கப் பட்டவர்களின் வாழ்வாதாரம் மற்றும் ஏனைய நலத்திட்டங்களுக்கான நடவடிக்கைகளும் போதுமானதாகவில்லை.

இலங்கையில் இன்னமும் பல செயற்பாடு கள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

மேலும் இலங்கையில் நடைபெறும் பொது நலவாய மாநாட்டில் கலந்து கொள்வதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இவ்வாறான மாநாடுகளை சில நாடுகளின் தலைவர்கள் புறக்கணித்துள்ளனர்.

ஆனால், அவ்வாறு செய்வது தவறு எனவும் பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-6)

# பேருந்து சேவை மீளவும் ஆரம்பமாகும்

நாவாந்துறையில் அமைந்துள்ள சென்.மேரிஸ்,சென். நீக்கிலஸ் ஆகிய சனசமூக நிலையங்கள் தமது பிரதேசத்தில் உள்ள மாணவர்களின் கல்வி நலனைக் கருத்திற் கொண்டு மாணவர் களுக்கான பாடசாலை பேருந்து சேவை ஒன்றை ஏற்பாடு செய்து தருமாறு யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோ.பற்குணராஜா விடம் கடிதம் மூலம் கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தனர்.

குறித்த கோரிக்கையை அடுத்து சென்.மேரிஸ், சென்.நீக்கிலஸ் சனசமூக நிலைய நாவாந்துறை பிரதேசத்திற்கு எதிர்வரும் 25 ஆம் திகதி பாடசாலைக்கான பேருந்து சேவை யாழ்.மாநகர சபையினால் மீள ஆரம்பிக்கப்படும் என மாநகர முதல்வர் உறுதியளித்தார். (அ-6)


## பொதுநலவாய அரச தலைவர்கள் கூட்டம் 2013, இலங்கை ரூ.500 ஞாபகார்த்த நாணயத் தாள் வெளியீடு

ஞாபகார்த்த நாணயத் தாள்




3

தற்போது சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாளிலிருந்து ஞாபகார்த்த நாணயத் தாள் காட்டும் வேறுபாடுகள்

1. வண்ணத்துப்பூச்சிக்கு பதிலாக ஞாபகார்த்த நாணயத் தாளில் பொ.அ.த.கூட்டம் 2013 இலட்சனை காணப்படுகிறது.
2. பொ.அ.த.கூட்டம் 2013 இற்கான நிலைக்குத்தான இலக்கத்தினைச் சுற்றியுள்ள வடிவமைப்பினை மேம்படுத்தியதன் மூலம் முனைப்பாக்கப்பட்ட நீர்வரி அடையாளம் உள்ளடக்கப்பட்டிருக்கிறது.
3. நாணயத் தாளில் உள்ள திகதி: 2013.11.15

தற்போது சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாள்




ஞாபகார்த்த நாணயத் தாளின் பின்பக்கம் தற்போது சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாளிற்கு ஒப்பானதாகும்

(C-5467)

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# முல்லைத்தீவு சுகாதார தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை

## நடவழக்கை எடுக்கப்படுமா?

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் பல வருடங்களாக பணிபுரியும் சுகாதாரத் தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை என விசனம் தெரிவித்துள்ளனர்.**

நேர்முகப் பரீட்சையின் போது தெரிவு செய்யப்பட்டு பல்வேறு இக்கட்டான சூழ்நிலைகளிலும் பணியாற்றிய சுகாதாரத் தொண்டர்களாகிய எமக்கு நிரந்தர நியமனம் வழங்காது ஒருநாளேனும் கடமை புரியாதவர்களுக்கு நியமனத்தை வழங்கியதன் மூலம் நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம்.

முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழ் பணியாற்றும் சுகாதாரத் தொண்டர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட சுனாமி பேரலையின்போதும் மற்றும் அண்மையில் ஏற்பட்ட இறுதிக்கட்ட யுத்தத்தின்போதும் இன்றுவரையும் நாம் சுகாதாரத் தொண்டர்களாக கடமையாற்றி வருகின்றோம். எமக்கு இதுவரையும் நியமனம் வழங்கப்படவில்லை.

நாம் மேலதிகாரிகளைத் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர்கள் அரசியல்வாதிகளைத் தொடர்புகொள்ளுங்கள் என எமக்குப் பதில் கூறியுள்ளனர்.

அதற்கிணங்க நாம் அரசியல்வாதிகளைச் சந்தித்து அமைச்சர் றிசாட் பதியுதீனைச் சந்தித்து மனுக்களைக் கையளித்திருந்தோம்: அவர்கள் எமக்கு வடமாகாண தேர்தல் முடிவடைந்தவுடன் நிரந்தர நியமனங்கள் தருவதாக உறுதி கூறினார்கள். தேர்தல் முடிவடைந்து எதுவித பயனும் எமக்கு கிடைக்காது ஏமாற்றப்பட்டு கதிகலங்கி நிர்க்கதியாய் நிற்கின்றோம்.

போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாவட்டம் முல்லைத்தீவு மாவட்டமாகும். இச் சுகாதாரத் தொண்டர்கள் ஆகக் குறைந்தது 6 வருடங்கள். ஆகக்கூடியது 12 வருடங்கள் கடமையாற்றி வருகின்றனர்.

நிரந்தர நியமனம் வழங்கப்படாத அந்த அநீதியானது தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்ற வேறுபாடுகளுடன் நடந்தேறி வருகின்றது.

அதுமட்டுமன்றி தொடர்ச்சியாக புறக்கணிப்புக்குள்ளான எங்களின் பொருளாதார நிலைமைகளினாலும் கையறு நிலைமைகளினாலும் மன அழுத்தம் ஏற்பட்டுள்ளது.

சுகாதாரத் தொண்டர்களாகிய எங்களின் வயிற்றில் அடித்து தமது சுகபோக அரசியலை மேற்கொள்ளும் அரசியல்சக்திகளுக்கு எதிராக எங்களுக்காக மனச்சாட்சியுள்ள மனிதர்கள், சமூக முற்போக்குச் சக்திகள், தொழிற்சங்கங்கள், புத்திஜீவிகள் என்போர் எங்களுக்கு நிரந்தர நியமனத்தை பெற்றுத்தருவீர்கள் என நம்பி தொண்டர்களாகிய நாங்கள் உங்களிடம் கையேந்தி நிற்கின்றோம்.

(ம-267)

# பால் குளிரூட்டும் நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு

(முல்லைத்தீவு)

உலக கரிசன (World Conceran) நிறுவனத்தின் **வன்னி பால்பண்ணை துறை மீள் எழுச்சித்திட்டம் 1** இன் கீழ் முல்லை மாங்குளம் பிரதான வீதி, முள்ளியவளை பிரதேசத்தில் நியூசிலாந்து நாட்டின் வெளிவிவகார அமைச்சர் முர்ரே மக்கலி பால் குளிரூட்டும் நிலையத்திகான அடிக்கல் நாட்டும் நிகழ்வுஇன்றுவெள்ளிக்கிழமைஇடம்பெறவுள்ளது.

நியூசிலாந்து அரசாங்கத்தின் நிதி உதவியுடன் உலக கரிசன நிறுவனத்தினால் 18 மாத காலமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் 4 பிரதேச செயலாளர் பிரிவில் பால்வள மேம்பாட்டு செயற்றிட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் ஒருபகுதியாகவே பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இவ் அடிக்கல் நாட்டும் நிகழ்வில் நியூசிலாந்து நாட்டின் வெளிவிவகார அமைச்சர், நியூசிலாந்து நாட்டு உயர்ஸ்தானிகர், நியூசிலாந்து வெளிவிவகார மற்றும் வர்த்தக அமைச்சின் உப செயலாளர், நியூசிலாந்து நாட்டிற்கான இலங்கையின் தூதரக பிரதிநிதி, உலக கரிசன நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி, முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வின் போது இத்திட்டத்தின் கீழ் செயற்பட்டுவரும் பாற்பண்ணையாளர் சங்க முள்ளியவளை பிரதேச பயனாளிகளுக்கு பசுமாடுகள் கையளிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

மேலும் உலக கரிசன நிறுவனத்தின் சிறுவர் பாதுகாப்பு நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் இயங்கி வரும் 30 இற்கு மேற்பட்ட சிறுவர் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்களும் கையளிக்கப்படவுள்ளன.

இந் நிறுவனம் 2005 ஆம் ஆண்டிலிருந்து பல வகையான நிவாரண மற்றும் அபிவிருத்தி செயற்றிட்டங்களை இலங்கையில் அமுல்படுத்தி வருவதுடன் 2007 ஆம் ஆண்டு முதல் கிழக்கிலும் மீள்குடியேற்றத்தின் பின்னர் முல்லைத்தீவிலும் பால்வள மேம்பாட்டு செயற்றிட்டத்தை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-267)

# இப்படியும் நடக்கிறது!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி சிவநகர், உருத்திரபுரம் ஆகிய கிராமப் பகுதிகளில் தற்பொழுது மோசடிப் பேர்வழிகள் உலாவருவதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

அண்மையில் சிவநகர் கிராமத்தின் வீடொன்றுக்கு வருகைதந்த இளைஞர் ஒருவர் தான் நிறுவனம் ஒன்றில் கடமைபுரியும் பெண் ஒருவர் கூறியதன் பேரில் அவ்வீட்டுக்கு வந்துள்ளதாக தன்னை அவ்வீட்டு குடும்பத் தலைவரிடம் அறிமுகம் செய்த பின்னர் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 100 இற்கு மேற்பட்ட புள்ளியை அவ்வீட்டுப் பிள்ளை பெற்றுள்ளதை அறிந்ததாகவும் 5 ஆயிரம் ரூபா பணத்தை தம்மிடம் தருவார்களாயின் அதனை வங்கி ஒன்றில் வைப்பிலிடுவதன் மூலம் அத் தொகையை இரு மடங்காக 10 ஆயிரம் ரூபாவாக வைப்பில் இடப்படும் என தெரிவித்துள்ளார்.

எந்த வங்கியில் வைப்பில் இடப்படும் என்ற விபரம் முழுமையாக அவரால் தெரிவிக்கப்படவில்லை.

நம்பகமான பெண்பிள்ளை ஒருவர் கூறியே தான் அங்கு வந்ததாக அந் நபர் தெரிவித்ததை நம்பிய குறித்த வீட்டுப் பெண்மணி 5 ஆயிரம் ரூபா பணத்தை அவரிடம் கொடுத்துள்ளார்.

இதேபோன்ற மோசடி உருத்திரபுரம் கிராமத்திலும் சம காலத்தில் நடைபெற்றுள்ளதாக அறிய வருகின்றது.

மேற்குறித்த நபரால் வேறு ஆவணங்கள் எதுவும் வழங்கப்படாது 077 0712212 என்ற கைத்தொலைபேசி இலக்கம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

இதன்பின்பு அவரிடமிருந்து குறித்த விடயம் தொடர்பாக எவ்வித தகவல்களும் இல்லாமையால் அவர் கொடுத்த மேற்படி தொலைபேசி இலக்கத்துடன் குடும்பத்தவர் பலமுறை தொடர்பு கொண்ட போதிலும் மறு பக்கத்திலிருந்து எதுவித பதிலும் கிடைக்கவில்லை.

அதன் பின்னரே இந்த நடவடிக்கை திட்டமிட்ட ஏமாற்று சதி என்பது அக் குடும்பத்தவருக்கு புலனாகியுள்ளது.

(ம-254)




# சட்டஆவணங்களை பெறுவதற்கான இலவச நடமாடும் சேவை

கிளிநொச்சி மாவட்டத்தில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் மூலமாக சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான இலவச நடமாடும் சேவையை அரசாங்க அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் ஏற்பாடு செய்துள்ளார்.

மேற்படி அமைச்சின் நீதி நியாயத்தை சமமாக அணுகும் கருத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்ட செயலகமும், கரைச்சி, கண்டாவளை, பூநகரி பிரதேச செயலகங்களும் இணைந்து இந் நடமாடும் சேவைக்குரிய ஒழுங்குகளைச் செய்துள்ளன.

இதன்படி கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் நடமாடும் சேவை வட்டக்கச்சி மாயவனூர் கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கு எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணி வரையும் மாயவனூர் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

அக்கராயன்குளம் ஸ்கந்தபுரம் கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கு 19 ஆம் திகதி செவ்வா ய்க்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரையும் ஸ்கந்தபுரம் சந்தைக் கட் டடத்தில் நடைபெறும்.

வன்னேரிக் குளம்,ஆனைவிழுந்தான் குளம் கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கு 21 ஆம திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல பிற்பகல் 4 மணி வரையும் ஆனை விழுந்தான் குளம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் முழங்காவில், நாச்சிக்குடா கிராம மக்களுக்கு 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் பி.ப. 4 மணி வரையும் முழங்காவில் கிராம அலுவலர் அலுவலகத்தில் நடைபெறும்.

ஜெயபுரம் வடக்கு, பல்லவராயன் கட்டு கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கு 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணி முதல் பி.ப.4 மணி வரையும் ஜெயபுரம் உப அலுவலகத்தில் நடைபெறும்.

இந்த நடமாடும் சேவையில் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுச் சான்றிதழ்களைப் பெறுவதற்கும் காலங்கடந்த பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுச் சான்றிதழ்களைப்பெறுவதற்கும், தேசிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை ஆகியவற்றுக்கும், தொலைந்து போன அடையாள அட்டைக் கான பொலிஸ் அறிக்கையைப் பெறவும் விண ணப்பிக்க முடியும்.

காலங்கடந்த பதிவை மேற்கொள்ள விரும்புபவர்கள் ஏற்கனவே செய்யப்பட்ட தேடுதல் விளைவுகளைக் கொண்டு வருதல் வேண்டும்.

இந் நடமாடும் சேவை தொடர்பான மேலதிக விபரங்களை உரிய பிரிவின் கிராம அலுவலர்களிடம் அல்லது தேசிய மொழிகள் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் கிளிநொச்சி மாவட்ட உத்தியோகத்தர் நடராஜா உமாநாத் திடமோ அல்லது 0750539415 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ, மாவட்டச் செயலகத்தின் 021 228 5351 எனும் இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

(ம-254)

# நேர்முகத் தேர்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவு தொகை வழங்குவதற்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் 21,22 ஆம் திகதிகளில் காலை 9 மணிக்கு முல்லை: மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளதாக முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

இந்நேர்முகத் தேர்விற்காக விண்ணப்பித்த மாணவர்கள் மேற்குறித்த திகதிகளில் நடைபெறும் நேர்முகத் தேர்வில் தோற்றி உதவி பெறுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம-267)




# சிறுவர் அரங்கம்

637

## நட்பு

பாண்டிய நாட்டில் உள்ளது பிசிர் என்ற ஊர். ஆந்தையார் என்பது இவரது இயற்பெயர். ஆதலால் பிசிராந்தையார் என்று அழைக்கப்பெற்றார்.

இவர் சோழ மன்னன் கோப்பெருஞ்சோழன் மீது அன்பு கொண்டு அவனைப் பற்றிய பாடல்களைப் பாடியுள்ளார். சோழனைக் காணவேண்டும் என்னும் பேரவா கொண்டிருந்தார்.

ஆனால் பாண்டிய நாட்டிலுள்ள பிசிர் வெகு தொலைவு உள்ளதால் இவரால் சோழ நாட்டுக்குச் செல்ல இயலவில்லை.


இவரது புகழையும் தமிழையும் கேள்விப்பட்ட சோழனும் இவரைக் காணவேண்டும் என்னும அவா கொண்டிருந்தான். எனவே இருவரும் உயிர ஒன்றாகவும் உடல் வேறாகவும் வாழ்ந்து வந்தனர். இருவரும் தாம் ஒருவருக்கொருவர் சந்திக்கும் திருநாளை ஆவலுடன் எதிர்பார்த்துக கொண்டிருந்தனர்.

கோப்பெருஞ் சோழனின் தலைநகர் உறையூர். இம்மன்னன் பிசிராந்தையாரை நேரில் காணாமலேயே அவருடன் நட்புக் கொண்டவன். இவனது ஆட்சி நடந்து கொண்டிருக்கும் போதே இவனது இரண்டு புதல்வர்களும் சோழ ஆட்சிக் கட்டில் ஏறுவதற்காக தந்தையுடன் போரிடத் துணிந்தனர்.

இதை அறிந்த கோப்பெருஞ் சோழன் ஆட்சியை விட்டு வடக்கிருந்து உயிர் விடத் துணிந்தான். அப்போது தன் மந்திரியிடமும் மற்றையோரிடமும் பிசிராந்தையார் என்னைக் காண வருவார்.

என்னுடன் வடக்கிருப்பார். அவருக்கும் ஓர் இடத்தைத் தயார் செய்யுங்கள் எனக் கூறினார். அதேபோல் பிசிராந்தையாருக்கும் ஒரு இடம் அமைக்கப்பட்டது.

நாட்கள் கடந்தன. சோழன் பிசிரந்தையாரைக் காணாமலேயே வடக்கிருக்கத் துணிந்தான். எப்படி யும் ஆந்தையார் வந்து விடுவார் எனக் கூறித் தன் விரும்பும் மன்னவர் வடக்கிருந்து உயிர் விடுதல் அக்கால மரபு. வடக்கிருத்தல் என்பது தன்நாட்டில் உள்ள ஆறு குளம் போன்ற நீர் நிலைக்குச் சென்று அதன் இடையே மணல் திட்டு ஒன்றை அமைத்து வடக்கு திசை நோக்கி அமர்ந்து



தவத்தை மேற்கொண்டான்.

இவ்வுலக வாழ்வைத் துறக்க உண்ணாநோன்பிருந்து உயிர் விடுதல்.

தன் மக்கள் மீது இருந்த மனக் கசப்பின் காரணமாக கோப்பெருஞ்சோழனும் வடக்கிருந்தான்.

இதனைக் கேள்விப்பட்டார் பிசிராந்தையார். உடனே சோழ நாட்டை நோக்கி ஓடி வந்தார்.

வழியில் எதிர்ப்பட்டவர் இவரைப் பார்த்து மிகவும் ஆச்சரியப் பட்டனர்."புலவரே! நான் என் சிறுவயது முதலே தங்களைப் பற்றி என் தந்தையார் கூறக் கேட்டிருக்கிறேன். தங்கள் மிகவும் வயதானவராக இருப்பீர்கள் என்று எண்ணியிருந்தோம். தங்களோ மிகவும் இளமையாக இருக்கின் றீர்களே, அது எப்படி?"என்று வியந்து கேட்டனர். அதற்கு மறுமொழியாக ஆந்தையார் ஒரு பாடல் பாடினார். புறநானூற்றில் உள்ள இப்பாடல் நமது வாழ்வியலுக்கு மிகவும் தேவையான ஒன்று.

"யாண்டு பலவாக நரையில வாகுதல்

யாங்காகியர் என வினவுதிராயின்,

மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்

யான் கண்டனையர் என் இளையரும் வேந்தனும்

அல்லவை செய்யான் காக்கும் அதன் தலை

ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்

சான்றோர் பலர் யான் வாழும் ஊரே."

என்று பாடிய பாடல் மூலம் " வயோதிகரானாலும் இளமையோடிருக்கும் காரணத்தைக் கேட்பீரானால் சிறந்த பண்புள்ள மனைவி, மக்கள் குறிப்பறிந்து பணி செய்யும் பணியாளர்கள் அறத்தையே நாடிச் செய்யும் மன்னன் இத்துணை பேருடன் நன்கு கற்று நல்ல பண்புகளுடன் விளங்கும் சான்றோர் பலரும் எம்மைச் சூழ்ந்து இருக்க நான் வாழ்வதால் எனக்கு நரை தோன்றவில்லை. மூப்பும் எம்மை அணுகவில்லை." என்று விளக்கினார்.

சோழனின் இறுதி நேரம் வந்துற்றபோது பிசிராந்தையார் ஓடிவந்தார். நண்பனைக் கண்டார் தனக்காகத் தயாராக அமைக்கப்பட்ட இடத்தில் வடக்கிருந்து சோழனுடன் தானும் தன் இன்னுயிர் விடுத்தார்.

இச்செய்தியை இக்காட்சியைக் கண்ட பொத்தியார் என்னும் புலவர் தன் பாடலில் இதனைக் கூறுகிறார்.

"இசைமரபு ஆக நட்பு கந்தாக

இனியதோர் காலை ஈங்கு வருதல்

வருவன் என்ற கோனது பெருமையும்

அது பழுதின்றி வந்தவன் அறிவும்

வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந்தன்றே."

பிசிராந்தையார் என்ற புலவரும் கோப்பெருஞ்சோழன் என்ற மன்னனும் தம்முள் காணாமலேயே நட்புக் கொண்டு ஒன்றாக உயிர் நீத்த இச்சிறப்பினை இலக்கியங்கள் நமக்கு எடுத்து இயம்புகின்றன. இத்தகு நண்பர்களை நம்மால் மறக்க இயலுமா?



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1505- போர்த்துக்கேய மாலுமியும் நாடுகாண் பயணியுமான லோரன்ஸ் டி அல்மெய்டா, கொழும்பை வந்தடைந்து ஐரோப்பியக் குடியேற்றத்தை ஆரம்பித்தார்.
- 1864-அமெரிக்க உள்நாட்டுப்போர்: கூட்டுப்படைத் தளபதி வில்லியம் ஷேர்மன் அட்லாண்டா நகரைத் தீக்கிரையாக்கி ஜோர்ஜியாவின் சவான்னா துறைமுகம் நோக்கி நகர்ந்தார்.
- 1889-பிரேசில் குடியரசாகியது. இரண்டாம் பெதரோ ஆட்சியிழந்தான்.
- 1926-என்பிசி வானொலி 24 நிலையங்களில் தனது வானொலிசேவையைத் தொடங்கியது.
- 1941-நாசி ஜேர்மனியில் சில உயர் அதிகாரிகளைத் தவிர்த்து அனைத்து ஓரினச்சேர்க்கையாளர் களையும் வதைமுகாம்களுக்கு அனுப்ப உத்தரவிடப்பட்டது.
- 1942-இரண்டாம் உலகப்போர்: சொலமன் தீவுகளில் குவாடல்கனல் என்ற இடத்தில் ஜப்பானியக் கடற்படையுடன் இடம்பெற்ற மோதல்களில் கூட்டுப் படைகள் வெற்றிபெற்றன.
- 1943-நாசிஜேர்மனியில் அனைத்து ஜிப்சிகளையும் யூதர்களுக்கு இணையாக வதைமுகாம்களுக்கு அனுப்ப உத்தரவிடப்பட்டது.
- 1948-இலங்கையில் மலையகத் தமிழரின் வாக்குரிமை பறிக்கப்பட்டது.
- 1949-நாதுராம் கோட்சே, மற்றும் நாராயண் ஆப்டே இருவரும் மகாத்மா காந்தியைக் கொலை செய்யததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு தூக்கிலிடப்பட்டனர்.
- 1966-ஜெமினி 12 விண்கலம் அட்லாண்டிக் கடலில் பாதுகாப்பாக இறங்கியது.
- 1969-வியட்நாம் போர்: வாசிங்டன்டிசியில் 2 இலட்சத்து 50 ஆயிரம் தொடக்கம் 5 இலட்சம் பேர் வரை போருக்கெதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பங்குப்பற்றினர்.
- 1970-சோவியத்தின் லூனா தானூர்தி சந்திரனில் தரையிறங்கியது.
- 1971-இண்டெல் நிறுவனம் உலகின் வர்த்தகரீதியிலான முதலாவது 4004 என்ற Single - chip microprocessor ஐ வெளியிட்டது.
- 1983-வடக்கு சைப்பிரஸ் துருக்கியக் குடியரசு நிறுவப்பட்டது. துருக்கி மட்டுமே இதனை அங்கீகரித்தது.
- 1988-சோவியத் ஒன்றியத்தின் ஆளற்ற பூரான் விண்ணோட்டம் தனது முதலாவதும் கடைசியுமான பயணத்தை ஆரம்பித்தது.
- 1988-பாலஸ்தீன நாடு பாலஸ்தீன தேசிய கவுன்சிலினால் அறிவிக்கப்பட்டது.
- 1990-அட்லாண்டிஸ் விண்ணோட்டம் எஸ்.ரி.எஸ்-38 கப்பலை விண்ணுக்குக்கொண்டுசென்றது.
- 2002-ஹு சிங்தாவ் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் பொதுச் செயலாளர் ஆனார்.
- 2000- இந்தியாவில் ஜார்க்கண்ட் தனிமாநிலமாக உருவாக்கப்பட்டது.
- 2007- வாங்க தேசத்தில் கிளம்பிய பெரும் சூறாவளியினால் 5 ஆயிரம் பேருக்கு மேல் கொல்லப் பட்டனர்.

### பிறப்புக்கள்

- 1738-வில்லியம் ஹேர்ச்செல், விண்கோள் யுரேனசைக் கண்டுபிடித்த ஜெர்மன் விஞ்ஞானி (இ.1822)
- 1986-சானியா மிர்சா, இந்தியாவின் டென்னிஸ் வீராங்கனை

### இறப்புக்கள்

- 1630-ஜொஹான்னெஸ் கெப்லர், ஜெர்மானிய கணிதவியலாளரும், வானியலாளரும் (பி.1571)
- 1917-எமில் டேர்க்கேம், பிரெஞ்சு சமூகவியலாளர் (பி.1858)
- 1961-இலங்கையர்கோன், ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர், நாடகாசிரியர்

### இலங்கையர்கோன்



இலங்கையல்கோன் என்ற பெயரில் எழுதிய த.சிவ ஞானசுந்தரம், 1915 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 6 ஆம் திகதி பிறந்தார். இவர் தமிழில் சிறுகதை தோன்றி வளர்ந்த காலத்தில் அதன் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பு செய்தவர்களில் ஒருவர் என்று பாராட்டுப் பெற்றவர். இவர் விமர்சனம், நாடகம் ஆகிய துறைகளிலும் ஈடுபாடு காட்டினார்.

வழக்கறிஞராகவும், திருகோணமலையில் நிர்வாக சேவையில் காரியதிகாரியாகவும் பணிபுரிந்தார். சமஸ்கிரு தம், இலத்தீன், தமிழ் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இவர் ஆழ்ந்த பயிற்சி பெற்றார்.

தனது பதினெட்டாவது வயதிலே முதற்கதையான *மரியமதலேனா* வை எழுதியிருந்தாலும் 1944 ஆம் ஆண்டு வெளியான *வெள்ளிப்பாதரசம்* என்ற சிறுகதை இலங்கையர்கோனை அடையாளப்படுத்தியது.

இலங்கையர்கோன் 1961 ஆம் ஆண்டு ஒக்டோபர் 14 ஆம் திகதி தனது 46 ஆவது அகவையில் அகால மரணமடைந்தார். அவரது இறப்பின் பின்னர் இலங்கையர்கோனின் 15 சிறுகதைகள் கொண்ட *வெள்ளிப்பாதரசம்* தொகுதி 1962 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

# உயிருள்ள, உயிரற்ற ஒவ்வொன்றின் மீதும் காதல்கொள்ளலாமே? தவறில்லை!



நான்கு அரியர்களை வைத்து இருக்கும் என் மாணவன், யாரோ ஒரு பெண்ணுக்கான மூன்று மணி நேரம் தெருவில் காத்திருப்பதைக் கவனித்தேன். நன்றாகப் படிக்க வேண்டும். வாழக்கையில் முன்னுக்கு வரவேண்டும் என்ற ஆர்வத்தைவிட ஒரு பெண் பின்னால் சுற்றும் ஆர்வம்தானே அவனுக்கு அதிகமாக இருக்கிறது? இன்றைக்கு இளைஞர்களைச் செலுத்தும் ஒரு சக்தி காதலாக இருப்பது ஆரோக்கியமான நிலையா? ஒரு துறவியிடம் கேட்கிறேன் என்று தப்பாக நினைக்காதீர்கள் என்று அண்மையில் கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் என்னிடம் கேட்டார்.

நான் துறவி அல்ல. முழுமையான காதலன்! என்று சிரித்தேன். நான் கல்லூரியில் ஆங்கில இலக்கியம் படித்தபோது எங்களுக்கு ஓர் ஆசிரியை இருந்தார். ஆங்கிலக் கவிதைகள் பற்றிப் பாடம் நடத்துவார். சரியாகப் புரிந்துகொள்ளாத மாணவர்களைப் பார்த்து காதல் இல்லாமல் கல்லைப்போல் உட்கார்ந்தால், கவிதை எப்படிப் புரியும்? போய், மகாராணி காலேஜ் முன்னால் நின்று பாருங்கள். காதல் வந்தால் கவிதையும் தானே வரும் என்பார்.

ஈஷா நடத்தும் பள்ளிக்கூடத்தில் ஜூன் மாதத்தில் திடீர் என்று மழை பிய்த்துக்கொண்டு கொட்டியது. பள்ளி ஆசிரியர்கள் பெரிய பெரிய பாடத் திட்டங்களுடன் வந்து என்னைச் சந்தித்தார்கள்.

நான் ஒரு குழந்தையாக இருந்தால் இப்படி எல்லாம் வகுப்பு நடத்தும் பள்ளிக்குப் போகவே மாட்டேன். குழந்தைகளைச் சும்மா காட்டுக்குள் கூட்டிப்போங்கள். ஆற்றில் விளையாடட்டும். மழையில் நன்றாக நின்று நனைந்து ஊறட்டும். அதன் பிறகு அழைத்து வாருங்கள் என்றேன்.

குழந்தைகள் குதூகலமாக மழையில் விளையாடினார்கள். போதும் என்று தோன்றிய பிறகு உள்ளே வந்தார்கள். இப்போது அவர்களிடம் மழைபற்றி உணர்வுப் பூர்வமாக ஓர் ஆர்வம் வந்துவிட்டது. மழையின்மீது பிறந்த காதல், அதுபற்றிய விஞ்ஞானத்தை அறிந்துகொள்வதிலும் வந்துவிட்டது. மழையின் புவியியல் பின்னணி என்ன? உயிர்களுக்கும் மழைக்குமான தொடர்பு என்ன? மழையை வைத்து நம் நாட்டின் வரலாறு, கலாசாரம், பொருளியல், இரசாயனம், சமூகவியல் என்று அனைத்தைப்பற்றியும் அவர்களிடம் பேச முடிந்தது.



ஆன்மீகம் 38

எதன் மீதாவது ஆர்வம் வந்துவிட்டால் அதுபற்றி அறிந்துகொள்ளாமல் தூங்க முடிவது இல்லை. அந்த ஆர்வத்தைத் தூண்டிவிடாமல் பாடப் புத்தகங்களை எழுதினால், தொட்டுப் பார்க்கவே பிடிக்காமல் போகிறது. தொட்டுத் திறந்தாலே... தூக்கம்தான் வருகிறது.

இது எப்படி மாணவனின் தப்பாகும்? பாடப்புத்தகத்தை ஒரு காதல் கதை மாதிரி எழுதி இருந்தால் ஏன் படிக்காமல் தவிர்க்கப்போகிறார்கள்? அறிவியலையும் வரலாற்றையும் கணிதத்தையும் காதலுக்குரிய சுவாரஸ்யத்தோடு எழுதக் கூடாதா? காதலை கெமிஸ்ட்ரி என்பவர்கள், கெமிஸ்ட்ரியைக் காதலாகத் தர முடியாதா? பாடத்தின்மீது காதல் பிறப்பதுபோல் அமைக்காத கல்வி முறையின் மீதுதானே அடிப்படைத் தவறு?

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**



# பிரதமர் பங்கேற்காதபோதிலும், தமிழகம் போராட்டங்களை நிறுத்தவில்லை

“இதோ, அதோ” என்று எதிர்பார்த்துக் காத்திருந்த அறிவிப்பு இந்தியாவின் சார்பில் வெளிவந்து விட்டது. "இலங்கையில் நடைபெறும் கொமன்வெல்த் மாநாட்டில் இந்திய பிரதமர் மன்மோகன்சிங் கலந்து கொள்ள மாட்டார். அவருக்குப் பதில் வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் தலைமையிலான குழு கலந்து கொள்கிறது" என்ற அதிகாரபூர்வ அறிவிப்பு வெளிவந்து விட்டது. தமிழகத்தில் நடைபெற்ற போராடடங்களின் பிரதிபலிப்பா அல்லது இலங்கையில் நடந்த போரின்போதும்சரி, அதற்குப் பிறகும்சரி தமிழர் களுக்கான அதிகாரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற பல விஷயங்களில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்ற கோபமா என்பது தெரிய வில்லை. கொமன்வெல்த் மாநாட்டில் பிரதமர் பங்கேற்காததற்கு என்ன காரணம் என்பதை விளக்கிச் சொல்ல வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லக் கண்ணு அறிவித்துள்ளார். அதுபோல் விளக்க அறிக்கை வந்தால் மட்டுமே என்ன காரணத்திற்காக பிரதமர் பங்கேற்கவில்லை என்பது வெளிச்சத்திற்கு வரும்.

இதற்கிடையில் இந்த அறிவிப்பு தமிழகத்தில் உள்ள "திருப்தி அலைகளை" வீச வைத்திருக்கிறதா? என்றால் அடுத்தடுத்து நடைபெறும் போராட்டங்கள் அப்படியில்லை என்பது போல்தான் தோற்றத்தைக் கொடுக்கிறது. ஏனென்றால் இந்தமுறை கொமன் வெல்த் விஷயத்தில் தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் அனைத்துமே ஓரணியில் நின்றன என்பதே அதற்கு காரணம். "பெயரளவில் கூட யாரும் கொமன்வெல்த் மாநாட்டில் இந்தியா சார்பில் கலந்து கொள்ளக் கூடாது" என்று தமிழக சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்றியது. தமிழக முதல்வர் ஜெயலலிதா முன்மொழிந்த இந்த தீர்மானத்தை ஒரு மனதாக அனைத்துக் கட்சிகளும் இணைந்து நிறைவேற்றின. இன்னும் சொல்லப்போனால் மத்தியில் ஆட்சியில் இருக்கும் காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களே ஆதரித்த தீர்மானம். அதேபோல் தமிழகத்தில் பிரதான எதிர்கட்சியாக இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் அதன் தலைவர் கருணாநிதி, "இந்தியாவிலிருந்து ஒரு துரும்பு கூட கொமனவெல்த் மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது" என்று வற்புறுத்தி வந்தார். தமிழகத்தில் பிரதான கட்சிகளாக இருக்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் இணைந்து ஒரே கோரிக்கையை அரிய சந்தர்பங்களில்தான் வைப்பார்கள். அந்த இணைப்பு இலங்கையில நடக்கும் கொமென்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கும் விஷயத்தில் உருவானது.

பல்வேறு விஷயங்களில் எதிரும் புதிருமாக இருக்கும் இந்த இரு கட்சிகளும் கொமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கும் விவகாரத்தில் ஒரு மாதிரியான முடிவினை எடுத்தது காங்கிரஸ் கட்சியை மட்டுமல்ல, தமிழகத்தில் இலங்கை தமிழர்களுக்காகப் போராடும் மற்ற கட்சிகளை திணற வைத்தது என்றே சொல்ல வேண்டும். இலங்கை தமிழர் பிரச்சினை என்றால், வைகோ, பழ.நெடுமாறன், சீமான், கோவை ராமகிருஷ்ணன், குளத்தூர் மணி போன்றோர்தான் உக்கிரத்துடன் பேசுவார்கள். பிரச்சினையை தமிழகம முழுவதும் எடுத்துச் செல்வார்கள் என்ற நிலை இருந்தது. ஆனால் அ.தி.மு.க.வும், தி.மு.க.வும் ஒரே மாதிரியான கோரிக்கையை கொமன்வெல்த் மாநாடு விவகாரத்தில முன் வைக்க மற்ற தலைவர்களும், அந்தக் கட்சிகளின் போராட்டங்களும் பிரதானப்படுத்தப்படவில்லை. காங்கிரஸ் கட்சிக்கோ இடியாப்பச் சிக்கலாக மாறியது. தமிழகத்தில் உள்ள வெற்றி பெற வைக்கும் முக்கிய கூட்டணிக் கட்சிகள் அ.தி.மு.க.வும், தி.மு.க.வும் தான். இந்த இரு கட்சிகளுமே கொமன் வெல்த் பிரச்சினையை முன்னிலைப்படுத்தி காங்கிரஸை தமிழகத்தில் தனிமைப்படுத்தும் முயற்சியில் இறங்கியதில் சற்று சங்கடப் பட்டுப் போனார்கள் என்றே சொல்ல வேண்டும.

இதன் விளைவாக மத்திய நிதியமைச்சர் சிதம்பரம் தி.மு.க. தலைவர் கருணாநிதியை சந்தித்து "கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்கும் முடிவை பிரதமர் இன்னும் எடுக்கவில்லை" என்று கூறிவிட்டுச் சென்றார. தமிழகத்தில் தேர்தலில் நின்று ஜெயிக்க வேண்டும் என்று நினைத்த காங்கிரஸ் தலைவர்கள் எல்லாம் "இந்தியாவின் சார்பில் பிரதமர் பங்கேற்கக் கூடாது" என்பதை வலியுறுத்தி வந்தார்கள். ஏன் எப்போதுமே வேறு கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கும் தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் கூட, "பிரதமர் பங்கேற்காமல் இருந்தால் நல்லது" என்று கருத்துச் சொன்னார். காங்கிரஸ/க்கு இந்த மாநாட்டின் போது ஏற்பட்ட இன்னொரு பிரச்சினை அக்கட்சிக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லாதது. இதற்கு முன்பு இலங்கையில் போர் நடைபெற்ற காலகட்டத்தில் காங்கிரஸ் கட்சிக்கு 35 சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். அவர்களின் தயவில்தான் அப்போது தி.மு.க. தலைவர் கருணாநிதி தமிழக முதலமைச்சராக இருந்தார். அதனால தான் இலங்கை தமிழர் பிரச்சினைக்காக மனித சங்கிலி நடத்தியது, மத்திய அமைச்சரவையிலிருந்து விலகுவேன் என்று விடுத்த மிரட்டல், தமிழகத்தில் நடந்த போராட்டங்கள் எல்லாவற்றையும் காங்கிரஸ் கண்டு கொள்ளாமல் இருந்தது. ஏனென்றால் தி.மு.க.வின் உதவி எப்படி மத்திய அரசுக்குத் தேவையோ அதைவிட முக்கியமாக காங்கிரஸின் உதவி தமிழகத்தில் ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள தி.மு.க.விற்கு தேவை என்ற நிலைமை இருந்தது.

ஆனால் இன்றைய நிலைமை அப்படியில்லை. காங்கிரஸ் கட்சிக்கு தமிழக சட்டமன்றத்தின் மொத்த எண்ணிக்கையான 234 உறுப்பினர்களில் 5 பேர் மட்டுமே இருக்கிறார்கள். இவர்களின் தயவில் இன்றைய அ.தி.மு.க. அரசோ அதன் முதலமைச்சர் ஜெயலலிதாவோ இல்லை. அதே போல் தி.மு.க.வும் காங்கிரஸின் தயவில் இல்லை. இப்படி காங்கிரஸிற்கு குறைந்துபோன முக்கியத்துவம் இலங்கை பிரச்சினையில் அ.தி.மு.க. மற்றும் தி.மு.க. ஆகிய இரு கட்சிகளையும் ஓரணியில் சேர வைத்தது- அதாவது ஒரே கோரிக்கையை முன் வைக்க வழி வகுத்தது.

எம்.காசிநாதன் (தொடரும்)

# வடக்கு தமிழர்கள் முழுமையான சுதந்திரத்தை அனுபவிக்கின்றனர்

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

(கொழும்பு)

போர் முடிவுக்கு வந்த பின்னர் வடக்கில் வாழும் தமிழர்கள் முழுமையான சுதந்திரத்தின் மகிழ்ச்சியை அனுபவித்து வருவதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்தியாவின் தமிழகத்தில் வாழும் தமிழர்களை விடவும் இலங்கையின் வடக்கில் வாழும் தமிழர்கள் மகிழ்ச்சியான சுதந்திரத்தை அனுபவித்து வருகிறார்கள் என குறிப்பிட்டார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அமைச்சர் இதனை கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

வலிகாமத்தில் உள்ள தமது காணிகள் சுவீகரிக்கப்பட்டமைக்கு எதிராக மக்கள் நடத்தும் ஆர்ப்பாட்டங்களை அரசாங்கம் தடுப்பதில்லை.

வலிகாமம் வடக்கை சேர்ந்த காணி உரிமையாளர்கள் இராணுவம் தமது காணிகளை சுவீகரிப்பதற்கு எதிராக அண்மையில் உண்ணாவிரதம் இருந்தனர்.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு, இந்த நாடு சர்வாதிகார ஆட்சியின் கீழ் இல்லை. பொதுநலவாய நாடுகளின் மாநாட்டின் கவனம் பொதுநலவாய அமைப்பு தொடர்பாகவே இருக்கும். இலங்கை தொடர்பில் அதன் கவனம் இருக்காது என்றார்.

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் இந்திய பிரதமர் கலந்து கொள்ளாதது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், இந்த விடயம் தொடர்பாக இலங்கையை விடவும் இந்தியாவே அதிகம் வருத்தப்பட வேண்டும் என்றார்.

அவுஸ்திரேலியா உள்ளிட்ட உலக நாடுகளின் தலைவர்கள் இம் மாநாட்டில் கலந்து கொள்வது பாராட்டத்தக்கது எனவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

# கமரூன்- விக்னேஸ்வரன் இன்று யாழில் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

பிரிட்டிஷ் பிரதமர் டேவிற் கமரூன் உள்ளிட்ட அந்நாட்டு பிரதிநிதிகள் வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் மற்றும் வடக்கு மாகாண அமைச்சர்களை யாழ்ப்பாணத்தில் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

இன்று வெள்ளிக்கிழமை வடக்கு மாகாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் பிரிட்டிஷ் பிரதமர் வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கி வாழ்ந்து வரும் மக்களை சென்று சந்தித்து கலந்துரையாடவுள்ளார் என தெரியவந்துள்ளது.

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வதற்கென வருகை தரும் பிரதமர் டேவிற கமரூன் வடக்கு மாகாணத்திற்கும் விஜயம் மேற்கொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விஜயத்தின் போது பிரதமர் கமரூன், யாழ்ப்பாணத்தில் வைத்து முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரன் மற்றும் வடக்குமாகாண அமைச்சர்களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

அத்துடன் பல துறைசார்ந்தவர்களையும் பலதரப்பட்ட பொது அமைப்பை சேர்ந்தவர்களையும்பிரதமர் உள்ளிட்ட பிரிட்டிஷ் பிரதிநிதிகள் சந்திப்பர். அவ்வேளை வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலவரம் தொடர்பாக கலந்துரையாடவுள்ளனர் எனத் தெரியவருகிறது.

வலி.வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் தங்களை மீள் குடியேற்றுமாறு வலியுறுத்தியும் இராணுவத்தினரால் தமது வீடுகள் இடித்து அழிக்கப்படுவதை தடுத்து நிறுத்தக் கோரியும் கடந்த 12 ஆம் திகதி முதல் இன்று வெள்ளிக்கிழமை வரை தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில் பிரிட்டிஷ் பிரதமர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தருவதும் அவருடன் சனல்-4 தொலைக்காட்சி நிருபர்கள் வருகை தருவதும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

அத்தோடு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்பு இலங்கையின் வடபகுதிக்கு வருகை தரும் முதலாவது சர்வதேச நாடொன்றின் தலைவர் என்ற காரணத்தினாலும் டேவிற் கமரூனின் வருகை பெரும் எதிர்ப்பார்பை ஏற்படுத்தியுள்ளது. இதேவேளை பிரிட்டிஷ் பிரதமரின் வடக்குவிஜயம்தொடர்பானபாதுகாப்பு ஏற்பாடுகளை கண்காணிப் பதற்காக பிரதமரின் பாதுகாப்பு தரப்பின் அதிகாரிகள் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4-6)

# சந்திரிகாவின் பெயரை பயன்படுத்தி நிதிமோசடி


(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் பெயரைப் பயன்படுத்தி கடனாவில் தொழில் வாய்ப்பு பெற்றுவருவதாக கூறி பல நபர்களை ஏமாற்றி நிதி மோசடி செய்த பெண்ணொருவர் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டுவருகின்றன.

சந்தேக நபரான குறித்த பெண் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக கொழும்பு மோசடி தடுப்பு பிரிவு பொலிஸார் கொழும்பு பதில் நீதவான் ஏ.நிஷாந்த பீரிசிற்கு அறிவித்தனர்.

அமா என்று அழைக்கப்படும் திலுபா விஜேகுணசேகர என்ற பெண் தனது பெயரை பயன்படுத்தி நிதி மோசடியில் ஈடுபட்டு வருவதாக முன்னாள் ஜனாதிபதி பொலிஸ்மா அதிபருக்கு எழுத்து மூலம் முறைப்பாடு செய்துள்ளதாக மோசடி தடுப்பு பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

முறைப்பாட்டில் முன்வைக்கப்பட்டுள்ள கையடக்கத் தொலைபேசியின் இலக்கம் சம்பந்தமாக முழுமையான விபர அறிக்கை பெறப்பட வேண்டும் என தெரிவித்த பொலிஸார், பெண் பற்றிய தகவல்கள் இதுவரை கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டனர். (அ-2)





கல்வி, விளையாட்டு, இளைஞர் அமைச்சின் அலுவலக கட்டடம் நேற்று ஆடியபாதம் வீதியில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் இவ் அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ஏ.கே. சண்முகநாதன் நாடாவெட்டி கட்டடத்தை திறந்து வைப்பதையும் அமைச்சர் த.குருகுலராஜா பால் காய்ச்சி நிகழ்வை ஆரம்பிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:என்.குமார்)

# பொதுநலவாய மாநாட்டு கொள்கைகளை மீறிய மஹிந்தவுக்கு தலைவர் பதவியை வழங்குவதா?

## மங்கள சமரவீர எம்.பி.கேள்வி

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் சில நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.



கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

பொதுநல்வாய நாடுகள் அமைப்பின் தலைவர் பதவி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கிடைக்கப் போகிறது. இந்த தலைவர் பதவி முதல்முறையாக இப்போதுதான் இலங்கைக்கு கிடைக்கிறது என்றில்லை.

1983ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்தன்வுக்கு பொதுநலவாய நாடுகளின் தலைவர் பதவி கிடைத்த பொழுதும் அதனை அவர் ஏற்றுக்கொள்ளாது நிராகரித்தார்.

மாநாட்டிற்கான நிதியை செலவிடமுடியாது என்ற காரணத்தால் அன்றைய ஜனாதிபதி ஜெயவர்த்தன அதனை நிராகரித்தார்.

எனினும் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைவர் பதவியை மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டார். இதன் காரணமாக பொதுமக்களின் பணம் விரயமாகி வருகிறது.

இந் நாட்டை வென்று உலகத்தை வெல்வோம் என்பதே இம்முறை பொதுநலவாய நாடுகள் மாநாட்டின் தொனிப் பொருளாகும்.

எனினும் இலங்கை அரசாங்கம் கோடிக் கணக்கான பணத்தை செலவிட்டு கண்காட்சி நடத்தி வருகிறது. ஆனால், இந்த பணம் புஷ்வாணம் போல் விரயமாகி போகும்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைவர் பதவியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரண்டு ஆண்டுகளுக்கு ஏற்பது செயற்பாட்டு ரீதியானதல்ல. அது செயற்பாட்டு ரீதியாக இருக்க வேண்டுமாகில் பொதுநலவாயத்தின் 16 கொள்கைகளை அமுல்படுத்த வேண்டும்.

இவற்றில் மனித உரிமைகள், சுற்றாடல் பாதுகாப்பு, ஏனைய இனங்கள் மீது நம்பிக்கை கொள்வது போன்ற கொள்கைகள் அடங்குகின்றன.

இந்த கொள்கைகளை இலங்கை கடந்த காலங்களில் மீறியுள்ளது. இதனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பொதுநல வாய அமைப்பின்தலைவர்பதவியை வழங்குவது பொருத்தமானதா? என்ற கேள்வி எழுகிறது என்றார். (அ-2)

## மண்டப திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

சைவ வித்தியா விருத்திச் சங்க மண்டப திறப்பு விழா எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலி சைவ சிறுவர் இல்லத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் கலந்து கொள்ளவுள்ளார் .சிறப்பு விருந்தினராக நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் தி.விஸ்வரூபன் கலந்து கொள்வார். (அ-5)

# மக்ரேயை பகிரங்க விவாதத்திற்கு அழைக்கிறார் சவேந்திர சில்வா

(கொழும்பு)

சனல் 4 தொலைக்காட்சியின் ஊடகவியலாளர் கெல்லம் மக்ரேவிற்கு, மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா சவால் விடுத்துள்ளார். சனல்4 தொலைக்காட்சியின் ஊடாக இலங்கைக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப் பட்டுள்ளன. இது தொடர்பிலான காணொளிகளை மக்ரே வெளியிட்டிருந்தார்.

இந்த காணொளிகள் தொடர்பில் தம்முடன் பகிரங்க விவாதம் ஒன்றை நடத்த முடியுமா என ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான நியூயோர்க்கின் இலங்கைக்கான பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா சவால் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் விவாதம் நடத்த வருமாறு அமெரிக்காவில் சவால் விடுத்த போது, மக்ரே அதனை ஏற்றுக்கொள்ளவில்லை என சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

மக்ரே இலங்கைக்கு விஜயம் செய்துள்ள நிலையில் இங்கு விவாதம் நடத்துவது பொருத்தமானதாக அமையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இலங்கையில் எந்தநேரத்திலும் எதுவும் நடக்கலாம்

## வெள்ளைவான் ஆவணப்பட தயாரிப்பாளர் லீனா

(கொழும்பு)

எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற மன நிலையை மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் இலங்கை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளதாக வெள்ளைவான் கதைகள் ஆவணப்படத்தின் தயாரிப்பாளரும் நெறியாளருமான லீனா மணிமேகலை தெரிவித்துள்ளார்.

சனல் 4 தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பான நேர்காணலில் அவா மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் தனக்கு எதிரானவர்களையும் மாற்று கொள்கைகளை கொண்டுள்ளவர்களையும் கடத்திச் செல்வதற்காக வெள்ளை வான்களை பயன்படுத்துகிறது. விசாரணைக்காக கடத்திச் செல்லப்படுவோர் மீண்டும் திரும்புவதில்லை. கடத்திச் செல்லப்பட்டவர் மீண்டும் திரும்பினர் என்ற செய்திகள் இதுவரையில் இல்லை.

வெள்ளை வான்களில் வந்து விசாரணைக்காக கடத்தப்பட்டவர்கள் மீண்டும் திரும்பப் போவதில்லை என்பதை அறிந்திருப்பார்கள்.

போர் முடிந்து விட்டது எனக் கூறிய போதிலும், பாதுகாப்பு நிலைமைகளால் அச்சம், மன அழுத்தங்களை மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர் என லீனா மணிமேகலை தெரிவித்துள்ளார். (அ-2)

# உலகத் தலைவர்களின் மட்டுநகர் விஜயம் இரத்துச் செய்யப்பட்டது

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டுக்கு வருகை தந்துள்ள அரச தலைவர்கள் மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் கிழக்கு மாகாணத்திற்கான விஜயம் இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

20 நாடுகளின் பிரதிநிதிகளின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான விஜயம் இரத்து செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்திய மட்டக்களப்பு அரசாங்க அதிபர் பி.எம். எஸ். சார்ள்ஸ் குறி த்த பிரதிநிதிகள் வேறு இடங்களுககு விஜயம் செய்யவிருப்பதாலேயே அவர்களது மட்டக்களப்பு மாவட்டத் திற்கான வருகை இரத்து செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றார்.

பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகளின் வருகை இரத்து செய்யப்பட்டுள்ளமை தொடர்பாக நேற்று முன்தினம் மாலையில்தான் தங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு சிவில் சமூகம் கூறுகின்றது. இது தங்களுக்கு ஏமாற்றத்தையும் கவலையும் தந்துள்ளதாக சிவில் சமூகப் பிரதிநிதியொருவர் குறிப்பிட்டார்.

அதேவேளை இம் மாநாட்டிற்கான வருகையின் போது பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸ் மட்டக்களப்பு விஜயமொன்றை மேற்கொளவதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே செய்யப்பட்டிருந்தன. மட்டக்களப்பு மாவட்டத்திற்கு அவர் விஜயம் செய்யமாட்டார் என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# தமிழர்கள்மீது அக்கறை இருந்தால் இலங்கையுடன் ஒத்துழையுங்கள்

## தமிழகத்திடம் பிரதி சபாநாயகர் கோரிக்கை

(கொழும்பு)

**இலங்கைத் தமிழ் மக்கள் மீது தமிழ்நாட்டுக்கு உண்மையான அக்கறை இருப்பின் இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் நேர்மையான நல்லிணக்க நடவடிக்கைகளுக்கு அது உதவ வேண்டும். அதனை விடுத்து இங்கு தனிநாடொன்றை உருவாக்க நினைப்பார்களாயின் அதைக் கடுமையாக நாம் எதிர்ப்போம் என்று பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.**

கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் செய்தி சேகரிப்பதற்காக தமிழகத்திலிருந்து வருகை தநதுள்ள இந்திய தமிழ்த் தொலைக்காட்சி சேவையான புதிய தலைமுறைக்கு கருத்து வெளியிட்ட போது அவர்இந்தக் கருத்தை தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட பின்னர் வடக்கு, கிழக்கு மக்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு, கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அதே போல், நல்லிணக்க நடவடிக்கைகளையும் அரசாங்கம் நேர்மையாக மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் தமிழ் மக்கள் மீது தமிழ்நாட்டிற்கு உண்மையான அக்கறை இருக்கும் பட்சத்தில், எமது அரசாங்கம் மேற்கொண்டு வரும் நல்லிணக்க நடவடிக்கைகளுக்கு உதவ வேண்டும்.

அதனைவிடுத்து இங்கு தனிநாடொன்றை உருவாக்க நினைப்பார்களாயின் அதை நாம் எதிர்ப்போம். ஏனது தனிப்பட்ட கருத்து யாதெனில், அதிக தமிழ் மக்கள் வாழும் இடம் என்ற வகையில் தமிழ்நாடே தனிநாடொன்றுக்கு உகந்த இடமாக இருக்கும். எப்படியிருப்பினும், இந்தியாவுடனான உறவு என்பது எமக்கு மிக முக்கியமானதாகும்" என்றும் அவர் கூறினார். (அ-2)

# யாழில் சர்வதேச வர்த்தக கண்காட்சி

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சி 2014 ஆம் ஆண்டு ஜனவரிமாதம் 17 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை 5 ஆவது தடவையாக துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

வழமைபோன்று யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றம் இலங்கை கண்காட்சிகள் மற்றும் மாநாடுகள் சேவைகள் தனியார் நிறுவனம் ஆகியன இணைந்து இவ் வர்த்தக கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளன.

தொழிற்றுறை அபிவிருத்தியில் ஒரு மைல்கல்லாக அமைந்துள்ள இக் கண்காட்சி வடபகுதிக்கும் இலங்கையின் ஏணைய பிரதேங்களுக்குமிடையே ஓர் இணைப்பு பாலமாக விளங்குவதுடன் வர்த்தக மற்றும் கைத்தொழில் தொடர்புகளைப் பலப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருகின்றது.

வழமைபோன்று இம்முறையும் 250 இற்கும் மேற்பட்ட பல்வேறு தரப்பட்ட துறைசார் கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறையினர் இக் கண்காட்சியில் தத்தமது உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்கவுள்ளனர்.

எனவே மேற்படி கண்காட்சியில் காட்சிக் கூடங்களை அமைக்க விரும்புவோர் இல. 124, இராசாவின்தோட்டம் வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றத்துடன் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும். மேலதிக விபரங்களுக்கு 021 222 6609 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றம் அறிவித்துள்ளது. (அ)

# மாநாட்டுக்கு வராத காரணத்தை இந்திய பிரதமர் கூறவில்லை

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டுக்குதான் வருகை தராமைக்கான காரணம் எதையும் இந்திய பிரதமர் கூறவில்லையென வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் ஊடகங்களுக்கு கூறியுள்ளார்.

இதேவேளை, இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களையிட்டு அங்கத்துவ நாடுகளின் விசனங்கள் பற்றி கேட்டபோது, மனித உரிமைகள் தொடர்பான முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு பொதுநலவாயம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன்வேலை செய்கின்றதென கமலேஷ் சர்மா கூறினார்.

இதற்கும் மேலாக சித்திரவதை பற்றிய தேசிய விசாரணை அமைப்பு ஒன்றை உருவாக்க பொதுநலவாய செயலகம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் வேலை செய்கின்றதென சர்மா கூறினார்.

மாநாட்டில் கலந்து கொள்ளாத தலைவர்கள் பற்றி அளவுக்கதிகமான கவனம் செலுத்தாது ஊடகங்கள் பெரும்பான்மையாக பொதுநலவாய நாடுகளின் ஆர்வம் மிக்க பற்றுதலுடன் இடம்பெறும் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்கள் பற்றி முக்கிய கவனத்தை செலுத்த வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# ஆஸி, நியூசிலாந்து எம்.பிக்களை அதிகாரிகள் தடுத்துவைக்கவில்லை

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்த நிலையில் விசா விதிமுறைகளை மீறியதாக கண்டு பிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தவறான செய்தி வெளியிடப்பட்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தடுத்து வைக்கப்பட்டு அல்லது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாக சில ஊடகங்கள் தவறாக செய்தி வெளியிட்டுள்ளன.

அவுஸ்திரேலிய செனட்டர் லீ ரைனோன் மற்றும் நியூசிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஜான் லோகி ஆகியோர் சுற்றுலா விசா அனுமதியில் அண்மையில் இலங்கைக்கு வந்து , அந்த விசா விதிமுறைகளை மீறியதாகவும் அதிகாரிகளினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் கடந்த 10 ஆம் திகதி வெளிவிவகார அமைச்சு வெளியிட்டிருந்த அறிக்கையில் தெரிவித்திருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கொழும்பு அலுவலகத்தில் கடந்த 10 ஆம் திகதி ஒழுங்கு செய்திருந்த ஊடக மாநாடு ஒன்றில் சில வெளிநாட்டினர் கலந்து கொள்ள உள்ளதாக இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு எச்சரிக்கை விடுத்திருந்தது.

இதனையடுத்து அதன் அதிகாரிகள் மேற்படி இரு வெளிநாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அவர்களின் விசா நிலை குறித்து விசாரித்தனர் என வெளிவிவகார அமைச்சு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியது.

ரைனோன் மற்றும் லோகி ஆகியோர் சுற்றுலா விசாவில். இலங்கைக்கு வந்து அரசியுல் செயற்பாடுகளில் ஈடுபட போவதாகவும் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து பல அரசியல் கூட்டங்களில் கலந்து கொள்ள இருப்பதாகவும் தெரியவந்தது.

இதனடிப்படையில் இவர்கள் குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தின் 28 ஆம் பிரிவின் விசா விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறியுள்ளமை தெளிவாகியது.

எனினும் எந்த சந்தர்ப்பத்திலும் இந்த வெளிநாட்டு பிரதிநிதிகள் தடுத்து வைக்கப்படவோ, விசாரணைக்கு உட்படுத்தப்படவோ இல்லை.

குடிவரவு அதிகாரிகள் இவர்களின் விசாக்களை சரி பார்க்கும் முன்னர், அவர்கள் கொழும்பில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தனர்.

இந்த நிலையில் நடந்த சம்பவங்களை மறைத்து ஊடகங்களும், கொழும்பில் உள்ள அவுஸ்திரேலிய தூதரகமும் குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குடிவரவு அதிகாரிகளினால் ரோணுகா ஹோட்டலில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டதாகவும் அவர்களின் கடவுச்சீட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் தெரிவித்திருந்தன.

இந்த நிலையில் நாட்டில் இருந்து வெளியேறிய இரண்டு பிரதிநிதிகளும், இலங்கை குடிவரவு அதிகாரிகள் தமக்கு வழங்கப்பட்ட விசா அனுமதியை மீறி செயற்பட்டதாக குற்றம் சுமத்தியுள்ளனர்.

அத்துடன் இவர்கள் விசாக்களை இணையத்தளம் வழியாக பெற்றிருந்ததுடன் சிட்னியில் உள்ள இலங்கை தூதரகத்தில் பெற்றதாக தவறாக குறிப்பிட்டுள்ளனர் என்றும் வெளிவிவகார அமைச்சு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# இலங்.மாநாட்டை புறக்கணியுங்கள்; மலேசிய பிரதமரிடம் கோரிக்கை

இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற மனித உரிமை மீறல்களுக்கு எதிராக மலேசியா கடுமையான செய்தியை வெளியிடவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

பக்காடான் ராக்யட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

பக்காடான் ராக்யட் கட்சியின் பினாங் மாநில முதலமைச்சரான லிம்குவான் எங், பிரதம மந்திரி நஜீப் அப்துல் ரசாக்கிடம் விடுத்துள்ள கோரிக்கையின்படி இந்திய பிரதமரின் தீர்மானத்தை தாமும் பின்பற்றவேண்டும் என்று கோரியுள்ளார்.

கொழும்பு மாநாட்டை புறக்கணிப்பதன் மூலம் இலங்கைக்கு கடும் செய்தி ஒன்றை மலேசியாவினால் அனுப்பமுடியும் என்று குவான் எங் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏற்கனவே நிறவெறிக்கு எதிராக குரல் கொடுக்கும் வகையில் தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற மாநாட்டை மலேசியா புறக்கணித்தமையை குவான் கோடிட்டு காட்டியுள்ளார். (அ-2)



யோகர் சுவாமிகள் குருபூசையை முன்னிட்டு சிவத் தொண்டனால் வெளியிடப்பட்ட பவளவிழா மலரை சுவாமி சித்ரூபானந்தா வழங்க யாழ்.பிரதம தபால் அதிபர் ஐயாத்துரை லோகஞானம் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.

# தெற்காசிய வல்லரசான- அமெரிக்காவுடன் போட்டி போடும் நாடாக இருந்த இந்தியா, இன்று...?

வாஜ்பாய் காலம்வரை உறுதியாக இருந்த இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை, அதற்குப் பின்னர் பலவீனப்பட்டுப்போய் விட்டதாக, இந்திய ஆய்வாளர்கள், ஊடகங்கள் வலுவாக குற்றஞ்சாட்டும் நிலையைக் காண முடிகிறது.

இலங்கை விவகாரத்தில் எடுத்து வைக்கக்கூடிய அடி ஒன்றே, இந்தியாவின் உறுதிப்பாட்டைத் தீர்மானிக்கும் திறன் கொண்டதாக இருந்த போதிலும் இந்தியா அதற்கு செவி சாய்க்கும் நிலையிலில்லை.

விடுதலைப்புலிகள் இயக்கம் எப்போது அழிக்கப் பட்டதோ, அத்துடன் இலங்கைமீது இந்தியா கொண்டிருந்த கடைசிப்பிடியும் விடுபட்டுப்போய்விட்டது.

இப்போது எதையும் நிறைவேற்றுமாறு இலங்கை அரசாங்கத்திடம், அழுத்தம் கொடுக்கும் நிலையில் இந்தியா இல்லை. வலியுறுத்தலுக்கு அப்பால், அதை நடைமுறைப் படுத்துவதை உறுதிப்படுத்தும் வலிமையைக்கூட இந்தியா கொண்டிருக்கவில்லை.

அண்மைக்காலத்தில் இலங்கை விவகாரத்தில் இந்தியா சாதித்த மிகப்பெரிய விடயம் என்னவென்றால் வடக்கு மாகாணசபைக்குத் தேர்தலை நடத்த அழுத்தம் கொடுத்த விவகாரம்தான். அதுகூட கொமன்வெல்த் மாநாடு என்ற கருவியைப் பாவித்தே இந்தியா சாதித்துக்கொண்டது.

கொமன்வெல்த் மாநாட்டு விடயத்தில் இந்தியா உறுதியான நடவடிக்கையை எடுத்திருந்தது போன்று, வடக்கு மாகாணசபைக்குத் தேர்தலை நடத்தியதுபோன்று அரசியல் தீர்வு, பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் என்பனவற்றிலும் சாதகமானதொரு நிலையை எடுக்கச் செய்திருக்க முடியும்.

ஆனால், இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை, சீனாவையும் பாகிஸ்தானையும் மையப்படுத்திச் சுழலத் தொடங்கியதால் அவற்றைச் சார்ந்தே முடிவுகளை எடுக்க வைத்தது.

இலங்கையுடன் சீனாவும் பாகிஸ்தானும் கொண்டுள்ள நெருக்கம், தமக்கு பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தி விடுமோ என்ற கலக்கம் இந்தியாவுக்கு இருப்பது உண்மை. அதனால் தான் கொமன்வெல்த் மாநாட்டுக்குச் சென்றேயாக வேண்டும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சு, பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு தொடர் அழுத்தங்களைக் கொடுத்தது. இப்படியொரு இக்கட்டான நிலை எப்படி ஏற்பட்டது என்று இந்திய வெளிவிவகார அமைச்சு சிந்தித்ததா என்று தெரியவில்லை.

2009 இற்கு முன்னர் இப்படியான நிலை ஏற்பட்டிருக்கவில்லை. காரணம், இந்தியாவைப் புறக்கணித்துக்கொண்டு அல்லது பகைத்துக்கொண்டு எதையும் செய்ய முடியாத நிலையில் அப்போது இலங்கை இருந்தது.

விடுதலைப்புலிகளை அடக்கும் விடயத்தில் இந்தியாவின் உதவி இலங்கைக்குத் தேவைப்பட்டதால், இலங்கை அரசாங்கம் ஒரு போதும் எல்லைமீறத் தயாராக இருக்கவில்லை.

போர் முடிவுக்கு வந்த பின்னர், எல்லாமே தலைகீழாகிவிட்டது. இந்தியாவின் பேச்சைக்கேட்கும் அளவுக்கு இலங்கைக்குப் பொறுமையில்லை.


இத்தகைய நிலையில் சீன, பாகிஸ்தான் அச்சுறுத்தலை சமாளிக்க, இலங்கையுடன் ஒட்டவும் முடியாத- வெட்டவும் முடியாத உறவுக்குள் இந்தியா சிக்கிப் போயுள்ளது.

இலங்கை அரசாங்கம் தன்னைப் பல சந்தர்ப்பங்களில் புறக்கணிக்கிறது- அவமானப்படுத்துகிறது என்பதை இந்தியா உணர்ந்தேயிருக்கிறது.

ஆனால், அதற்காக இலங்கையுடன் பகைத்துக் கொள்வதை தவிர்த்துக் கொள்கிறது.

கொமன்வெல்த் மாநாட்டு விடயத்தில்கூட, இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் பங்கேற்பது குறித்து முடிவு செய்வது மிகப்பெரிய விவகாரமேயில்லை. ஏனென்றால், மன்மோகன்சிங் பிரதமராக இருந்த காலத்தில், ஒரேயொரு கொமன்வெல்த் மாநாட்டில்தான் பங்கேற்றுள்ளார். எனவே, அவர் கொழும்பு வராமல் போனால்கூட, அதை ஒரு விவகாரமாக்க வேண்டியதில்லை. மாநாட்டைப் புறக்கணித்ததாக காரணம் கூறாது, வேறு எத்தனையோ வழிகளில் அதனை நியாயப்படுத்தியிருக்கலாம். அல்லது பேசாமலேயே இருந்திருக்கலாம். இறுதிக்கட்டம் வரை தீர்மானத்தை எடுப்பதை பிற்போடாமல் எப்போதோ, இதை அறிவித்திருந்தால்கூட இந்தளவுக்கு சர்ச்சைகள் ஏற்பட்டிருக்காது.

ஜெனீவா தீர்மானங்களை ஆதரிப்பதற்கு இந்தியா எந்தளவுக்கு இழுத்தடித்து கடைசி நேரம்வரை காத்திருந்ததோ, அதுபோன்றே, கொமன்வெல்த் மாநாட்டு விடயத்திலும் நடந்துகொண்டது. இதனால், இந்திய அரசு என்றுமில்லாத நெருக்கடியை சந்தித்தது மட்டுமன்றி, இந்தளவுக்குப் பலவீனமான நிலையில் இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை இருக்கிறதா என்றும் கேள்வி எழுப்பவும் செய்துவிட்டது.




அதுமட்டுமின்றி, இந்த சர்ச்சையின் விளைவாக இந்திய வெளிவிவகாரக் கொள்கை யாருக்கானது என்ற வினாவையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்திய அரசுக்கானதா, இந்திய மக்களுக்கானதா, பிறநாடுகளுக்கானதா அல்லது ஆளும் காங்கிரஸ் கட்சிக்கானதா?

கொமன்வெல்த் மாநாட்டில் பிரதமர் மன்மோகன்சிங் பங்கேற்பது தொடர்பாக, எடுக்கப்பட்ட முடிவுகள், பின்னர் அவை மீளாய்வு செய்யப்பட்டன என்று எல்லாமே இந்தக் கேள்விகளை எழுப்ப வைத்துள்ளன.

உள்நாட்டு அழுத்தங்களுக்காக, இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையை விட்டுக்கொடுக்க முடியாது என்றார் இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர். அவ்வாறாயின், இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை இந்திய மக்களுக்கானது இல்லையா? என்ற கேள்வி எழுந்தது.

முதலில், பிரதமர் மன்மோகன்சிங் கொமன்வெல்த் மாநாட்டுக்குச் செல்ல காங்கிரஸ் உயர்மட்டக் குழு ஒப்புதல் கொடுத்தது.

மத்திய அமைச்சர்கள் எதிர்க்கத் தொடங்கியதும், மன்மோகன்சிங்கின் முடிவே தமது முடிவு என்று நழுவியது காங்கிரஸ்.

அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்க முடியாது போனபோது, இதுகுறித்து முடிவெடுக்கும் அதிகாரத்தை காங்கிரஸ் தலைமையிடம் விட்டது இந்திய அரசாங்கம்.

இதனால், இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை காங்கிரசுக்கானதா? அல்லது இந்திய அரசுக்கானதா? என்ற கேள்வி எழுந்தது.

கொமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணித்தால், அதைப் பயன்படுத்தி, சீனா போன்ற நாடுகள் இந்தியாவுக்கு எதிராக காய்களை நகர்த்திவிடும் என்று சுதர்சன நாச்சியப்பன் போன்ற அமைச்சர்கள் வெளிப்படையாகவே கூறினார்கள். இந்த நிலையில் கொமன்வெல்த் மாநாடு குறித்த விடயத்தை உள்ளடக்கிய இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையை தீர்மானிப்பது, இந்தியாவா? அல்லது பிறநாடுகளா? என்ற கேள்வி எழும்பியது. இப்படியே அடுக்கடுக்கான சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்கும் காரணமாகியுள்ளது கொமன்வெல்த் மாநாடு.

ஒருவர் மாறி ஒருவராக முடிவெடுக்கும் அதிகாரத்தை தமது பொறுப்பில் இருந்து தட்டிக்கழிப்பதிலேயே குறியாக உள்ளனர்.

மன்மோகன்சிங் கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்க முடிவு செய்திருந்தால் முதலில் கொழும்பு வரப்போவதில்லை என்றும் யாழ்ப்பாணம் சென்றுவிட்டே கொழும்பு வருவார் என்றும் ஒரு திட்டம் இருந்திருக்ககூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால், அதாவது முதலில் மன்மோகன்சிங் யாழ்ப்பாணம் சென்றால் அது இந்தியாவின் தடுமாற்றங்கள் பலவற்றுக்கு முடிவுகட்டுவதாக இருக்கும்.

இலங்கைப் பிரச்சினை விடயத்தில் இதற்கு முன்னர் இந்தியா கொண்டிருந்த, பாத்திரத்தை மீண்டும் கையில் எடுக்கப்போகிறதோ, என்ற கலக்கத்தை அது இலங்கைக்கு ஏற்படுத்தியிருக்கும்.

-ஹரிகரன்-

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

# 17.11.2013-15.12.2013



## மேடம்

**அச்சுவினி, பரணி,
கார்த்திகை 1 ஆம் பாதம்**

**எண்ணிய காரியத்தை எளிதில் முடிக்கும் மேட இராசிநேயர்களே!
தொட்ட காரியங்கள் வெற்றிபெறும்!**

## ஐந்தில் சஞ்சரிக்கும் செவ்வாய் அற்புத பலன்களை அள்ளி வழங்கப்போகிறார்

கார்த்திகை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் இராசிநாதன் செவ்வாய் மகத்தான இடத்தில் சஞ்சரிக்கிறார். 5 இல் சஞ்சரிக்கும் செவ்வாய் அற்புதப் பலன்களை உங்களுக்கு அள்ளி வழங்கப்போகிறார். கண் எதிரில் சில வாய்ப்புக்கள் வந்தும் கைகூடவில்லையே என்று கவலைப் பட்டவர்கள் இனிக் கவலைப்படத் தேவையில்லை.

பொன்னான எதிர்காலத்தை அமைத்துக்கொள்ள புதிய நண்பர் கள் உங்களுக்கு வந்திணைவர். பூர்வீக சொத்துக்களில் பல நாட்களாக பஞ்சாயத்து வைத்தும் அது நல்ல முடிவிற்கு வரவில்லையே என்று ஆதங்கப்பட்டவர்கள் இம்மாதத்தில் செயற்பாடுகள் வெற்றிகரமாக முடியப் போவது கண்டு ஆச்சரியப் படுவர்.

குருவின் பரிபூரண பார்வை உங்கள் இராசிக்கு 11 ஆம் இடத்தில் பதிகிறது. லாப ஸ்தானம் புனிதமாவதால் தொழிலில் எதிர்பார்த்த லாபம் இருமடங்காகவே வந்து சேரும். மேலும் அந்த குரு வக்ரம் பெற்று இருப்பதால் அதிக நன்மைகள் உங்களுக்கு கிடைக்கும்.

விரயாதிபதி வக்ரம் பெறுவது நன்மைதான். விரயத்திற்கேற்ற வரவு உங்களுக்கு வந்துகொண்டேயிருக்கும். அதே நேரத்தில் 9 க்கு அதிபதியாகவும் குரு விளங்குகிறார். எனவே, பங்காளிப்பகை மற்றும் தந்தையின் உடன் பிறப்புக்கள் வழியே செய்த முயற்சிகளில் தாமதம் போன்றவைகள் உருவாகலாம். இருப்பினும் உங்கள் இராசியிலேயே கேது சஞ்சரிப்பதால் ஆன்மீகத்தின் மூலம் நீங்கள் வாழக்கையை சிறப்பாக அமைத்துக் கொள்ள இயலும்.

மாதத் தொடக்க நாளிலேயே திருக்கார்த்திகை வருகிறது. உங்கள் இராசிநாதன் செவ்வாய் என்பதால் முருகப்பெருமான் வழிபாட்டை நீங்கள் முறையாக மேற்கொண்டால் முன்னேற்றத்தின் முதற் படிக்கு செல்லலாம். அந்த அடிப்படையில் முருகப்பெருமானுக்கு உகந்த திருக் கார்த்திகை வருவதால் அன்றைய தினம் விரதமிருந்து வள்ளி-தெய்வானை சமேத முருகப்பெருமானை அருகில் இருக்கும் ஆலயங்களுக் குச்சென்று வழிபட்டு வாருங்கள். தீபம் ஏற்றினால் பாவம் விலகும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

நவம்பர் 28 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3,6 க்கு அதிபதியான புதன் 8 இல் மறைவது யோகம்தான். விபரீத இராஜயோக அடிப்படையில் புதன் உங்களுக்கு நற்பலன்களை அள்ளி வழங்கப்போகிறார். சகோதர ஸ்தானத் திற்கும் எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகிய ஸ்தானத்திற்கும் அதிபதியாக விளங்கும் புதன் அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் பொழுது உடன்பிறப் புக்கள் உங்களுக்கு உதவிக்கரம் நீட்டுவர்.

**கவலையைக் கொடுக்குமா கன்னிச்செவ்வாய்?**

கன்னிச்செவ்வாய் கடலும் வற்றும் என்பது பழமொழி. ஆனால், உங்கள் இராசியைப்பொறுத்தவரை அஷ்டமாதிபதியாகவும், செவ்வாய் திகழ்கிறார். எனவே, மறைவிடங்களில் வரும்பொழுதெல்லாம் மகத்தான பலன்களை உங்களுக்கு வழங்குவார். எனவே, இந்தச் செவ்வாய் பெயர்ச்சி உங்களுக்கு சிறப்பான பெயர்ச்சி தான்.

**மகர சுக்ரனின் சஞ்சாரம்!**

சுக்ரன் டிசம்பர் 3 ஆம் திகதி மகர இராசியில் சஞ்சரிக்கப்போகிறார். 2,7 க்கு அதிபதி 10 இல் சஞ்சரிக்கும் பொழுது தொழிலில் இருந்த மந்த நிலை மாறும். பிள்ளைகளின் கல்யாணக்கனவுகளை நனவாக்க எடுத்த முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும். இம்மாதம் இரண்டு சனிப்பிரதோஷங்கள் வருகின்றன. அந்த பிரதோஷ நாட்களில் நந்தியெம் பெருமானை வழிபட்டால் பிரச்சினைகளிலிருந்து விடுபட இயலும். வார வழிபாடாக செவ்வாய் தோறும் வள்ளிமணாளப்பெருமானை வழிபட்டு வந்தால் செல்வ வளம் பெருகும்.

## சிவல்புரி சிங்காரம்



## இடபம்

**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள்,
ரோகிணி, மிருகசீரிடம்
1,2 ஆம் பாதங்கள்**

**நல்ல காரியங்களை நடத்தி உள்ளம் மகிழும் இடப இராசிநேயர்களே!
நினைத்தது நிறைவேறும்!**

## திட்டமிடாது செய்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி நிச்சயம்

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் இராசிநாதன் சுக்ரன் 8 இல் மறைகிறார். அவரை அஷ்டம ஸ்தானத்திற்கு அதிபதியான குரு வக்ரம் பெற்றுப் பார்க்கிறார். சுக்ரன் உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்திற்கும் அதிபதியாவார். 6 க்கு அதிபதியும், 8 க்கு அதிபதியும் ஒன்றை ஒன்று பார்த்துக்கொள்ளும் விதத்தில் மாதத் தொடக்கம் அமைவதால் திட்டமிடாமல் செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். தெய்வீக நாட்டம் அதிகரிக்கும். வர்த்தக தொழில் சம்பந்தமாக நீங்கள் எடுத்த முடிவு வருமானத்தை பெருக வைக்கும்.

6 இல் சனி ராகுவோடு கூடி இருப்பதால் எப்பொழுதும் போலவே உழைப்பு அதிகமாகவே இருக்கும். எதிரிகள் உங்கள் முன்னால் நல்லவர்களைப் போல இனம் காட்டிக்கொள்வர். அரசு வழி ஆதரவு எதிர்பார்த்தபடி கிடைக்கும். அதிக பிரயாசை எடுத்தும் முடியவில்லையே என்று கவலைப்பட்ட காரியங்கள் இம்மாதத்தின் மையப்பகுதியில் துரிதமாக நடைபெறத் தொடங்கும்.

சுகாதிபதி சூரியன் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து உங்கள் இராசியைப் பார்ப்பதால் உஷ்ணம் சம்பந்தப்பட்ட உபத்திரங்கள் உங்கள் உடலுக்கு வந்து சேரலாம்.

வியாழன் வக்ர கதியில் இம்மாதம் இயங்குவதால் உங்கள் இராசிநாதன் சுக்ரன் ஆவார். அவருக்கு பகைக் கிரகமாக விளங்குபவர் வியாழன். எனவே, அவர் வக்ரம் பெறும் பொழுது மிகுந்த நன்மை கிட்டும். எதிரிகள் உதிரிகள் ஆவர். அடகு வைத்த நகைகளை மீட்டுக்கொண்டு வந்து அலங்கரித்துப் பார்க்கும் யோகம் உண்டு.

**விருச்சிக புதனின் சஞ்சாரம்!**

நவம்பர் 28 ஆம் திகதி விருச்சிக இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். 2,5 க்கு அதிபதியான புதன் 7 இல் சஞ்சரிக்கப் போகிற பொழுது குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பிள்ளைகளின் கல்வி நலன் கருதியும் கடல் தாண்டும் முயற்சி கருதியும் கல்யாண வாய்ப்பு கருதியும் செய்யும் ஏற்பாடுகளில் வெற்றி கிட்டும். வாயில்தேடி வந்த வரன்கள் திரும்பிச்செல்கின்றனவே என்ற கவலை இனி அகலும். சூரியனோடு இணைந்த புதனால் புத- ஆதித்ய யோகம் உருவாகிறது. எனவே, மாமன், மைத்துனர் வழி ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கன்னிச்செவ்வாய் என்ன செய்யும்?**

உங்கள் இராசிக்கு 7,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் விளங்குகிறார். இவர் நவம்பர் 30 ஆம் திகதி கன்னி இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். 12க்கு அதிபதி 5 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும்பொழுது பிள்ளைகள் வழியில் விரயம் ஏற்படலாம். கொடுக்கல்- வாங்கல்களில் பற்றாக்குறை ஏற்படும். பயணங்கள் அதிகரிக்கும். நம்பிக்கைக்கு உரியவர்களை ஆலோசித்து சில நல்ல முடிவுகளை எடுக்க முன்வருவீர்கள். விரயாதிபதி செவ்வாயின் பார்வை லாப ஸ்தானத்திலும் அஷ்டம ஸ்தானத்திலும் பதிவதால் உடல் நலனுக்காகவும் ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உருவாகலாம்.

**மகர சுக்ரனின் சஞ்சாரம்!**

டிசம்பர் 3 ஆம் திகதியில் மகர இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் இராசிநாதன் 9 இல் சஞ்சரிப்பது யோகம்தான். குடும்பத்தில் குதூகலம்கூடும். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும். புண்ணிய காரியங்களுக்காக செலவிட்டு மகிழ்வீர்கள். வீடுவாங்குவது சம்பந்தமாக எடுத்த முயற்சியி லும் வீட்டு பராமரிப்புச் செலவிலும் கவனம் செலுத்துவீர்கள். தந்தைவழி அனுகூலம் கிட்டும்.

இம்மாதம் இரண்டு சனிப்பிரதோஷங்கள் வருகின்றது. அன்றைய தினம் நந்தியெம்பெருமானையும் உமா மகேஸ்வரனையும் வழிபடுவது நலம் சேர்க்கும். (தொடரும்)

# வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வந்த பல வசதிகளை இடைநிறுத்துகிறது Google

கூகுள் நிறுவனம் எப்போதும் தன் வாடிக்கையாளர்களுக்குப் பல புதிய வசதிகளை, அடிக்கடி, பெரும்பாலும் இலவசமாகத் தந்து கொண்டிருக்கும். ஆனால், அதே கூகுள் நிறுவனம், தான் வழங்கி வந்த பல வசதிகளை எந்தவித ஆரவாரமும் இன்றி நிறுத்துகின்றது என்றால், அது உங்களுக்கு வியப்பினைத் தரும். 2013 ஆம் ஆண்டில் இவ்வாறு நிறுத்தப்பட்ட, மூடப்பட்ட வசதிகளை இங்கு பார்க்கலாம்.

1. கூகுள் ரீடர் (Google Reader RSS reader): சென்ற ஜூலை மாதம் நிறுத்தப்பட்ட இந்த சேவை குறித்துப் பலர் தங்கள் ஆச்சரியத்தைத் தெரிவித்துள்ளனர். இந்த சேவை, சென்ற 2005 ஆம் ஆண்டுமுதல், கூகுள் வாடிக்கையாளர்களுக்குக் கிடைத்து வந்தது. இதனைப் பயன்படுத்தியவர்கள், பெரிய அளவில் இல்லை என்றாலும், அது தொடர்ந்து குறைந்து கொண்டே வந்தது. இருப்பினும், இதனை மிக விரும்பிய சிலர், இணையத்தில் இது தொடர வேண்டும் என மனுவெல்லாம் கொடுத்துப் பார்த்தனர். ஆனால், கூகுள் தனக்கெனக் கொண்டிருந்த அளவு கோலின் அடிப்படையில் இந்த சேவையினை நிறுத்தியது. இந்த வசதிக்கு இணையான இன்னொரு வசதியை கூகுள் அல்லது வேறு யாரும் தரவில்லை.

2. ஐகூகுள் (iGoogle); இந்த தனி நபர் ஹோம் பேஜ் தரும் இணைய தளம், 2005 ஆம் ஆண்டு முதல் இயங்கி வந்தது. இந்த நவம்பர் 1 முதல் நிறுத்தப்பட்டது. இது கைவிடப்படும் செய்தி, ஜூலை 2012 இலேயே அறிவிக்கப்பட்டது. குரோம் மற்றும் ஆண்ட்ராய்ட் போன்ற சிஸ்டங்களில் இயங்கும் புதிய வகை அப்ளிகேஷன்கள் வந்த பின்னர், ஐகூகுள் டூலினை காலம் கடந்த பழைய பெருங்காய டப்பா என்று கூகுள் கருதியது. எனவே இதனை மூடப் போகிறோம் என்று முன்பாகவே அறிவித்தது. 16 மாதங்களுக்கு முன்பாகவே அறிவிப்பு வெளியிடப்பட்டு, இதனைப் பயன்படுத்திய வாடிக்கையாளர்கள், தங்கள் டேட்டாவினை, நகர்த்திக் கொள்ள போதுமான காலம் தரப்பட்டது.

3. லேட்டிட்யூட் (Latitude): ஆண்ட்ராயட் சிஸ்டத்தில் இயங்கும் கூகுள் மேப் அப்ளிகேஷனுடன் இணைந்து செயல்படும் டூலாக இது வெளியானது. ஐ.ஓ.எஸ். சிஸ்டம் இயங்கிய சாதனங்களிலும் இது கிடைத்தது. மேப்பில் ஓர் இடத்தை அடையாளம் காண, அதன அட்சரேகை (Latitude) கொடுத்துப் பார்க்கும் வசதியினை இந்த டூல் தந்தது. ஆனால், இந்த வசதி பின்னர் வந்த புதிய மேப் களிலிருந்து எடுக்கப்பட்டது. ஓகஸ்ட் மாதத்தில் முழுவதுமாக நீக்கப்பட்டது. இந்த டூல் வழங்கப்பட்ட ஆண்டு 2009. இப்போது இயங்கப்படும் இடத்தை மையமாகக் கொண்டு மேப் பயன்படுத்தும் வசதியை கூகுள் தன் கூகுள் ப்ளஸ் இல் தந்து வருகிறது.

4. சொந்த ஆய்வுக்கு 20 சதவீத நேரம் (Google 20% Time): கூகுள் நிறுவனத்தில் ஊழியர்கள் பணிபுரியும் விதம் பற்றிக் கூறுகையில், அவர்கள் தங்கள் சொந்த ஆய்வுப் பணியினை, வாரத்தில் 20 சதவீத நேரம ஒதுக்கி மேற்கொள்ளலாம் என்ற சுதந்திரம் தரப்படுவதனைப் பெருமையாகக் கூறுவார்கள். கூகுள் இதனை நிறுத்திவிட்டது. பலர் இதனை மிக மோசமான நடவடிக்கை என்றும், இதனால், சுதந்திரமான ஆய்வு கூகுள் நிறுவனத்தில் அற்றுப் போய்விடும் என்றும் கூக்குரலிட்டனர்.

ஆனால், தன் ஊழியர் மற்றும் பணிக் கலாசாரக் கட்டமைப்பில் மேற்கொண்டுள்ள மாற்றத்தில் இதுவும் ஒன்று என கூகுள் இந்த நிறுத்தத்தினை மேற்கொண டது.

5. பில்டிங் மேக்கர் (BUILDING MAKER): கூகுள் எர்த் மற்றும் கூகுள் மேப் ஆகிய அப்ளிகேஷன் புரோகிராம்களில், முப்பரிமாண மாடல்களை உருவாக்க இந்த டூல் பயன்படுத்தப்பட்டது. இதனை சென்ற ஜூன் 1 முதல் விலக்கிக் கொண்டது கூகுள். இருப்பினும் ஏற்கனவே, இதனைக் கொண்டு முப்பரிமாண படங்களை உருவாக்கியவர்கள், இதன் கிடங்கிலிருந்து அவற்றைப் பெற்று, பயன்படுத்திப் பார்க்கலாம். தற்போது கூகுள் எர்த் மற்றும் மேப்ஸ் அப்ளிகேஷன்களில், இதே முப்பரிமாண படங்களை உருவாக்க, டூல்கள் தரப்பட்டுள்ளன.

6. க்ளவ்ட் கனெக்ட் (CLOUD CONNECT): இது ஒரு ப்ளக் இன் புரோகிராமாக, கூகுளால் தரப்பட்டது. கூகுள் ட்ரைவில், நாம் உருவாக்கும் பைல்கள் தாமாக சேவ் செய்யப்பட இந்த டூல் பயன்பட்டது. பின்னர், கூகுள் ட்ரைவினை நம் கணனியில் இன்ஸ்டால் செய்து இந்த வசதியினை மேற்கொள்ளும் வகையில், கூகுள் மாற்றத்தை ஏற்படுத்தியது. கணனி மட்டுமின்றி, மேக் மற்றும் ஆண்ட்ராய்ட் சாதனங்களிலும் இதே வசதி தரப்பட்டது. ஆனால், இந்த வசதி சென்ற ஏப்ரல் 30 முதல் நிறுத்தப்பட்டது.

7. பிளாக்பெரிக்கான கூகுள் வாய்ஸ் (GOOGLE VOICE APP FOR BLACKBERRY): ஏற்கனவே பிளாக் பெரி கீழ் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இந்நிலையில், தான் அளித்த இந்த டூலை, கூகுள் வாபஸ் பெற்றுள்ளது. இந்த அப்ளிகேஷனுக்கான தன் சப்போர்ட்டினை தரப்போவதில்லை என கூகுள் அறிவித்துள்ளது. இதனைப் பயன்படுத்திய பிளாக்பெரி வாடிக்கையாளர்களை, கூகுள், எச்.டி.எம்.எல். 5 பயன்படுத்துமாறு கூறிவிட்டது.

8. கூகுள் சிங்க் (GOOGLE SYNC (Consumer version): இதனைப் பயன்படுத்தி, கூகுள் மெயில், கூகுள் காலண்டர் மற்றும் தொடர்புகளை, மைக்ரோசொப்ட் எக்சேஞ்ச் ஆக்டிவ் சிங்க் ப்ரோடோ கால் மூலம் பயன்படுத்தும் வகையில், கூகுள் வடிவமைத்துத் தந்தது. ஆனால், பின்னர் கூகுள் நிறுவனத்தின் தொழில் நுட்பமான CardDAV வந்த பின்னர், கூகுள் சிங்க் நிறுத்தப்பட்டது. ஆனால், ஏற்கனவே இதனைப் பயன்படுத்திய வாடிக்கையாளர்கள், தொடர்ந்து இதனைப் பயன்படுத்த முடியும். மேலும் வர்த்தக ரீதியான இதன் தனி டூல் இன்னும் பயன்பாட்டில் தான் இருக்கிறது. இருப்பினும், இந்த டூலைப் பொறுத்தவரை, கூகுள் இதனை அதன் சமாதிக்கு அருகே கொண்டு சென்று விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். மேலே கூறப்பட்ட வசதிகளுடன், மேலும் சில சிறிய அளவிலான டூல்கள், வசதிகளை கூகுள் நிறுவனம் நிறுத்தி உள் ளது. அவற்றில் சில வசதிகள், சில நாட்டு வாடிக்கையாளர்களுடன் மட்டுமே தொடர்புள்ளவை என்பதால், இங்கு பட்டியல் இடப் படவில்லை.





# 30 வருட பூர்த்தியை எட்டும் விண்டோஸ் இயங்குதளம்

கணனி உலகை ஆட்டிப்படைக்கும் மைக்ரோசொப்ட் நிறுவனத்தினால் அறிமுகப் படுத்தப்பட்ட விண்டோஸ் இயங்குதளமானது தற்போது 30 வருட பூர்த்தியை எட்டியுள்ளது.

மைக்ரோசொப்ட் நிறுவனரான பில் கேட்ஸ் 1983ம் ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் திகதி விண்டோஸ் இயங்குதளத்தின் முதற் பதிப்பினை வெளியிட்டிருந்தார்.

எனினும் இது கட்டளைகள் மூலம் இயங்கக்கூடியதாக (Command Line Interface) காணப்பட்டது. அதன் பின் இரண்டு வருடங்கள் கழித்து 1985ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் திகதி கிராபிக்ஸ்ஸினை அடிப்படையாகக் கொண்ட இயங்குதளம் (Graphical User Interface) அறிமுகப்படுத்தப்பட்டது.


# சூரியப் படலத்திலிருந்து மின்சக்தி பெறும் ஜப்பான்



ஜப்பான் நாட்டில் மின்சக்தி தேவையை பூர்த்தி செய்வதில் புக்குஷிமா அணு உலையானது பெரும் பங்கு வகித்து வந்தது.

எனினும் தற்போது அது பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 70 மெஹா வோட்ஸ் மின்னை உற்பத்தி செய்யக்கூடிய இராட்சத சூரியப் படலம் ஒன்றினை Kyocera நிறுவனம் நிறுவியுள்ளது. 3,665 அடிகள் நீளமான இந்த சூரியப் படலத்திலிருந்து பிறப்பிக் கப்படும் மின்சக்தியானது 22,000 வீடுகளுக்கு விநியோகிக்கக் கூடியவாறு இருக்கும் என இந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

# ஜப்பான் விஞ்ஞானிகளின் படைப்பில் செயற்கைக் குரல்வளை



மனிதன் கதைக்கும்போது குரல் வளையிலுள்ள குரல் நாண்கள் அதிர்வதன் மூலம் ஒலி பிறப்பிக்கப்படுவது யாவரும் அறிந்ததே. இந்த இயற்கையின் விந்தையை தற்போது செயற்கையாக நிகழ்த்திக் காட்டியுள்ளனர் ஜப்பான் விஞ்ஞானிகள்.

அதாவது மனிதனின் குரலவளைக்கு ஒத்த செயற்கையான குரல்வளையினை உருவாக்கியுள்ளனர். இதன் மூலம் குரல்வளையிலிருந்து எவ்வாறு ஒலி பிறப்பிக்கப்படுகின்றது என்பதை துல்லியமாக விபரிக்கக்கூடியவாறு இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# தெளிகரை கிராமத்தில் குடியேறிய மக்களை வெளியேறுமாறு அறிவிப்பு

## பூநகரி வனவளத் திணைக்களம் அதிரடி

(மல்லாவி)

**பூநகரி பிரதேச செயலர் பிரிவில் பள்ளிக்குடா கிராமசேவகர் பிரிவில் உள்ள தெளிகரை கிராமத்தில் பிரதேச செயலக அனுமதியுடன் குடியேறிய 11 குடும்பங்களை காணியைவிட்டு உடன் வெளியேறுமாறு பூநகரி வனவளத் திணைக்கள உத்தியோகத்தர்கள் மிரட்டி வருவதாக பாதிக்கப்பட்ட மக்கள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருக்கும் மற்றும் வடக்கு மாகாண சபையின் முதல்வருக்கும் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.**



இது தொடர்பில் தெரியவருவது, வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் பல வழிகளிலும் பாதிக்கப்பட்டு உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட நிலையில் இடம்பெயர்ந்து வவுனியா அருணாச்சலம் நலன்புரி முகாமில் வசித்து வந்து பின்னர் கடந்த 2009 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 30ஆம் திகதி பூநகரி பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கே இவ் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

இம்மக்கள் காணிகள், வீடுகள் இல்லாதிருந்து பின்னர் உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். இவர்கள் பூநகரி பிரதேச செயலரிடம் காணி கோரி விண்ணப்பித்திருந்ததையடுத்து பூநகரி, மன்னார் வீதிக்கு அருகில் உள்ள தெளிகரை கிராமத்தில் ஒரு குடும்பத்திற்கு தலா அரை ஏக்கர் காணிவீதம் காணிகள் வழங்கப்பட்டன.

குடியிருப்பதற்கு தற்காலிக வீடுகள் எதுவும் அமைத்துக் கொடுக்கப்படாத நிலையில் பூநகரி பிரதேச செயலகத்தினூடாக ஐக்கிய நாடுகளுக்கான செயலகம் இம்மக்களுக்கு தற்காலிக கூடாரங்களை வழங்கியிருந்தது.

இதனையடுத்து இம்மக்கள் காட்டை துப்புரவு செய்து அளிக்கப்பட்ட கூடாரங்களையும் மற்றும் ஓலைக்குடிசைகளையும் அமைத்து வாழ்ந்து வந்துள்ளனர்.

இந்நிலையில் சிலர் இக்குடும்பங்களுக்கு நிரந்தர மலசலகூடங்களையும் அமைத்துக் கொடுத்துள்ளனர். தற்போது இவர்கள் குடியிருக்கும் காணிகள் தங்களுடையவை என பூநகரி வனவளத் திணைக்களத்தினர் உரிமை கோருவதுடன் உடனடியாக காணி களை விட்டு எழும்புமாறும் அன்றேல் பொலிஸ் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் எனவும் மிரட்டி வருவதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான் மற்றும் செங்கலடி பிரதேச செயலர் பிரிவில் உள்ள மேய்ச்சல் தரைகளில் மகா ஓயா மற்றும் தெகீத்திய கண்டி போன்ற இடங்களில் இருந்து வந்த பெரும்பான்மை இனத்தவர்கள் அத்துமீறி காணிபிடித்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் நாவற்குழி உள்ளிட்ட பல இடங்களில் காணிகள் அபகரிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. முல்லை, கிளி மாவட்டங்களில் இவ்வாறான தொடர்ந்த நில அபகரிப்புக்கள் நடைபெறுகின்ற போதிலும் இவற்றைத் தட்டிக்கேட்க எவரும் இல்லாத நிலையில் காலம்காலமாக இத்தாயக பூமியில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து இடப் பெயர்வில் ஏதிலிகளான இம்மக்கள் சட்ட பூர்வமாக தமக்கு வழங்கப்பட்ட காணிகளில் தாம் நிம்மதியாக குடியிருக்க முடியாத நிலை ஏன்? ஏற்படுகிறது என சம்பந்தப்பட்டவர்களிடம் நீதி வேண்டி நிற்கின்றனர். (அ-ம-15)

## கொக்கிளாய் ஆற்றில் புல்மோட்டை மீனவர்களின் அடாவடி நடவடிக்கை தொடர்கிறது

முல்லை.மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கொக்கிளாய் ஆற்றில் திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த புல்மோட்டை மீனவர்கள் தடிகளை ஊன்றி கூட்டு வலைகளை கட்டி விடுவதால் அப்பகுதி மீனவர்கள் வீச்சுத் தொழிலை மேற்கொள்ள முடியாது பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

மேற்குறித்த ஆற்றில் கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டுக் கேணி, கொக்குத் தொடுவாய் தெற்கு, கொக்குத்தொடுவாய் மத்தி ஆகிய கிராமங்களை சேர்ந்த 350 இற்கு மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடித்தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

போரினால் அனைத்தையும் இழந்து நிர்க்கதியாக்கப்பட்ட நிலையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள இம் மக்கள் கடற்தொழிலையே தமது வாழ்வாதார தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் வெளிமாவட்ட மீனவர்கள் தடைசெய்யப்பட்ட கூட்டு வலையை தடி ஊன்றி கட்டி விடுவதால் வீச்சுத் தொழிலை மேற்கொள்ள முடியாது தமது கஷ்ட நிலையை யாரிடம் சொல்வது என தெரியாது திண்டாடுகின்றனர்.

இவ்வாறு கூட்டுவலையை போட்டுள்ளதால் வீச்சு வலை போடுவதற்கே இடமில்லை. இக்கடற்பரப்பில் விடுவலையும் வீச்சுவலையும் மட்டுமே பயன்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்ட போதிலும் வெளிமாவட்ட மீனவர்கள் இங்கு வந்து தமது வாழ்வாதாரத் தொழிலை மேற்கொள்ள விடாது தடை செய்யப்பட்ட வலையை பயன்படுத்தி தொழிலை மேற்கொள்வது எந்த வகையில் நியாயம் ஆகும் என கேள்வி எழுப்புவதுடன் அதற்கான பதிலை வடமாகாண மீன்பிடி அமைச்சர் தமக்கு கூற வேண்டுமெனவும் கேட்கின்றனர். (ம-267)




## ஜனாதிபதியின் பிறந்தநாளில் மரநடுகை வேலைத்திட்டம்

(மல்லாவி)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தை முன்னிட்டு கடந்த 2010 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தடபட்ட செவனரர மரநடுகை வேலைத்திட்டத்தின் கீழ் இம்முறை இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணி 3 நிமிடத்திற்கு பயன்தரு மரக்கன்றுகளை நடுகை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

கல்வி அமைச்சின் பூரண ஒத்துழைப்புடனும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையுடனும் இணைந்து மேற்கொள்ளப்படும் இத்திட்டத்தில் முல்லை மாவட்டத்தில் உள்ள ஏ-9 வீதி 223 - 224 கி.மீ வரையான பகுதியில் 200 மரக்கன்றுகள் மு/மாங்குளம் மகா வித்தியாலய 200 மாணவர்களினால் நடுகைசெய்யப் படவுள்ளன.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தன், முல்லைத்தீவு வீதியில் 14 - 20 கி.மீ வரை கிளிநொச்சி முரசுமோட்டை மகா வித்தியாலய 100 மாணவர்களால் 100 மரக் கன்றுகள் நடுகை செய்யப்படவுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் ஏ-9 வீதியில் 186 - 187 கி.மீ இல் வவுனியா தமிழ் மகா வித்தியாலய 150 மாணவர்களால் 150 மரக்கன்றுகள் நடுகை செய்யப்படவுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் மதவாச்சி மன்னார் வீதியில் 186 - 188 கி.மீ வரை மன்/புனித சேவியர் தேசிய பாடசாலையின் 200 மாணவர்களால் 200 மரக்கன்றுகளும் யாழ்ப்பாணத்தில் சாவகச்சேரி கடற்கரை - கோட்டை வீதியில் யா/ரோச்சஸ் றோமன் கத்தோலிக்க வித்தியாலய 100 மாணவர்களால் 100 மரக்கன்றுகளும் நடுகை செய்யப்படவுள்ளன.

நாட்டின் ஏனைய இடங்களான மட்டக்களப்பு, திருகோணமலை, நோவூட் மலை நாட்டு பிரதேசம் ஆகிய இடங்களிலும் 450 மரக்கன்றுகள் இதேநேரத்தில் நடுகை செய்யப் படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-15)






மு/முள்ளியவளை தமிழ் வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சித்தியடைந்த மாணவர்களுடன் அதிபர், ஆசிரியர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மல்லாவி செய்தியாளர்)

# இலங்கையின் பொதுநலவாய கனவு நிறைவேறுகின்றது

பொதுநலவாய உச்சிமாநாடு இன்று கொழும்பில் கோலாகலமாக நடைபெறுகின்றது. இதற்கு அரசாங்கம் மில்லியன்கணக்கான நிதியை செலவு செய்து தடல்புடலான வேலைகளில் ஈடுபட்டுள்ளது.

யுத்தம் முடிவுற்று நான்கு வருடங்கள் கடந்துள்ள நிலையில் இலங்கை என்றுமே அமைதியுடன் இருக்கின்றது என்பதை உலகிற்கு காட்ட வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு உண்டு.

ஏனெனில் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்



பட்டு போர்க்குற்ற விசாரணையை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என்றும் அல்லது அந்த விசாரணையை ஐக்கிய நாடுகள் சபை மேற்கொள்ள வேண்டிவரும் என்றும் எச்சரித்திருந்தது.

அத்தோடு இங்கு வருகை தந்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மையார் அவர்கள் இலங்கை அரசாங்கம் சர்வாதிகார போக்குடன் செயற்படுகின்றது என்பதை தனது பத்திரிகையாளர் சந்திப்பின்போது எடுத்தியம்பியிருந்தார். இந்நிலையில்தான் இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடைபெறுகின்றது.

இதன்மூலம் இலங்கை சுதந்திரதேசம். இங்கு எப்பிரச்சினையும் இல்லை என்பதையும் பயங்கரவாதம் தீர்த்துக் கட்டப்பட்டதுதான் இதற்கு காரணம் என்றும் உலகத்தின் செவிப்பறைகளுக்கு சொல்ல இலங்கை அரசு விளைகின்றது.

இதற்காக பொதுநலவாய மாநாட்டில் 53 நாடுகளையும் பங்குகொள்ள வைத்து வெற்றிவாகை சூட இலங்கை பகீரதப் பிரயத்தனம் செய்த வேளையில், சனல் 4 ஊடகம் இசைப் பிரியாவின் படுகொலை காணொலியை வெளியிட்டு இலங்கை அரசை பாடாய்ப் படுத்திவிட்டது. பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளப்போவதில்லை என்ற முடிவை கனடா ஏற்கனவே எடுத்திருந்தமைக்கு இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்தான் காரணம் என்ற அந்த நாட்டின் குற்றச்சாட்டுக்கு இக்காணொலி இன்னும் வலுச்சேர்ப்பதாய் அமைந்துவிட்டது.

ஆயினும் இதைப்பற்றியெல்லாம் அலட்டிக் கொள்ளாத அரசாங்கமோ எல்லாம் போலி என்று ஒரு சொல்லில் பதிலளித்துவிட்டு தனது பொதுநலவாய மாநாட்டு பணியை செவ்வனே செய்துள்ளது.


இசைப்பிரியாவின் காணொலி சர்ச்சையால் வெகுண்டெழுந்த தமிழகமும் புலம்பெயர் உறவுகளும் தத்தம் நாட்டு தலைவர்கள் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதைவிட தொப்புள்கொடி உறவான தமிழகம் ஒருபடி மேல் சென்று மன்மோகன் சிங் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளக்கூடாது என்ற தீர்மானத்தையும் நிறைவேற்றிக்கொண்டது.

இதனால் ஒன்றுக்குப்பின் ஒன்று என அமைச்சரவை கூட்டம்,காங்கிரஸ் கட்சியுடன் கூட்டம் என மத்திய அரசு தலையை பிய்த்துக் கொண்டது. தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு ஏட்டிக்குப் போட்டியாக கருணாநிதியும் அறிக்கைவிட தொடங்கியதுடன் கண்டனங்கள், உண்ணாவிரதங்கள் என தன் கட்சி சார்ந்தவர்களையும் ஈடுபடுத்தினார்.

கருணாநிதிக்கு ஈழத்தமிழர்களில் அக்கறையுண்டோ இல்லையோ தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிக்கை விடுவதில் தன்னை விஞ்சிவிடக் கூடாது என்பதில் அவர் அக்கறையாக இருந்தார் -இருக்கிறார்.

தமிழர்களின் நலன்சார்ந்தே மன்மோகன் முடிபு எடுப்பார் என கருணாநிதி அறிக்கையில் கூறியிருந்தார். அதன்படி மன்மோகன்



சிங் இலங்கையின் மாநாட்டில் கலந்து கொள்ளாது தவிர்த்ததுடன் கடிதம் மூலமும் ஜனாதிபதி மஹிந்தவுக்கு வருத்தமும் தெரிவித்துக் கொண்டார்.

தெற்காசிய நாடுகளில் வல்லரசான இந்தியா அதுவும் ஒரு அண்டை நாட்டின் பிரதமர் இந்த மாநாட்டில் பங்குகொள்ளவில்லை என்பது இலங்கைக்கு பலத்த ஏமாற்றம் என்றே கூற வேண்டும்.

ஆனால், இது குறித்து கருத்து வெளியிட்ட அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெலவோ மாநாட்டில் கலந்து கொள்ளுங்கள் என அழைப்பு விடவேண்டியது நம் கடமை. கலந்து கொள்வதும் விடுவதும் அவர்கள் விருப்பம் என்று கூறி, விழுந்தாலும் மீசையில் மண்முட்டவில்லை என்பதை தனது பதில் மூலம் காட்டிவிட்டார்.

எது எவ்வாறு இருப்பினும் எமது தமிழக சொந்தங்கள் இந்தியா இம்மாநாட்டை முற்றாக புறக்கணிக்க வேண்டும் என்றே வலியுறுத்தி வருகின்றனர். ஆனாலும் இந்தியக் குழு, மாநாட்டில் பங்கேற்க கொழும்புக்கு வந்துவிட்டது.

இதிலிருந்து இந்த மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் மட்டும் கலந்து கொள்ளவில்லையே தவிர இந்த மாநாட்டை இந்தியா ஆதரித்தது என்றே கூறமுடியும்.

உண்மையில் போர்க்குற்றத்தின் பங்காளியான இந்தியா இம்மாநாட்டில் கலந்து கொள்ளாமல் விடுவதுதான் எப்படி? இந்தியா முற்று முழுதாக புறக்கணிக்கவும் முடியாது. ஏனெனில் இலங்கையில் ஆழ ஊடுருவியுள்ள சீனாவால் தனக்கு வரும் தலையிடியை இந்தியா சமாளிக்க வேண்டிவரும். அதற்காக இலங்கையில் சீனா இருப்பதை இந்தியா ஒருபோதும் விரும்பாது.

ஆனாலும் இலங்கையோ உதவி கிடைக்கிறது நாம் பெறுகிறோம் என்ற தோரணையில் இருக்கின்றது.

இந்தியப் பிரதமர் கலந்து கொள்ளாமைக்கு போர்க்குற்ற விவகாரம் காரணமல்ல, தமிழக எதிர்ப்பு காரணமல்ல, தேர்தலுக்கான வேலைப்பளுவே காரணம் என்று குறிப்பிடும் வெளிவிவகார அமைச்சர் குர்ஷித் தமிழக மக்களின் எதிர்ப்பு தமக்கு வியப்பை தருவதாக கூறி மழுப்பி விட்டார்.

இத்தனைக்கும் மத்தியில் பொதுநலவாய நாடுகளின் முக்கிய குறிக்கோள்களை நாம் நோக்குவோம் எனில், ஜனநாயகத்திற்கு வலுவூட்டுதல், மனித உரிமைகளை பாதுகாத்தல், நல்லாட்சி புரிதல், தனிமனித உரிமையைப் பாதுகாத்தல், மனித சமூக சமத்துவம் பேணல், தாராள வர்த்தகம் நடத்துதல், உலக சமாதானத்தை நிலைநிறுத்துதல் என பட்டியலி



டப்படுகின்றன.

இங்கு பொதுநலவாய மாநாட்டை நடத்துவதற்கு எமது நாட்டில் எத்தனை விடயங்கள் பொருத்தமாகவுள்ளன என்பதை நாம்தான் சிந்திக்க வேண்டும். பொதுநலவாய மாநாட்டின் பின்னர் ஏற்படப்போகும் விலையேற்றத்தால் பொதுமக்கள்தான் மிதிபடப் போகிறார்கள் என்று எதிர்க்கட்சிகள் கூக்குரல் இடுகின்றன.

ஆக, இத்தனை சூறாவளிகளுக்கு மத்தியிலும் இலங்கையின் பொதுநலவாய கனவு நிறை வேறிவிட்டது என்பதில் மட்டும் அரசாங்கம் பெருமிதம் கொள்ளலாம்.

**அ.சாள்ஸ்**

---

# தமிழ் மக்களின் எதிர்ப்பு எனக்கு வியப்பை தருகிறது

## வெளிவிவகார அமைச்சர் குர்ஷித் தெரிவிப்பு

(கொழும்பு)

இருநாட்டு உறவுகளுக்காக நான், இந்த மாநாட்டில் பங்கேற்கவில்லை. மீனவர்கள் பிரச்சினை, இலங்கை தமிழர்களுக்கு அதிகாரபகிர்வு உள்ளிட்ட விடயங்களை விவாதிக்கத்தான் இலங்கை வந்துள்ளேன். இவ்வாறு இலங்கை வந்துள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

தமது இலங்கை விஜயம் குறித்து கொழும் பில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையில் பொதுநலவாய மாநாடு, இன்று ஆரம்பமாகிறது. இந்த மாநாட்டில் மத்திய அரசு பங்கேற்கக் கூடாது என தமிழக சட்ட சபையில், தீர்மாணம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழகத்தில் எழும்பிய எதிர்ப்பு காரண மாக, பிரதமர் மன்மோகன் சிங், இந்த மாநாட்டில் பங்கேற்பதைத் தவிர்த்துவிட்டார். ஆனால், இந்தியாவின் சார்பில், இந்த மாநாட்டில் பங்கேற்க அமைச்சர் சல்மான் குர்ஷித்தும் வெளியுறவு செயலர் சுஜாதா சிங் கும் கொழும்பு வந்துள்ளனர்.

இருநாட்டு உறவுக்காக, நான் இந்த மாநாட்டில் பங்கேற்கவில்லை. மீனவர்கள் பிரச்சினை, இலங்கை தமிழர்களுக்கு அதிகார பகிர்வு உள்ளிட்ட விடயங்களை விவாதிக்கத்தான் இலங்கை வந்துள்ளேன்.

இலங்கை போரில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக இந்திய அரசு 15 ஆயிரம் வீடுகளை கட்டிக் கொடுத்துள்ளது. வீதிகளை அமைந்துள்ளது. இன்னும் பல அடிப்படை கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுத்துள்ளது.

இந்த உதவிகளை செய்யும் போது இதையெல்லாம் செய்யாதீர்கள் என எவரும் எம்மைத் தடுக்கவில்லை. ஆனால், தற்போது பொதுநல வாய மாநாட்டில் மட்டும் கலந்து கொள்ளக் கூடாது என எதிர்க்கின்றனர். இந்த எதிர்ப்பு எனக்கு வியப்பை ஏற்படுத்துகிறது.நாங்கள் இலங்கைக்கு வராவிடின் இந்த நலத்திட்ட உதவிகளை எப்படிசெய்ய முடியும்? தேச நலனைக் கருத்திற்கொண்டு தான் நான் இந்த மாநாட்டில் பங்கேற்கிறேன் என சல்மான் குர்ஷித் கூறினார். (அ-2)

# இரத்ததான நிகழ்வு

பி.சி.எ.எஸ். கம்பஸ் மாணவர்களும் யாழ். போதனா வைத்தியசாலையின் குருதி வங்கியும் இணைந்து நடத்தும் இரத்ததான நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிமுதல் அதன் யாழ்ப்பாண கற்கை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

எனவே, குருதிக் கொடையாளர்கள் மேற்படி இரத்ததான நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். இதேவேளை, குறித்த கற்கை நிலையத்தின் உயர் மருத்துவப்பிரிவு மாணவர்களால் நடத்தப்படும் இலவச குருதிப் பரிசோதனைகளும் இடம் பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

---


ஓம் ஸ்ரீ சாயிராம்

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 17.08.1949
உதிர்வு: 15.11.2006

திருமதி
**நேசமலர் சின்னத்துரை**

[மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டையைப்
பிறப்பிடமாகவும்
கொழும்பு மட்டக்குளியை
வதிவிடமாகவும் கொண்டவர்]

திதி:
பூர்வபட்ச ஏகாதசி

தடைக்கற்களை படிக்கற்களாக்கி தரணியில் தலை நிமிரவைத்த தங்க அம்மாவே..!
புன்னகை பூக்கும் பூ மகளே கண்ணெனக்காத்த கண்மணியே
ஆண்டு ஏழு ஆனாலும் உங்கள் அன்பு முகத்தை மறக்க முடியவில்லையே
அம்மா உங்கள் நினைவுகள் எம் மனதை விட்டு என்றும் அகலாது நிறைந்து இருக்கும்

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கரைப்பிரான் ஆதி விநாயகப் பெருமானையும் ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாளையும் வேண்டுகின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளோடு:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

(4481)

தகவல் : கணவர், பிள்ளைகள்.
தொ.பே: 021 221 3058

கெட்டவர்கள் தங்கள் தவறுகளுக்கு சமாதானம் தேடுவார்கள். நல்லவர்கள் தங்கள் தவறுகளை விட்டுப் பிரிவார்கள்.
– பென் ஜான்சன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கிற்கு வரும் தூதுவர்களிடம் தமிழர்களின் பிரச்சினையைக் கூறுங்கள்

இலங்கையில் இன்று ஆரம்பமாகும் பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கும் வெளிநாட்டுப் தலைவர்களும் தூதுவர்களும் நாட்டின் வட பகுதிக்கு விஜயம் செய்வதில் அதீத விருப்பம் கொண்டுள்ளனர்.

பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ளும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் வட பகுதிக்கான விஜயம் ஜெனிவாத் தீர்மானத்தால் ஏற்பட்டதாக இருக்கலாம்.

அதேநேரம் ஒரு காலத்தில் வெளிநாட்டுத் தூதுவர்கள் வட பகுதிக்கு விஜயம் செய்வதை ஏதோவொரு வகையில் தடுத்து வந்த ஆட்சியாளர்கள் இப்போது அவர்களைத் தடை செய்ய முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் வட பகுதிக்கு வரும் வெளிநாட்டுத் தூதுவர்கள் எதிரும் புதிருமான இரு தரப்பினரைச் சந்திக்கின்ற கட்டாயத்திற்கு ஆளாகுவர்.

இதில் ஒரு தரப்பு அரசாக இருக்க, மறுசாரார் தமிழ்த் தரப்பாக இருக்கும்.

எனவே இங்கு முரண்பட்ட கருத்துக்களை வெளிநாட்டுத் தூதுவர்கள் செவிமடுப்பர்.

அதாவது வட பகுதியில் மிக வேகமான அபிவிருத்தியை தாம் முன்னெடுத்துள்ளதாகவும் போர் நடந்த ஒரு பிரதேசத்தில் இவ்வாறான அபிவிருத்தியை வேறு எந்த நாட்டிலும் காணமுடியாது என்றும் அரச பிரதிநிதிகள் வெளிநாட்டுத் தூதுவர்களிடம் சொல்லி வைப்பர்.

இதற்காக அவர்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு வடிவமைக்கப்பட்ட காட்சிகளைக் காட்டி தாம் கூறுவது உண்மை என்று நிரூபிக்கப் பாடுபடுவர்.

இது ஒருபுறம் நடக்க, தமிழ்த் தரப்பு வட புலத்தில் நடந்த இழப்புகள், ஏற்பட்ட அழிவுகள், சொந்த மண்ணில் குடியிருக்க முடியாத சோகங்கள், மீள்குடியமர்வில் காட்டப்படும் அசமந்தங்கள், விடுதலை இன்றி சிறைகளில் வதைபடும் தமிழ் இளைஞர்களின் அவலங்கள், காணாமல்போனோரின் துயரங்கள் என்ற பட்டியலை முன்வைப்பர்.

எனினும் தம்மைச் சந்தித்த வெளிநாட்டுத் தூதுவர்களிடம் எங்களின் பிரச்சினைகளை தமிழ்த் தரப்புகள் தெளிவாக சான்றாதாரங்களுடன் நிரூபித்ததான தகவல்களும் குறைவாகவே இருக்கின்றது.

இதற்குக் காரணம் ஒவ்வொருவரும் தத்தம் பிரச்சினைகளை முன்வைத்து அதற்கு நிவாரணம் தேட முற்படுகின்றனரே தவிர ஒட்டுமொத்த தமிழ் இனத்தின் பிரச்சினையை முன்வைத்து அதற்கு தீர்வு தேவை என்று வலியுறுத்துவதாக இல்லை.

அழுவார் அழுவார் எல்லாம் தம் கவலை. துருவனின் மனைவிக்காக அழுவார் ஒருவரும் இல்லை என்பதாக எங்களின் நிலைமை கடந்து செல்கிறது.

எதுவாயினும் பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு இலங்கைக்கு வரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வட புலத்திற்கு வரும்போது அவர்களுக்கு தமிழர்களாகிய நாம் இந்த நாட்டில் அனுபவிக்கின்ற பிரச்சினைகளைத் துல்லியமாக எடுத்துக் கூறவேண்டும்.

எங்களின் பிரச்சினைகளை வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு தெரியப்படுத்தும் நல்லதொரு சந்தர்ப்பமாக இக்காலச் சூழலைப் பயன்படுத்துவது மிகவும் அவசியமானதாகும்.

# வடக்கு மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவை III க்கு தெரிவானோர் விபரம்

வடக்கு மாகாண பொதுச்சேவைக்கு முகாமை உதவியாளர் சேவையின் III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக கடந்த ஜூன் மாதம் நடத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கு இணங்க மாவட்ட வெட்டுப் புள்ளி அடிப்படையில் கடந்த ஜூலை மாதம் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் நேர்முகத்தேர்வு நடத்தப்பட் டது. இதற்கமைய தகைமை பெற்ற அபேட்சகர்களுக்கான நியமனங்கள் காலக்கிரமத்தல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கபட்டுள்ளதாக பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) ஆர்.எஸ். துரைராசா அறிவித்துள்ளார். நியமனத்திற்கு தகைமை பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு.

**யாழ்ப்பாணம்**

குமாரவேலு காண்டீபன்- 842792770V, சுஜிதா செந்தூரன்- 846513060V, கிரிசாந்தி கந்தசாமி 897301717V,லோறா ஜெறோஜினி இம்மானுவேல் ஜெயரட்ணம்-937233078V, மயூரதி தியாகராசா- 907981606V, பிரியங்கா கிருபானந்தகிருஷ்ணன்-907452476V, மதியழகி சரவணபவானந்தன்-896390040V, இனியாள் சிறீகரன்-918421033V, தேனுஜா குகராசா-928553280V, விணோகா முகுந்தன்-857903153V, கனகலிங்கம் பிருந்தன் -923511610V, தனுஜியா வீரசிங்கம் -856020746V, வானதி வேலாயுதபிள்ளை-935891337V, நிலானி கணேசு-927881861V, இருதயதாஸ் நிரூபன்-881860350V, கஜனி குகாசன்-907842215V, பவித்திரா தவராசா-925973971 V,சோபிகா சத்திதாசன்-915153038 V, தேவராஜா மனோக்ஷாந்தன்-901512833V, மாலினி கணேசமூர்த்தி-915431178V, சிவசொரூபி சிவபாகக்கியநாதன்-897631628V, சகிலா விஜயகுமார்-878061489 V, அனோஜிதா இராசநாயகம் -945060115V,சிவவதனி சின்னத்துரை-926282867V, தர்சினி தேவராசா-885953344V, ஜெய்சினி குணராசா- 937723113V, மேரிடினோகா வசந்தசந்திரன் - 898430227V, சதானந்தன் யுனிற்றன்-932392631V, சர்வேந்திரன் தர்சனன்-841734254V, சுபிதா யுகதர்சன்-865091869V, மதுரா தர்மலிங்கம்-905140140V, கிருத்திகா தருமராசா-915442757V, சங்கீதா நடராஜசுந்தரம்- 927542412V, சியாமினி தேவராசா-928041506V, சர்ணியா தர்மலிங்கம்-898252370V,சுகன்யா தவராஜசேகரன்-937472919V,கஜலக்சுமி நாகேஸ்வர ஆனந்தம்-898520471V, சிவசக்தி தவலதன்-928120716V, ஜெயரதி ஜெயசந்திரா-906722992V, பூலோகம் அரவிந்தன்- 910061801V, சங்கீதா கந்தசாமி-87543897V, கந்தசாமி லோகநாதன்-850852600V, தர்மிகா திசநாயகம்பிள்ளை- 887371750V, மேனகா ஜெயரத்தினம்-925782769V,பாலசுப்பிரமணியம் நிஷாந்தன்-793522100V, சரண்யா சந்திரகுமார்- 896583344V, தனுஷ்கா அனந்தேஸ்வரன்- 896582283V,இரத்தினசிங்கம் ஜெயதர்க்ஷன்-871253722V,ஜனனி பத்மநாதன்-906363429V,மேகலா பாலசுப்பிரமணியம்- 918614362V, இராசலக்ஸ்மி நவரெட்ணம்-896493582V, சுகிர்தா உலகநாதன்-905883879V,மேரி வினித்தா அன்ரெனி இராசநாயகம்-898170624V, கௌசிகா தனேஸ்வரன- 908021347V, மிதுனா சிவானந்தம்-907892069V,கல்பனா கஜேநதிரன்-895200247V, லலிதினி இராமச்சந்திரன்-867112421V, பாலகிருஷ்ணன் சதீஸ்குமார்- 850624208V, சுவர்ணா ஜெயராசா- 908014502V, யசிந்தா ஜெயரட்ணம்- 885171133V, பிரியதர்சனி சதாசிவம் -856813266V,புண்ணியமூர்த்தி மயூரன்- 901792895V,மேரி சாளினி கனியூட்-886382766V,ரஜி தம்பிராசா-847581999V, யனனி குமாரசாமி-906342847V,பாலேந்திரன் மதுசுதன் 932871670V, ஆனந்தநடராசா டேவானநந்தா-861092267V, நிடோஜனா ஶ்ரீதரன்-938403139V, ஶ்ரீ சிவகாமி பகீரதன்-836493214V, கனகலிங்கம் ஹரிசங்கர்- 913121325V, கயேந்தினி ஜெயக்குமார்-916101619V, காமலீற்றா சுயவதி பிரான்சிஸ்சேவியர- 915853102V,ஆறுமுகநாதன் பகீரதன்-833601083V,நிருபா மயூரதன்-867111980V,சர்மிளா இராசேந்திரம்-897043238V, பானுமதி பொன்னம்பலம்- 845664544V, ஆன்கிறிஸ்ரபெல் கிறிஸ்ரியன்சன்-877561488V,வரதராசா ஜெனன்-922242976V,இரத்தினேஸ்வரன் ராஜ்பாரதி-921083084V, பாலச்சந்திரன் பிரணவன்-910331155V, ஜெயந்திரன் நிஜந்தன்- 871982902V, தேனுஷா பாரதிதாசன்-937712464V, வினோசியா தர்மகுலசிங்கம் -886382545V, பபிதா யோகநாதன்-897493195V, மதிவதனி விநாயகமூர்த்தி- 885643060V, தங்கராசா உஷாந்- 870743173V,கலைவேணி நாகேஸ்வரானந்தன்-878070933V,சுரேக்கா சிவபாதசுந்தரம்-895833991V, ஜானி கமலநாதன்-895824852V, முருகதாஸ் துளசி - 917292663V, புஸ்பராஜா தூரிகா-935101883V,ஜெயந்தி அருளானந்தம்-938271291V, ரோகினி உதயகுமார்-897651467V, மருதையினான் சிறிடறன்- 891783264V, லோகிதா அழகதுரை- 866842116V, தர்க்ஷினி இராசதுரை-885152007V, விஜிதா குலராசா-935413230V, உக்ஷாந்தி பசில்-927341360V, க்ஷர்மிளா சிவஞானவேல்-927292556V, யஸ்மிலா கலொக் கணநாதன் 915433081V, லக்ஸ்சிகா இரத்தினசபாபதி-865151551V, ஜெயகுலராசா கொலின்-850743002V, சற்குணராஜசர்மா க்ஷண்மதுரன்-933141551V, கவிதா கம்சன்- 888040498V, வைஸ்ணவி கருணசேகரம்-897612755V, தரணிகா சுந்தரம் -927542323V, ஞானகௌரிசெல்வராசா-936522882V

(19 ஆம் பக்கம் பார்க்க...)




### சொல்வதை செய்யுங்கள்

இறைவன் கூறுகின்றான்: பிற மனிதர்களை நன்மை செய்யும்படி நீங்கள் ஏவிவிட்டு உங்களை நீங்கள் மறந்து விடுகின்றீர்களா? நீங்களோ வேதத்தை ஓதிக்கொண்டிருக்கின்றீர்கள். நீங்கள் சிறிதளவும் (இதைப் பற்றி) சிந்திப்பதில்லையா?

(திருக்குர்ஆன் 2:44)




மொழி மனிதனின் கருத்துப் பரிமாற்றத்திற்கு ஒரு சிறந்த ஊடகமாகத் தொழிற்படுகிறது. விலங்குகளுக்கும் ஒரு கருத்துப்பரிமாற்ற ஒலி ஊடகம் உண்டெனக் கருதப்படுகிறது. பறவைகளில் சில பயிற்றினால் மனித மொழியையே பேசும் ஆற்றல் உடையவை. எனவே மக்களிடையே கருத்துக்களைப் பரப்புவதற்கு ஒரு மொழியாற்றல் வேண்டப்பட்டது. மனிதன் மனத்தைப் பண்படுத்த வல்லது வழிபாடே. முன்னோர்களுடைய வழிபாட்டு நம்பிக்கையின் சான்றுகளாகப் பல திருக்கோயில்கள் உள்ளன. அந்தக் கோவில் வழிபாட்டு நடைமுறைகளையும் கோயிற் சூழலையும் இறைவன் அருள் நிலைகளையும் பற்றி நாயன்மார்கள் பல பதிகங்கள் பாடியுள்ளனர். அவர்களில் ஞானசம்பந்தர் பாடிய பாடல்கள் தனித்துவமானவை. அவர் பாடல்கள் மூலம் தமிழ்மொழியைப் பரப்பும் பணியையும் செய்து வந்தார். அவருடைய அந்தப் பணி காலத்தின் தேவையாகவும் இருந்தது. சம்பந்தரது காலத்துக்குப் பின்னே வாழ்ந்த சுந்தரர் சம்பந்தரின் பணியை தன்னுடைய பதிகம் ஒன்றிலே பதிவு செய்துள்ளார்.

ஞானசம்பந்தர் திருக்கோயில்களுக்குச் சென்று வழிபட்டுப் பதிகங்களைப் பாடி வருகையில் ஒருநாள் திருக்கோலக்கா என்னும் திருக்கோயிலுக்கு வருகின்றார். அங்கு தன் கைகளால் ஒத்தறுத்துத் திருப்பதிகம் பாடத் தொடங்கினார். அப்பொழுது சிவனருளினால் ஶ்ரீபஞ்சாட்சரம் எழுதப்பட்டிருந்த பொற்றாளம் அவருடைய கைகளில் வந்திருக்கக் கண்டார். அதன் பின்னர் தாளத்துடன் பாடல்களைச் சம்பந்தர் பாடியபோது புதியதொரு இன்னிசையுடன் தமிழ்மொழி பரவலாயிற்று. இந்தச் செய்தியை வாய்மொழியாகச் சுந்தரர் அறிந்தார். எனவே அவர் திருக்கோலக்கா என்னும் தலத்தைப்பாடும் போது எட்டாவது பாடலிலே இதனைக் குறிப்பிடுகிறார். தாளத்தைக் கொடுத்து சம்பந்தர் பாடலுக்கும் இரங்கும் தன்மையுள்ள ஈசன் என்று சுந்தரர் தனது பாடலிலே இறைவனைக் காட்டுகிறார்.

சம்பந்தர் மூன்று வயதில் இறைவன் கோலத்தைப் பாடும் ஆற்றல் பெற்றவர். அத்துணைச் சிறுவயதிலேயே தமிழ் மொழியிலே பேராற்றல் பெற்று விளங்கியவர். சம்பந்தருடைய தமிழின் இனிமையாலும் இனிய இசையாலும் ஈர்க்கப்பட்ட பலர் சைவத் திருக்கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்யத் தொடங்கினர்.

கல்வியறிவு பெறாத மக்கள் சம்பந்தர் பாடிய தேவாரங்களைப் பாடியமையால் இறைவனைப் பற்றிய பல அருட்டிறங்களை செவிவழியாக அறிந்து கொண்டனர். கோவில்களுக்குச் செல்லாவிடினும் சம்பந்தர் பாடல்களால் கோவில்களை மனத்தால் வழிபடும் பயிற்சியைப் பெற்றனர். அவர்களுடைய மொழிப்பயிற்சி இசையோடு இணைந்திருந்தமையால் எளிதாக எங்கும் பரவலாயி ற்று. கல்வியறிவற்ற பாமரமக்களும் வழிபாட்டின் பயனை வாய்மொழிப் பாடல்களால் நன்கு அறிந்தனர். இசை மக்கள்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

மனத்தை வசப்படுத்தியது. இளம் பிள்ளையான சம்பந்தர் எல்லோரது உள்ளத்திலும் இறை நம்பிக்கையை ஏற்படுத்தினார்.

சுந்தரரும் இளைஞராக இருந்த போதும் மக்களை வழிபாட்டு நெறியிலே அழைத்துச் செல்லும் பணியை இன்னிசையால் தமிழ்பரப்பும் பணியைச் சம்பந்தரே செய்ததாக சுந்தரர் பாடலில் பதிவு செய்துள்ளார்.

**நாளு மின்னிசை யாற்றமிழ் பரப்பு**
**ஞான சம்பந்தனுலகவர் முன்**
**தாளமீந்தவன் பாடலுக்கிரங்குந்**
**தன்மையாளனை யென் மனக் கருத்தை**
**ஆளும் பூதங்கள் பாட நின்றாடு**
**மங்கணன்றனை யென்கணமிறைஞ்சுங்**
**கோளிலிப் பெருங்கோயிலுள்ளா னைக்**
**கோலக் காவினிற் கண்டுகொண்டேனே**

# இந்தியாவில் சச்சினுக்கு கோயில்

கிரிக்கெட்டின் அவதாரம் எனப் போற்றப்படும் சச்சின் டெண்டுல்கர் மும்பையில் நடைபெறும் மேற்கிந்தியத் தீவுகளுடனான டெஸ்ட் போட்டியுடன் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெறுகின்றார்.

இந்த அறிவிப்பு இந்திய கிரிக்கெட்டுக்கு ஒரு பக்கம் இழப்பை ஏற்படுத்தி இருந்தாலும், பீகாரை சேர்ந்த போஜ்புரி நடிகர் ஒருவர் சச்சினின் ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சி அளிக்கும் செய்தியை வெளியிட்டுள்ளார்.

சச்சினின் தீவிர ரசிகரான மனோஜ் திவாரி என்பவர் பீகாரின் கைமுர் மாவட்டத்தில் உள்ள அட்டர்வாலியா கிராமத்தில் சச்சின் டெண்டுல்கருக்கு கோயில் ஒன்றை கட்டியுள்ளார்.


போஜ்புரி மொழி நடிகரும், பாடகருமான இவர் இது தொடர்பாக கூறுகையில்,

2011 உலக கிண்ண கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றபோது நம் நாட்டுக்கு இந்த பெருமையை பெற்று தந்த கிரிக்கெட் வீரர்களுக்கு ஒரு கோயிலை கட்ட வேண்டும் என்று தீர்மானித்தேன்.

இதற்காக 6000 சதுரஅடி நிலத்தில் 2 ஆண்டுகளில் இந்த கோயிலை கட்டி முடித்து விட்டேன். கிரிக்கெட் மட்டை மற்றும் பந்துடன் கோபுரத்தின் உச்சி அமைக்கப்பட்டுள்ளது.


உள்ளே கையில் கிரிக்கெட் மட்டையுடன் சச்சின், தோனி மற்றும் யுவராஜ் சிங் ஆகி யோரின் முழு உயர பளிங்கு சிலைகள் வைக் கப்பட்டுள்ளன. வரும் ஜனவரி மாதம் இந்த கோயிலை திறக்க திட்டமிட்டிருந்தேன்.

ஆனால், 200ஆவது போட்டியுடன் டெஸ்ட் தொடர்களில் விளையாடப்போவதில்லை என்று சச்சின் அறிவித்துள்ளதையடுத்து வரும் 19ஆம் திகதி இந்த கோயிலை திறப்பதற்கான ஏற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளேன் என்றார்.



சச்சினின் தீவிர ரசிகரான
மனோஜ் திவாரி

# முதல் சுற்றில் செய்னா வாகை




ஷாங்காய் நகரில் நடைபெறும் பூப்பந்தாட்ட பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் இந்திய நட்சத்திர வீராங்கனை செய்னா நேவல் வெற்றி பெற்றார்.

சீனாவில் உள்ள ஷாங்காய் நகரில் சீன திறந்த பூப்பந்தாட்ட தொடர் நடைபெறுகிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் செய்னா நேவல், ஜப்பானின் நொசோமி ஒகுஹராவை எதிர் கொண்டார். போட்டியின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய செய்னா, முதல் செட்டை 21-14 என வென்றார். தொடர்ந்து நடந்த இரண்டாவது செட்டிலும் அசத்திய செய்னா, 21-19 என தன்வசப்படுத்தினார்.

முடிவில், இந்தியாவின் செய்னா நேவல், 21-14, 21-19 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்தார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில், இந்தியாவின் காஷ்யப், தாய்லாந்தின் பூன்ஷாக் பொன்சானாவை சந்தித்தார். இதில் அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்திய காஷ்யப் முதல் இரண்டு செற்டையும் 22-20, 21-15 என சுலபமாக கைப்பற்றி, அடுத்த சுற்றுக்குள் நுழைந்தார்.

# சம்பியன்ஸ் கிண்ண இறுதிப் போட்டியில் நடாலை வீழ்த்தி ஜோகோவிக் சம்பியன்




சம்பியன்ஸ் கிண்ண டெனிஸ் போட்டியின் இறுதிச் சுற்றில் நடாலை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார் ஜோகோவிக்.

உலக தரவரிசையில் முதல் 8 இடத்தில் உள்ள வீரர்கள் பங்கேற்ற இறுதியாட்டம் லண்டனில் நடைபெற்றது.

இதில் முதன் நிலை வீரரான ஸ்பெயினின் நடால், 2ஆம் நிலை வீரரான சேர்பியாவின் ஜோகோவிக்கை எதிர்த்து ஆடினார். ரசிகர்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்திய இந்த ஆட்டத்தில் ஜோகோ விக் 6- 3, 6- 4 என்ற நேர்செட்டில் நடாலை தோற்கடித்து சம்பியன் பட்டம் வென்றார்.

இந்த ஆட்டம் 1 மணி நேரம் 36 நிமிடங்கள் நடந்தது. சம்பியன் கிண்ணத்துடன் ஜோகோவிற்கு ரூ.12 கோடி பரிசுத்தொகை வழங்கப்பட்டது. 2ஆவது இடம் பிடித்த நடால் ரூ.6.38 கோடி பரிசுத்தொகை பெற்றார்.

## தெற்காசிய தடகளப் போட்டியில்

# 52 பதக்கங்களை குவித்து இந்தியா முதலிடம்

ஜார்க்கண்ட் மாநிலத்தில் நடைபெற்ற தெற்காசிய அளவிலான ஜூனியர் தடகளப் போட்டியில் 52 பதக்கங்களைக் குவித்து இந்தியா முதலிடம் பிடித்தது.

ராஞ்சியில் நடந்து முடிந்த 2ஆவது தெற்காசிய ஜூனியர் தடகளப் போட்டியில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கான், நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்நத வீரர்கள் பங்கேற்றனர்.

இப்போட்டி திங்கட்கிழமை ஆரம்பமாகியது. போட்டியின் முதல்நாளில் இந்திய வீரர்கள் 12 பதக்கங்கள் உடபட 14 பதக்கங்களை வென்றனர். 2ஆவது நாளான செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் இந்திய வீரர்கள் மேலும் பதக்கங்களைக் குவித்தனர்.

இதனால் பதக்கப்பட்டியலில் 52 பதக்கங்களுடன் (20 தங்கம் 16 வெள்ளி 16 வெண்கலம்) இந்தியா முதலிடத்தைப் பிடித்தது.

இலங்கை வீரர்கள் 10 தங்கம் உள்பட 34 பதக்கங்களுடன் 2ஆம் இடத்தையும், 3 வெண்கலப் பதக்கங்களுடன் வங்கதேசம் 3ஆம் இடத்தையும் பிடித்தன. பாகிஸ்தான் அணி ஒரே ஒரு வெண்கலப் பதக்கத்தை மட்டும் கைப்பற்றியது. போட்டியில் பங்கேற்ற ஆப்கான் மற்றும் நேபாள நாடுகளைச் சேர்ந்த வீரர்களுக்கு எந்தப் பதக்கமும் கிட்டவில்லை.

2015ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தெற்காசிய ஜூனியர் தடகளப் போட்டியை நடத்த இலங்கை தேர்வு செய்யப்பட்டுள்ளது.

# ஒருநாள் தொடருக்கான இந்திய அணி விபரம்

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவு அணி, 2 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது. இதில் முதல் டெஸ்ட் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றுள்ளது. இரண்டாவது டெஸ்ட் போட்டி மும்பையில் நடைபெற்றுவருகிறது.

இதனைத் தொடர்ந்து ஒருநாள் தொடர் 21ஆம் திகதி ஆரம்பமாகிறது. முதல் போட்டி கொச்சியில் நடைபெறுகிறது. அதன்பின்னர் விசா கப்பட்டினம் (நவ.24), கான்பூரில் (நவ.27) மற்ற இரண்டு போட்டிகளும் நடைபெற உள்ளன.

இந்த ஒருநாள் தொடருக்கான இந்திய அணி இன்று அறிவிக்கப்பட்டது. இதில், முன்னணி வீரர் இஷாந்த் சர்மா மற்றும் வினய் குமாருக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை. மும்பையைச் சேர்ந்த வேகப்பந்து வீச்சாளர் தவால் குல்கர்னி தேசிய அணியில் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறார்.

தோள்பட்டையில் ஏற்பட்ட காயம் காரணமாக டெஸ்ட் தொடர் முழுவதும் ஓய்வெடுத்த சகலதுறை வீரர் ரவீந்திர ஜடேஜாவுக்கு, ஒரு நாள் போட்டிகளில் வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

அணி விவரம்: டோனி (தலைவர்), ஷிகர் தவான், ரோகித் சர்மா, விராட் கோலி, யுவராஜ் சிங், சுரேஷ் ரெய்னா, ரவீந்திர ஜடேஜா, அஸ்வின், புவனேஸ்குமார், முகமது ஷமி, அம்பதி ராயுடு, அமித் மிஸ்ரா, ஜெய்தேவ் உனாத்கட், தவால் குல்கர்னி, மோகித் சர்மா.

# உலகக் கிண்ணக் காற்பந்து போட்டி; மீண்டும் டிக்கெட் விற்பனை ஆரம்பம்

பிரேசில் நாட்டில் அடுத்த ஆண்டு ஜூன் 12ஆம் திகதி முதல் ஜூலை 13ஆம் திகதி வரை உலகக் கிண்ணக் காற்பந்து போட்டிகள் நடைபெற உள்ளன. இதற்கான முதற் கட்ட டிக்கெட் விற்பனை ஒக்டோபர் 10ஆம் திகதி முடிவடைந்தது. இந்த காலகட்டத்தில் மொத்தம் 8 இலட்சத்து 89 ஆயிரத்து 305 டிக்கெட்டுகள் விற்பனை ஆகியுள்ளன.

இதற்கு முந்தைய ஆண்டுகளில் உள்ளதைவிட இது அதிகம் ஆகும். இதற்கு முன்பு அதிகபட்சமாக 2006ஆம் ஆண்டு முதற் கட்ட விற்பனையில், 6 இலட்சத்து 53 ஆயிரத்து 521 டிக்கெட்டுகள் விற்பனை ஆகியி ருந்தன.

சில தினங்களுக்கு முன் தொடங்கிய 2ஆம் கட்ட டிக்கெட் விற்பனை வரும் 28 ஆம் திகதி முடிகிறது. டிசெம்பர் 6ஆம் திகதி போட்டி அட்டவணை வெளியிட்டபிறகு இறுதிக் கட்ட டிக்கெட் விற்பனை நடைபெறும்.

இதுவரை 60 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் டிக்கெட்டுகள் கேட்டு விண்ணப்பித்திருப்பதாக சர்வதேச காற்பந்து சம்மேளனம் தெரிவித்துள்ளது.

# அதிகாரப்பகிர்வு குறித்து பேசவே இலங்கை வந்தேன்

## சல்மான் குர்ஷித் தெரிவிப்பு

இரு நாட்டு உறவுக்காக நான் இந்த மாநாட்டில் பங்கேற்கவில்லை. மீனவர்கள் பிரச்சினை, இலங்கை தமிழர்களுக்கு அதிகார பகிர்வு உள்ளிட்ட விஷயங்களை விவாதிக்கத் தான், இலங்கை வந்துள்ளேன். இவ்வாறு இலங்கை வந்துள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

இலங்கையில், பொதுநலவாய மாநாடு இன்று தொடங்குகிறது. இந்த மாநாட்டில் மத்திய அரசு பங்கேற்கக் கூடாது என தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தமிழகத்தில் எழும்பிய எதிர்ப்பு காரணமாக பிரதமர் மன்மோகன் சிங் இந்த மாநாட்டில் பங்கேற்பதை தவிர்த்து விட்டார்.

ஆனால், இந்தியாவின் சார்பில், இந்த மாநாட்டில் பங்கேற்க அமைச்சர் சல்மான் குர்ஷித்தும், வெளியுறவு செயலர் சுஜாதா சிங்கும், கொழும்பு வந்துள்ளனர்.

தமது இலங்கை விஜயம் குறித்து கொழும்பில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது,

இரு நாட்டு உறவுக்காக, நான், இந்த மாநாட்டில் பங்கேற்கவில்லை. மீனவர்கள் பிரச்சினை, இலங்கை தமிழர்களுக்கு அதிகார பகிர்வு உள்ளிட்ட விஷயங்களை விவாதிக்கத்தான் இலங்கை வந்துள்ளேன்.

இலங்கை போரில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக இந்திய அரசு 15 ஆயிரம் வீடுகளை கட்டித் தந்துள்ளது சாலைகளை அமைத்துள்ளது. இன்னும் பல அடிப்படை கட்டமைப்பு வசதிகளை, செய்து தந்துள்ளது.

இந்த உதவிகளை செய்யும் போது, இதையெல்லாம் செய்யாதீர்கள் என யாரும் தடுக்கவில்லை. ஆனால், தற்போது பொது நலவாய மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என எதிர்க்கின்றனர். இந்த எதிர்ப்பு எனக்கு வியப்பை ஏற்படுத்துகிறது.

நாங்கள் இலங்கைக்கு வராவிட்டால் இந்த நலத்திட்ட உதவிகளை எப்படி செய்ய முடியும்? தேச நலனை கருத்தில் கொண்டு தான் நான் இந்த மாநாட்டில் பங்கேற்கிறேன் இவ்வாறு இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் கூறினார்.

(எ-11)

## வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆவணப் படத்தினை வெளியிட்ட சனல் 4 ஊடகவியலாளருக்கு எதிராக வவுனியாவில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மதவாச்சி, பூனாவ உள்ளிட்ட இடங்களில் இருந்து வருகை தந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் வவுனியா மாவட்ட செயலகத்திற்கு முன்னால் நேற்று மதியம் 12மணி தொடக்கம் ஒரு மணி வரை இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சனல் 4 ஊடகவியலாளர்கள் வட பகுதிக்கு வரக் கூடாது எனவும், அவர்களை அரசாங்கம் உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும் எனக் கோரியும் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது, **சனல் ஊடகவியலாளர்களை வெளியேற்று, எமது ஒற்றுமையை குலைக்காதே, சனல் 4 வேண்டாம்**

போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட சுலோகங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

சனல் 4 ஊடகவியலாளார்கள் வட பகுதிக்கு செல்லவிருந்த நிலையிலேயே இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதனால் ஏ - 9 வீதியின் போக்குவரத்து சில மணி நேரம் பாதிப்படைந்தது.

இதில் வட மாகாணசபை உறுப்பினர்களான தர்மபால செனவிரத்ன, ஜெயதிலக உள்ளிட்டோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## மக்ரேவிற்கு எதிராக முறைப்பாடு

சனல்4 தொலைக்காட்சி ஊடகவியலாளர் கலும் மக்ரேவிற்கு எதிராக வாகனச் சாரதி ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

அனுராதபுரத்தில் இருந்து கொழும்புக்கு சென்ற வாகனத்தின் சாரதியே இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார்.

அனுராதபுரத்தில் மக்ரேவிற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதனைத் தொடர்ந்து, பிரேத்தியேக வாகனமொன்றில் மக்ரே திருப்பி அனுப்பி வைக்கப்பட்டார்.

வாகனத்தைச் செலுத்திய சாரதிக்கு பணம் செலுத்தவில்லை என கொம்பனித் தெரு பொலிஸ் நிலையத்தில் மக்ரேவிற்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸாரே இந்த வாகனத்தை ஒழுங்கு செய்திருந்ததாகவும் இதனால் பொலிஸாரிடம் பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் மக்ரே தெரிவீத்திருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

## படப்பிடிப்புக்கு பி.பி.ஸிக்கு தடை

பொதுநலவாய மாநாட்டுக்கு செய்தி சேகரிக்கச் சென்ற பிபிசியின் வீடியோ செய்தியாளர் குழு, அங்கு படம்பிடிப்பதில் சிக்கல்களைச் சந்தித்துள்ளது.

மாநாட்டு வைபவத்தில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை படம் பிடிக்க அவர்கள் அருகில் செல்ல முயல, இலங்கை அதிகாரிகள் பிபிசி செய்தியாளர் குழுவை தடுத்துள்ளார்கள்.

எங்கள் ஊடக சுதந்திரத்தில் ஏன் தலையிடுகின்றீர்கள் என்று பிபிசி செய்தியாளரான ஜேம்ஸ் றொபின்ஸ் திரும்பத் திரும்பக் கேட்டும் இலங்கை அதிகாரிகள் அவர்களைத் தடுத்துள்ளார்கள் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (எ-11)

## கௌரவிக்கும் நிகழ்வு

(வவுனியா)

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9 மணிக்கு வித்தியாலய ஐயாத்துரை அரங்கில் அதிபர் ச.பத்மநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வவுனியா வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா, முன்னாள் வித்தியாலய அதிபர் சு.சிவபாலன் ஆகியோரும் ஆரம்ப உதவிக் கல்விப் பணிப்பாளர் கணேசபாலன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர். (எ)

## யாழ்.உயர் தொழில்நுட்ப மாணவர்கள் தேசிய விளையாட்டு போட்டியில் சாதனை

இலங்கை உயர்தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் முதலாவது தேசிய விளையாட்டுப் போட்டிகள் கடந்த 7ஆம், 8ஆம் திகதிகளில் தெகிவளை உயர்தொழில்நுட்ப நிறுவன விளையாட்டு மைதானத்திலும் தெகிவளை ஜயசிங்க விளையாட்டு மைதானத்திலும் இடம்பெற்றிருந்தது.

இப்போட்டியில் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் மாணவர்கள் மூன்று தங்கப் பதங்கங்கள், ஒரு வெள்ளிப் பதக்கம், நான்கு வெண்கலப் பதக்கங்களை வென்று அகில இலங்கை ரீதியில் 2 இடத்தினைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

விளையாட்டு மேம்படுத்தலுக்கான மைதான வசதிகளையோ, ஏனைய வாய்ப்புக்களோ இல்லாத நிலையில் தமது விடா முயற்சி, தன்னம்பிக்கை, கடின உழைப்பு என்பனவற்றைக் கொண்டு இம்மாணவர்கள் ஈட்டித் தந்திருக்கும் இவ் வரலாற்றுச் சாதனையை யாழ்ப்பாணம் உயர்தொழில்நுட்பவியல் நிறுவன சமூகம் பெருமையுடன் பாராட்டுகிறது.

இப்போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வானது எதிர்வரும் 19 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் பழைய மாணவர் சங்கத்தால் நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## கண்காணிக்கப்...

தயாரித்தேன். அதன் பின்னர் சில தகவல்களையும் காணொளி காட்சிகளையும் பெற்றேன் என்றார்.

இந்த காணொளிகள் உண்மையானது என்பதற்கு என்ன உத்தரவாதம் என எழுப்பட்ட கேள்விக்கு ஒன்றுக்கு பதிலளித்துள்ள மக்ரே, அது ஒளிப்பரப்படும் முன்னர் அதன் நம்பகத்தன்மை சரிபார்க்கப்பட்ட பின்னரே ஒளிப்பரப்பட்டது எனக் கூறினார்.

எனது இறுதி காணொளி ஆவணப்படம் பொதுநலவாய மாநாட்டுக்கு முன்னர் தயாராகியது. எனினும், சோதனைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதால் இது வெளியிடப்படவில்லை.

ஒரு ஊடகவியலாளன் என்ற முறையில் எனது கடமைகளை முன்னெடுக்க இலங்கை வருவதற்கான விசா வழங்கப்பட்டது. எனினும் வருகை தந்த நாள் முதல் புலனாய்வுதுறை மூலம் எனது நடவடிக்கைகள் கண்காணிக்கப்படுகின்றன. இது ஏமாற்றத்தை அளிக்கின்றது எனவும் கெலும் மக்ரே குறிப்பிட்டார். (எ-11)

## இலங்கைத்...

தையும் வெளியுறவு செயலரிடம் விரிவாக தெரிவித்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

பொதுநலவாய மாநாட்டை பிரதமர் மன்மோகன் சிங் புறக்கணித்திருப்பது இந்திய அரசின் முடிவு என்று கூறிய சம்பந்தன் அவரது பங்கேற்பை எதிர்த்தவர்களுக்கு பல காரணங்கள் உள்ளன என்று தெரிவித்தார். (எ-11)

## இலங்கை வந்தார்...

எலிசபெத் தலைமையிலேயே நடைபெற்றன. அவர் கலந்து கொள்ளாத முதல் மாநாடு கொழும்பில் நடைபெறும் மாநாடாகும்.

மூன்று நாள் அரச முறை பயணமாக இலங்கை வந்துள்ள இளவரசர் சாள்ஸ், பிரித்தானிய மகாராணிக்கு பதிலாக பொது நலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதுடன் எதிர்வரும் 16 ஆம் திகதி இலங்கையில் இருந்து புறப்பட்டுச் செல்ல உள்ளார்.

இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் அவர் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தங்கியிருக்கும் இளவரசர் சாள்ஸ் மற்றும் அவரது மனைவி ஆகியோர் கண்டி, நுவரெலியா ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்ய உள்ளனர்.

அத்துடன் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ளும் சில தலைவர்களை சந்திக்க உள்ள இளவரசர் முக்கிய விடயங்கள் குறித்து பேச்சு நடத்தவுள்ளார்.

அதேவேளை கொழும்பில் உள்ள தேசிய அரும்பொருட் காட்சியகம், பிரிட்டிஷ் கவுன்சில் ஆகியவற்றுக்கும் இளவரசர் தம்பதிகள் விஜயம் செய்ய உள்ளனர்.

(எ-11)

## சனல் 4 ஊடக...

தொடர்பான நிகழ்ச்சியை பார்த்தீர்களா என கெலும் மக்ரே வினவினார்.

எனினும் அங்கிருந்தவர்கள் எவரும் அதனை பார்த்ததாக கூறவில்லை. இதனை சனல் 4 தொலைக்காட்சியினர் இதனையும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

சனல் 4 தொலைக்காட்சி குழுவினர் செயற்பாடுகள், பயணங்கள் குறித்து இலங்கை பாதுகாப்பு தரப்பினர் கண்காணித்து வருவதை தாம் அறிந்துள்ளதாகவும் பாதுகாப்பு தரப்பை சேர்ந்த ஒருவரே அனுராதபுரத்தில் இருந்த குழுவினருக்கு அதனை தெரியப்படுத்தியிருக்கலாம் எனவும் சனல் 4 குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை இலங்கையில் காணாமல் போகும் சம்பவங்களை அடிப்படையாக கொண்டு லீனா மணிமேகலை இயக்கியுள்ள இரண்டு மணிநேரம் ஓடும் **வெள்ளை வான் கதைகள்** என்ற ஆவணப்படத்தை சனல் 4 தொலைக்காட்சி நேற்று ஒளிப்பரப்பியது.

(எ-11)

## வடக்கு மாகாண...

பவித்திரா இராசரத்தினம்-897001489V, ஆறன் குணபாலசிங்கம் சுசீபன்- 852862068V, மேரிபிருந்தா தொலோன்தினோ நிக்கிலஸ்-906892170V, சுகந்தினி பிரேமரெத்தினம்-927582473V, இராசரத்தினம் பிரதீபன்- 910612271V, வேலும் மயிலும் றமணன் -871040109V, மதிசாந்தினி ஜெயராசா -927402556V, கிருஸ்ணமணி சிவயோகம்-737022552V, அனித்தா செல்வராசா-908440579V, ஜெயரதி தங்கராசா-936663761V, சாலினி மதன்ராஜ்-887261695V, காவேரி பாலகிருஷ்ணன்926811487 V

அருமைராசா கோகிலன்-851454489V, பரந்தாமன் லங்கேஸ்-922871825V, வனோஜினி சண்முகலிங்கம்-907292746V, சுகன்யா ஸ்ரீதர்- 937762615V, பிரியதர்சினி இராசேந்திரம்-888381589V, துரைராசா நேசராஜ்- 930751103V, ஆராதனா சிறீகாந்தன்-937552793V, நிவேகா சற்குணலிங்கம்- 926161334V, தவகுலரட்ணம் பிரசாந்த்-930391212V, தர்மிலா வரதராசா-927233924V, ஜீவிதா சச்சிதானந்தம்-888232001V, நாகரத்தினம் வெங்கடேஸ்வரா-890241930V, சுதர்சினி தேவராசா-848122840V, தர்சியா இரத்தினசிங்கம்-928051242V, கமலநாதன் தினேஷ்- 872202676V, மேரி அனிற்றா மேரீன் அல்போன்ஸ்-936423825V, சுமங்கலி ஆனந்தஜோதி-898491102V

(தொடரும்...)

# தனி நாட்டு...

ளாக மனித உரிமை மீறலால் இலங்கை பாதிக்கப்பட்டிருந்தது என்றும், 2009ஆம் ஆண்டுக்கு பின்னர் குடிமக்களில் ஒருவர் கூட கொல்லப்படவில்லை என்றும் ராஜபக்ஷ கூறினார்.

மனித உரிமைகள் தொடர்பான செயற்பாடுகள் பற்றிய எந்த இரகசியங்களும் என்னிடம் இல்லை. இது குறித்து நான் திறந்த கண்ணோட்டத்துடன் பார்க்கின்றேன்.

மனித உரிமைகள் சம்பந்தமாக நடவடிக்கைகளை எடுக்க நாம் எந்த சந்தர்ப்பத்திலும் பின்நிற்க போவதில்லை.

அதேபோல் புலம்பெயர் தமிழர்களின் மனங்களை வெல்ல வேண்டும் என்பதே எனது நோக்கம். இலங்கை வருமாறு நான் புலம்பெயர் தமிழர்களிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.

பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனிடம் கேட்பதற்கு என்னிடமும் கேள்வி இருக்கின்றது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டை பிரிப்பதற்கு இலங்கை அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது.

இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் உள்ளிட்ட குழுவினர் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்துள்ளமை குறித்து தான் மகிழ்ச்சியடைவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் இங்கு எம்மோடு உள்ளார். இது எனக்கு திருப்தியளிக்கிறது என்று ஜனாதிபதி கூறினார்.

தமிழ்நாட்டிலுள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தே இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், இலங்கை விஜயத்தை தவிர்த்துக்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறதே என இந்திய ஊடகவியலாளர் ஒருவர் ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அவ்வாறு ஒரு விடயத்தினை இந்திய பிரதமர் எனக்கு சொல்லவில்லையே என்று குறிப்பிட்டார்.

அத்துடன், கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் சிட்டினியில் நடைபெற்ற மாநாட்டிலும் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்கவில்லை என்பதையும் ஜனாதிபதி இதன்போது ஞாபகமூட்டினார்.

தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளின் எதிர்ப்பையும் மீறி, கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்குபற்றுவதன் மூலம் இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு எவ்வித குறைபாடும் ஏற்படப் போவதில்லை என்பதை இந்தியா தனது விஜயத்தின் மூலம் தெளிவுபடுத்தியுள்ளது என ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி இலங்கையில் நிறுவப்பட்டுள்ள சட்டக் கட்டமைப்பின் மூலமாக மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிக்க தயாராக இருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாடு தொடர்பில் அந்த அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மாவுடன் இணைந்து கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டார்.

செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த ஜனாதிபதி,

இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சட்டக் கட்டமைப்பின் மூலமாகவே மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை பின்பற்ற வேண்டும்.

நாங்கள் இலங்கையில் சட்டக் கட்டமைப்பை கொண்டிருக்கின்றோம். எவராவது மனித உரிமை மீறல்கள் குறித்து முறைப்பாடு செய்ய வேண்டுமாயின் இலங்கையின் கட்டமைப்பை மதிக்க வேண்டும்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றங்களுடன் எவராவது சம்பந்தப்பட்டுள்ளனர் என அடையாளம் காணப்பட்டால் அவர்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் தயாராகவே உள்ளது.

எவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுப்போம். நான் அதற்கு தயாராகவே இருக்கின்றேன். நாங்கள் வெளிப்படையாக இருக்கின்றோம். எதனையும் மறைக்க வேண்டிய தேவையில்லை.

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னரே இலங்கை மீது மனித உரிமை பதிவுகள் குறித்து கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருவதுடன் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

எனினும் தற்பொழுது அதிகமான கொலைகள் நடப்பதில்லை. 30 ஆண்டுகளாக மக்கள் கொல்லப்பட்டனர். 2009 ஆம் ஆண்டு அது தடுத்து நிறுத்தப்பட்டது. இலங்கையில் தற்பொழுது கொலைகள் நடப்பதில்லை என்றார்.

மனித உரிமை மீறல்களை காரணம் காட்டி கனேடிய பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர், இந்திய பிரதமர் மன்மோகன் சிங், மொரீசியஸ் பிரதமர் நவீன் சந்திரா ராம்கூலம் ஆகியோர் பொது நலவாய நாடுகளின் மாநாட்டை புறக்கணித்துள்ளனர்.

அவுஸ்திரேலிய பிரதமர் டோனி அப்பேட் மற்றும் பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் ஆகியோர் மாநாட்டை புறக்கணிக்க போவதில்லை என அறிவித்ததுடன் மாநாட்டில் மனித உரிமை விவகாரத்தை முன்வைக்க போவதாக அறிவித்துள்ளனர்.

உள்நாட்டு போரில் மரணங்கள் இல்லாமல் உரிமைகளுடன் வன்முறை அச்சுறுத்தல் இல்லாமல் வாழ உரிமையுள்ளது என அவுஸ்திரேலிய பிரதமர் கூறியுள்ளார்.

இந்த நிலையில் இலங்கையின் மோதல்களின் இறுதிக்கட்டத்தில் மனித உரிமைகள் மீறப்பட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை பிரதமர் கமரூனுடன் விவாதிக்க தயாராக இருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். அத்துடன் நாட்டை பிரிவுப்படுத்த எவரையும் அனுமதிக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

(எ-11)

# இந்தியாவின்...

முடிவை தான் மதிப்பதாக தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெறும் மாநாட்டில் தாம் கலந்துக் கொள்வதன் மூலம் இலங்கையில் நடை பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் சமாதான நடவடிக்கைகளை குறித்து கருத்து தெரிவிக்க முடியும் என்றும் இதன் மூலம் சர்வதேச சமுதாயத்தின் கவனத்தை ஈர்க்க வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவித்தார்.

புதுடெல்லியில் இருந்து கொல்கத்தா சென்ற கமருன், அங்கு கல்லூரி மாணவர்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சியிலும் பங்கேற்றார்.

பின்னர் அகில இந்திய வானொலிக்கு பிரத்தியேக பேட்டி அளித்தபின், அவர் அங்கிருந்து கொழும்புக்கு வருகிறார். (எ-11)

# மரண அறிவித்தல்

## தம்பையா இராஜேந்திரன்

(ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர், கல்வி அமைச்சு, வடமாகாணம்)



சிவகிரி, வதிரி, கரவெட்டியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர் தம்பையா இராஜேந்திரன் நேற்றுமுன்தினம் புதன் கிழமை 13.11.2013 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான தம்பையா - தங்கமுத்து தம்பதிகளின் இளையமகனும் காலஞ்சென்ற பாலகிருஸ்ணன் பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் வத்சல்ஜன் (சுதன்) (றைடன் கோப்பிரேசன் யாழ்ப்பாணம்), அஞ்சனா (மக்கள் வங்கி, கந்தளாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 14-11-2013 அன்று மேற்படி முகவரியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று ஆலங்கட்டை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

021 226 3085

தகவல் : குடும்பத்தினர்

(சி-5473)

# உண்ணாவிர..

வலிகாமம் வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தியும் இராணுவத்தினரால் உயர்பாதுகாப்பு வலயம் என்று முடகம்பி வேலிபோடப்பட்டுள்ள பகுதியில் உள்ள பொதுமக்களின் வீடுகள் இடித்து அழிக்கப்படுவதை தடுத்து நிறுத்தக்கோரியும் கடந்த 12 ஆம் திகதி தொடக்கம் தொடர் உண்ணா விரதப்போராட்டத்தில் மக்கள் ஈடு பட்டு வருகின்றனர்.

இதில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபையின் முதலமைச்சர், அமைச்சர்கள், உறுப்பினர்கள் மற்றும் பிரதேச சபைகள் மற்றும் நகரசபை உறுப்பினர்களும் இந்த போராட்டத்தில் பங்கு கொண்டுள்ளனர்.

இதேவேளை இந்த உண்ணா விரதப்போராட்டம் இன்றுடன் முடிவிற்கு கொண்டுவரப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

மேலும் குறித்த உண்ணா விரதப் போராட்டத்திற்கு மக்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டிருந்த தனியார் ஒருவருக்கு சொந்த மான மினிபஸ் மீது பருத்தித் துறைப் பகுதியில் வைத்து நேற்றும் மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத நபர்களினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்தோடு இன்று உண்ணா விரதப் போராட்டத்திற்கு மக்களை ஏற்றியிறக் கூடாது என்று மினிபஸ் உரிமையாளர்கள் படைத்தரப்பினரால் அச்சுறுத்தப்பட்டதாக வலி வடக்கு பிரதேசசபையின் உப தவிசாளர் எஸ்.சஜீவன் தெரிவித்தார்.

இருப்பினும் எவ்வாறான அச்சுறுத்தல்கள் வரினும் உண்ணாவிரதப்போராட்டம் இன்றும் தொடர்ந்து இடம் பெறும எனவும் அவர் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)


## காணி விற்பனைக்கு

பல்கலைக்கழக முன்பக்க - ஆத்திசூடி வீதியில் 3 1/4 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :

077 750 2915

077 356 7641

(4487)

## கிளி/ கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்

(கிளிநொச்சி தேசிய பாடசாலை)

## தரம் 6 ற்கு மாணவர்களை அனுமதித்தல் - 2014

தமிழ், ஆங்கில மொழிமூல தரம் 6 வகுப்புக்களுக்கான அனுமதி வழங்கப்படுகின்றது.

விண்ணப்ப படிவங்களை பாடசாலை நேரத்தில் அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட பின் பாடசாலை அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

முடிவு திகதி: 06.12.2013

அலுவலக தொலைபேசி எண் : 021 228 5115

தகவல்:
அதிபர்

(சி-5472)

வடமாகாணத்தில் வெளிநாடுகளுக்கான கடிதங்கள், பொதிகள் சேவையில் முன்னோடிகளான நாம் இன்று எமது இணை நிறுவனத்தினை புதிய முகவரியில் ஆரம்பிக்கின்றோம்.

## ARRUL'S (Pvt) Ltd

வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவையில் 15 வருடங்களை கடந்து

- இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களைக் கொண்டு
- ஆகாய, கடல் மார்க்கமாக
- அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்
- வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவையை வழங்கிக்கொண்டிருக்கும் முன்னணி நிறுவனம்



15.11.2013 - 30.11.2013 விசேட கட்டணச்சலுகை

இல.10, புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.இல : 0212223536

இணை நிறுவனம் : ARRUL GLOBAL EXPRESS இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச்சந்தி, யாழ்ப்பாணம். தொ.இல : 0212226113

(C-5466)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.